# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 0100 வள்ளுவர் ஆண்டு: 2046 மாசி 22, வெள்ளிக்கிழமை 06.03.2015


வானிலை
மேக மூட்டமான வானிலை காணப்படும் இரவு. வேளையில் குளிரான காலநிலை காணப்படும்.

# இலங்கைக்கு எச்சரிக்கை

## தோல்வியில் முடிந்தவற்றை மீண்டும் கொண்டுவர முயற்சிக்கக் கூடாது:

### ஐ.நா. ஆணையாளர் கடும் தொனியில் தெரிவிப்பு



ஜெனிவா, மார்ச் 6
பாதிக்கப்பட்ட மக்களுடன் ஆலோசித்தே உள்ளக விசாரணைப் பொறிமுறை ஆரம்பிக்கப்பட வேண்டும். மாறாகக் கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட - தோல்வியில் முடிந்த - விசாரணைப் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்த முனையக் கூடாது - இவ் வாறு இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன். பக்.24

## இலவச 'வை-பை' விரைவில்!

கொழும்பு, மார்ச் 6
நாடு முழுவதும் ஆயிரத்துக்கும் அதிகமான இடங்களில் இலவச 'வை பை' (கம்பியில்லாத இணைய வசதி) இணைப்புக்களை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் தொலைத்தொடர்பாடல் பிரதியமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்துள்ளார். பக்.24

## வாக்குறுதியை இலங்கை நிறைவேற்றும் – அமெ.

நியூயோர்க், மார்ச் 6
இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் என்று அமெரிக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இலங்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.
இலங்கை அரசு மனித உரிமைகள் பேணல், குற்றச் செயல்களுக்குத் தண்டனை விதித்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் என்பவற்றுக்கு முக்கியம்அளிக்கும்என்று எதிர்பார்ப்பதாக அந்த நாடு குறிப்பிட்டுள்ளது.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அளித்த வாக்குறுதி கள் நிறைவேற்றப்பட வேண்டியது அவசியமானது என்றும் குறிப்பிட்டுள்ளது. பக்.24

## 35 ஆயிரம் பேர் கழிவு ஒயிலால் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்.மாவட்டத்தில் குடி நீருடன் கழிவு எண்ணெய் கலந்துள்ளது என்று சந்தேகிக்கப்பட்ட இடங்களில் 11 ஆயிரத்து 472 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 856 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.
யாழ்.மாவட்டத்தில் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்ட, கழிவு ஒயில் நிலத்தடி நீருடன் கலந்துள்ளது. அதனால் வலிகாமத்தின் பெரும்பாலான பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. ஒரு சில இடங்களில், குடிதண்ணீர் மாதிரிகள் எடுத்து சோதனை செய்யப்பட்டன. அவற்றில் கழிவு ஒயில் கலந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இதுவரை கழிவு ஒயில் கலப்பால், பக்.24

## சம்பந்தனும் மோடியும் 13இல் சந்தித்து பேசுவர்

### மறுநாள் வடக்கு சென்று விக்னேஸ்வரனுடன் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 6
உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு எதிர்வரும் 13ஆம் திகதி கொழும்பு வரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அன்றையதினம் இரவு இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முக்கிய பேச்சு நடத்தவுள்ளார்.
அதில் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினை மற்றும் இனப்பிரச்சினை ஆகியவற்றின் தீர்வுக்கான அழுத்தத்தை இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசுக்கு வழங்கவேண்டும் என மோடியிடம் பக்.24

## ஐ.நா. செப்ரெம்பர் அமர்வில் உள்ளக விசாரணை அறிக்கை

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 6
உள்ளக விசாரணையின்போது போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து பரவலாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் இலங்கை அரசு விசாரணைகளை மேற்கொள்ளும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். பக்.24

## சீனாவின் நம்பிக்கையை காப்பாற்ற வேண்டும் அரசு

### வலியுறுத்துகின்றது அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, மார்ச் 6
இலங்கையில் முதலீடு செய்துள்ள சீன நிறுவனங்களின் நம்பிக்கையைக் காப்பாற்ற இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது சீனா.
கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை இடைநிறுத்த அமைச்சரவை எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், ஹுவா சுன்யிங் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். பக்.24

## துறைமுக நகர் உடன் நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 6
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தரவுள்ள நிலையில், கொழும்பில் சீன அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வந்த துறைமுக நகரத் திட்டத்தை உடனடியாக இடைநிறுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று மாலை இடம்பெற்றது. இதன்போதே, அமைச்சரவைப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால், சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு, நேற்று முன்தினம் இரவு நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பக்.24


13 லட்சம் வெல்லுங்கள்
! விவரம் உள்ளே...


## எமக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் ரணில்

### வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 6
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது எங்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மறக்கக் கூடாது. வலி.வடக்கில் எஞ்சியுள்ள 5 ஆயிரத்து 500 ஏக்கரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்று வலியுறுத்தியுள்ளார் வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு சங்கத் தலைவர் அ.குணபாலசிங்கம்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார். பக்.24

## இன்று வரும் சுஷ்மாவுடன் தமிழ்க் கூட்டமைப்பு பேசும்



யாழ்ப்பாணம், மார்ச் 6
இன்று இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாளை சந்தித்துப் பேசவுள்ளது.
எதிர்வரும் 13ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வருகின்றார். அவருக்கு முன்னதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் இன்று இலங்கை வருகின்றார்.
சுஷ்மா வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதலாவது பயணம் இதுவாகும். கொழும்பு வரும் அவர் இன்று பக்.24

## சீன ஆதிக்கத்தை உடைப்பதே மோடி பயணத்தின் நோக்கம்

### இந்திய ஊடகம் கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 6
இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும், இந்தியப்பிரதமர் பொது [illegible] றும் பரந்தளவிலான இராணுவ உதவிகளையும் வழங்கவுள்ளார் என்று இந்திய அதிகாரிகளை மேற்கோள்காட்டி பி.ரி.ஐ. பக்.24

## மோடியின் பயணத்துக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 6
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு தமிழகத்தில் எதிர்ப்புக்கள் கிளம்பத் தொடங்கியுள்ளன. இந்தியப் பிரதமர் உடனடியாக தனது இலங்கைப் பயணத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் | வெள்ளிக்கிழமை | மார்ச் 06 | 2015



## தலைக்கவசமின்றி வேகமான பயணம் மின்கம்பத்துடன் மோதி ஒருவர் சாவு

நள்ளிரவில் பாண் வாங்கச் சென்றபோது பரிதாபச் சம்பவம்



யாழ்ப்பாணம், மார்ச் 6

நள்ளிரவில் பாண் வேண்டுவதற்காக தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் சென்றவர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன் பயணித்த தலைக்கவசம் அணியாத மற்றையவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

நவக்கிரி ராசவீதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ஆவரங்கால் மேற்கு சர்வோதயா வீதியைச் சேர்ந்த கிஸ்ணபிள்ளை செல்வக்குமார் (வயது 31) என்பவரே உயிரிழந்தார். அதே இடத்தைச் சேர்ந்த யோ.விஜிதரன் (வயது 26) என்பவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

செல்வக்குமார் உடனடியாக அச்சுவேலி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. காயமடைந்தவர் உடனடியாக போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

உயிரிழந்தவரது உடல் யாழ். போதனா வைத்தியசாலைக் குக் கொண்டு செல்லப்பட்டு, திடீர் இறப்புவிசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

நேற்றுமுன்தினம் இரவு பிறந்த நாள் கொண்டாட்டம் ஒன்று நடந்தது என்றும், நள்ளிரவு பாண் வாங்குவதற்காக நிலாவரைச் சந்தியில் உள்ள பேக்கரிக்குச் செல்லும்போதே விபத்து இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

# கீரிமலையில் அமைவது ஜனாதிபதி மாளிகையல்ல

## மஹிந்த கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 6

கீரிமலையில் அமைக்கப்பட்ட ஆடம்பர மாளிகை எனக்காக அமைக்கப்பட்டது அல்ல. சர்வதேச தொடர்பு மத்திய நிலையமே அது – என்று தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கடந்த செவ்வாய்க்கிழமை, யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால, கீரிமலையில் அமைக்கப்பட்டு வரும் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று பார்வையிட்டார். மிக ஆடம்பரமாக அமைக்கப்பட்டு வரும் அந்த மாளிகையை முழுவதும் பார்வையிடாமல் வெறுப்பில், அரைவாசியிலேயே வெளியேறியிருந்தார்.

குறித்த மாளிகை முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவால் அமைக்கப்பட்டது என்பதுடன், 200 கோடி ரூபா நிதியில் வேலைகள் இதுவரை முன்னெடுக்கப்பட்டிருந்தன. குறித்த நிதி ஒழுங்கு முறையாக ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இது தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்தது. இது தொடர்பிலேயே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த பதிலளித்துள்ளார்.

கீரிமலையில் எந்த ஜனாதிபதி மாளிகையும் கட்டப்படவில்லை. 1980 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாண கோட்டையில் ஜனாதிபதி மாளிகை ஒன்று இருந்தது. அதனை தமிழீழ விடுதலைப் புலிகள் அழித்தனர். இதனை நினைவுப்படுத்த விரும்புகின்றேன். அங்கிருந்த மாளிகை இதுவரை மீள நிர்மாணிக்கப்படவில்லை.



கீரிமலையில் நிர்மாணிக்கப்படுவது ஜனாதிபதி செயலகத்தின் கீழ் வரும் சர்வதேச மாநாட்டு மத்திய நிலையம். கடற்படையினரே அந்த கட்டடத்தின் நிர்மாணப் பணிகளுக்கு பொறுப்பாக இருந்தனர். பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம், இலங்கை மன்றக் கல்லூரி, தாமரை தடாகம் ஆகியன மாநாட்டு மத்திய நிலையங்கள் ஜனா திபதி செயலகத்தின் பொறுப்பின் கீழ் உள்ளன.– என்று அவர் தெரிவித்துள்ளார்

இதேபோன்ற கட்டடங்களே கீரிமலை மற்றும் அருகம்பை பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் நடைபெறும் சர்வதேச மாநாடுகளின் போது வடக்கு – கிழக்குக்கு பயணம் மேற்கொள்ளும் வெளிநாட்டு தலைவர்கள் மற்றும் ஏனைய உள்நாட்டு வெளிநாட்டு அதிதிகளின் பயன்பாட்டுக்காக இவை கட்டப்படுகின்றன.

இந்த மத்திய நிலையங்களை நிர்மாணிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## சிறப்புற நடந்த தமிழ்விழா



யாழ்ப்பாணம், மார்ச் 6

கிளிநொச்சி மாவட்ட தமிழ் சங்கத்தால் நடத்தப்பட்ட தமிழ் விழாவும் 12ஆவது திருக்குறள் மாநாடும் நேற்று இரண்டாவது நாளாக கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

அதில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், தமிழர் வாழ்வில் தமிழ் எனும் மறுபதிப்பு செய்யப்பட நூல் வெளியீடு, தமிழ் சங்கத்தினரால் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கல், திருக்குறளோதி-திருமணம் புரிந்த உதயபாபு–அபிராமி தம்பதியர் கௌரவிப்பு, இன்னும் பல கௌரவிப்புகள் எனப் பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

விழாவில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, கத்தோலிக்க மத முதல்வர்கள். தமிழ் ஆர்வலர்கள், மாணவர்கள், கிளிநொச்சி தமிழ் சங்கத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-21)

## 12 பீப்பாய் கசிப்பு மீட்பு

### தருமபுரம் பொலிஸார் அதிரடி

யாழ்ப்பாணம், மார்ச் 3

தர்மபுரம் கட்டைக்காட்டுப் பகுதியில் 12 பீப்பாக்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்காக வேறு இடங்களுக்கு கொண்டு செல்லத் தயார் நிலையில் இருந்த ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய கசிப்பு நேற்று தர்மபுரம் பொலிஸாரின் அதிரடி தேடுதல் நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எட்மன் மகேந்திரனின் ஆலோசனைப்படி தர்மபுரம் பகுதியில் உள்ள கசிப்பு விற்பனையாகும் இடங்கள், உற்பத்தி செய்யப்படும் இடங்களை தேடி பிடிக்கும் நடவடிக்கைளை முன்னெடுத்த தர்மபுரம்பொலிஸ்நிலைய உபபொலிஸ் பரிசோதகர் எம்.எம்.டி.என் சதுரங்க தலைமையிலான 5 பேர் கொண்ட பொலிஸ் குழுவே இதனைக் கைப்பற்றியுள்ளது.



பொலிஸாரின் இந்த நடவடிக்கையை முற்கூட்டியே அறிந்த குற்றவாளிகள் தப்பித்துச் சென்றுள்ளனர் என்றும், அவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் தர்மபுர பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் சதுரங்க தெரிவித்தார். (ற-21)

# இருநாட்டு மீனவர் பேச்சில் சாதக முடிவுகள் எட்டப்பட வேண்டும்

## தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடகிழக்கு மாகாண இணைப்பாளர் வலியுறுத்து

மன்னார்,மார்ச் 6

இந்திய – இலங்கை மீனவர்களுக்கிடையிலான நான்காம் கட்டப் பேச்சில் வடக்கு மீனவர்களுக்கு சாதகமான முடிவுகள் எட்டப்பட வேண்டும். மீனவர்களின் முக்கிய பிரதிநிதிகளை பேச்சுக்கு அழைத்துச் செல்ல இலங்கை அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். – இவ்வாறு தெரிவித்தார் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடகிழக்கு மாகாண இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாஸ்.

வடக்கில்தடைசெய்யப்பட்டதொழில் முறைகளை உடன் நிறுத்தி மாற்றுத் தொழில் முறைகளை மேற்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி சென்னையில் இலங்கை – இந்திய மீனவர்களுக்கிடையே பேச்சு நடைபெறவுள்ளது. முன்னரைப்போன்று இல்லாது இம்முறை பேச்சில் சரி சுமூகமான முடிவு எட்டப்பட வேண்டும். குறிப்பாக வடக்கு மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இதற்கு மீனவக் கூட்டுறவுச் சங்கங்களில் அனுபவம் உடைய மீனவர் சமூகத்தினர் உள்ளனர். அவர்களைப் பேச்சுக்கு அழைத்து சென்றால் பிரச்சினைகளை வெளிக்கொணர முடியும்.– என்று அவர் குறிப்பிட்டார்.

கூட்டுறவுச் சங்கம் சாராத மீனவர் பிரதிநிதிகளை அழைத்துச் சென்றால் இந்தப் பேச்சு இழுபறி நிலையிலேயே முடியும். அரசு திட்டமிட்டு செயற்பட வேண்டும். இலங்கைக்கு வருகை தரும் பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பின் போது இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். அதனை விட வடக்கு மீனவர்கள் தென்னிலங்கை மீனவர்களின் வருகையாலும், தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளாலும் பெரிதும் பாதிப்புற்றுள்ளனர். அதுகுறித்தும் இலங்கை அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.– என்றும் அவர் வலியுறுத்தினார்.

அத்துடன் காணாமல் போனவர்கள், அரசியல் கைதிகள் தொடர்பான பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து இலங்கை அரசு பொறுப்புடன் செயற்பட வேண்டும்– என்றும் அவர் கோரினார்.



அங்கு கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன்,

இந்திய மீனவர்களின் வருகையை ஏற்றுக்கொள்ள முடியாது. கட்டாயம் அதனை நிறுத்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். முன்னர் அறிவிக்கப்பட்டதைப் போன்று வடக்கில் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை மேற்கொள்ளும் மீனவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். விரைவில் இது தொடர்பில் கொழும்பு அரசுடன் பேசி தீர்வைப் பெற்றுத் தருகின்றேன்.– என்று தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மீனவர் சங்கப் பிரதிநிதிகளால் வடக்கில் தடை செய்யப்பட்ட மீன்பிடி தொழில்கள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இந்திய இழுவைப் படகுகளின் அத்து மீறிய வருகையை தடுப்பதற்கான வழி முறைகளை ஆராய்தல், உள்ளூரில் எமது மீனவர்களால் முன்னெடுக்கப்படும் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை நிறுத்துதல், அதற்கான மாற்றுதிட்டங்கள் தயாரித்தல், தென்னிலங்கை மீனவர்களின் மிதமிஞ்சிய வருகையை மட்டுப்படுத்துதல் வடக்கு மாகாண மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான வழி முறைகளை கண்டறிதல், மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்தல் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

வடமாகாண கடற்தொழிலாளர் இணைத்தின் தலைவர் என்.எம். ஆலம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர் சோதிக்குரூஸ், வடமாகாண கடற்றொழிலாளர் இணைத்தின் யாழ்.மாவட்ட செயலாளர் என்.வி.சுப்பிரமணியம், வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ஜோசப் பிரான்சிஸ் மற்றும் மன்னார் மாவட்டத்தில் உள்ள கடற்றொழில் அமைப்புக்களின் பிரதி நிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (ற-14,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CIVIL ENGINEERING | ☎ 0777 692318

பக்க அனுசரணை BCAS CAMPUS JAFFNA




13 லட்சங்கள் WOW! கூப்பன்களை இன்றே நிரப்பி அனுப்புங்கள், பணத்தை அள்ளுங்கள்

கிரிக்கெட் கொண்டாட்டம்

2015 | மார்ச் 06 | வெள்ளிக்கிழமை

# வாய்ப்பை தக்க வைத்த வங்கப் புலிகள்



காலிறுதிக்கான நெருக்குவாரம். கணக்கைத் தொடங்க காத்திருந்த ஸ்கொட்லாந்துக்கு நேற்று ஏமாற்றம். வங்கப் புலிகள் 6 இலக்குகளால் வெற்றியைப் பெற்று காலிறுதிக்கான வாய்ப்பை இன்னமும் தக்க வைத்துக் கொண்டனர்.

பங்களாதேஷ் ஸ்கொட்லாந்தை தோற்கடித்தால் காலிறுதிக்கான வாய்ப்பு இங்கிலாந்தை விட அதிகமாக இருக்கும். இதனால் எப்படியாவது ஸ்கொட்லாந்தை வீழ்த்திவிட வேண்டும் என்ற எண்ணம் பங்களாதேஷுக்கு. உலகக் கிண்ணத்தொடரில் இதுவரை சந்தித்த எந்தவொரு ஆட்டத்திலும்வென்றதில்லை. ஆப்கானுடனும் தோற்றாயிற்று. வெளியேறுவது உறுதி. ஆனாலும் குறைந்தது ஒரு ஆட்டத்திலாவது வெல்ல வேண்டும் என்ற தர்ம சங்கடத்தில் ஸ்கொட்லாந்து.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

ஸ்கொட்லாந்தை சுருட்டிவிட வியூகம். பங்களாதேஷுக்கு அடங்கிபோகும் விதமாகவே மக்லிகோட் 11 ஓட்டங்களுடன் விடைபெற்றார். மறுமுனையில் கோட்சர் நங்கூரம் போட்டிருந்தார்.

ஆனால் கோட்சருக்கு உதவிக்கரம் நீட்ட எவரும் தயாராக இல்லை. கார்டினரும் பவிலியனை நோக்கி வந்தார் மக்கான் சுப்பர் ஆட்டம் என்று இல்லாவிட்டாலும் சுமாரான ஆட்டம். அணியின் ஓட்டம் 100 இனை இலகுவாக எட்டியது. மக்கான் விடைபெற்றதும் மத்திய வீரர்கள் சுமாரான ஒத்துழைப்பு,அடித்து நொருக்கிக்கொண்டிருந்த கோட்சருக்கு கிடைத்தது. எங்களுக்கும் அதிரடித் தாண்டவம் தெரியும் என்று நேற்று ஒரு காட்டுக்காட்டினார்.

103 பந்துகளில் 100 ஓட்டங்களை எட்டிப்பிடித்தார் கோட்சர். சதம் கடந்ததும் அதிரடி இரட்டிப்பானது அனுபவ வீரர்களின் ஆட்டத்தை அப்படியே பிடித்துக் கொண்

பக்கம் 04

## சிகும்புரா பங்கேற்கார்

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில், பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில், களத்தடுப்பின் போது சிம்பாப்வே அணித் தலைவர் சிகும்புரா காயமடைந்தார். அவருக்கு இடது காலில் தசைநாரில் லேசான கிழிவு ஏற்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இதனால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை, அயர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் சிகும்புரா ஆடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்திற்குள் (மார்ச் 14 ஆம் திகதி) சிகும்புரா குணமடைந்துவிடுவார் என்று நம்புவதாக அந்த அணியின் மேலாளர் கிறிஸ்டியன் சிகெட்டா தெரிவித்தார். (5–ரி)

## 25 அணிகள் வேண்டும்

அடுத்த உலகக் கிண்ண போட்டித்தொடரில் குறைந்தபட்சம் 25 அணிகள் பங்கேற்க வேண்டும் என்று சச்சின் டெண்டுல்கர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

பக்கம் 04

## இமாலய வெற்றி

▸▸ ஆஸ்திரேலிய அணி 275 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆப்கான் அணியை வெற்றி கொண்டது. உலகக் கிண்ண வரலாற்றில் மிகப் பெரிய வெற்றியாக இது அமைந்தது. முன்னதாக இந்திய அணி 2007

பக்கம் 04

# இலங்கைக்கு துன்பத்தின் மேல் துன்பம்

**நான்காவது வீரரும் காயத்தால் வெளியேற்றம்**



நடப்பு உலகக் கிண்ணத் தொடரில், காயம் காரணமாக இலங்கை அணியின் 4 ஆவது வீரரும் நாடு திரும்பியுள்ளார்.

திமுத் கருணாரத்ன, பயிற்சியின் போது கையில் ஏற்பட்ட விரல் முறிவினால் நாடு திரும்பியுள்ளார்.

உலகக்கிண்ணத்துக்காக அறிவிக்கப்பட்ட இலங்கை அணியிலிருந்து 4 பேர் காயங்களால் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் தம்மிக்க பிரசாத், சகலதுறை வீரர் ஜீவன் மென்டிஸ், சுழற் பந்து வீச்சாளர் ஹேரத் ஆகியோர் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்தனர். தற்போது திமுத் கருணாரத்னவும் பாதிக்கப்பட்டுள்ளார். ஜீவன் மென்டிஸுக்குப் பதிலாக, துடுப்பாட்ட வீரர் உபுல் தரங்க அணியில் உள்வாங்கப்பட்டுள்ளார். ஹேரத் காயம்

பக்கம் 04

# ஊடகவியலாளருடன் கொக்கரித்த ஹோக்லி

இந்திய அணியின் துணை அணித் தலைவர் ஹோக்லி, ஊடகவியலாளர் ஒருவரை தகாத வார்த்தைகளால் திட்டிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா– மேற்கிந்திய தீவுகள் அணி கள் இடையிலான லீக் ஆட்டம் பேர்த்தில் இன்று வெள்ளிக்கிழமை நடக்கிறது. இதற்காக இந்திய வீரர்கள் பேர்த் தில் பயிற்சியில் ஈடுபட்டனர். வலைப் பயிற்சியை முடித்துவிட்டு தனது அறைக்கு ஹோக்லி திரும்பிக் கொண்டிருந்த போது, அங்கு நின்று கொண்டிருந்த இந்திய தேசிய நாளிதழின் ஊடகவிய லாளர் ஒருவரை பார்த்து கண்டபடி தகாத வார்த்தைகளால் திட்டி தீர்த்தார்.

பின்னர் கோபமாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். இந்திய அணியினர் எவரும் இதை எதிர்பார்க்காததால் என்ன நடந்ததெனப் புரியாமல் அனைவரும் அதிர்ச்சியில் உறைந் தனர். இதனால் அந்த இடத்தில் திடீர் பரபரப்பு உண்டானது. சம்பந்தப்பட்ட ஊடகவியலாளருக்கும் ஹோக்லி ஏன் திட்டினார் எனத் தெரியவில்லை.

தேசிய நாளிதழில் ஹோக்லி மற்றும் அவரது காதலியும், ஹிந்தி நடிகையுமான அனுஷ்கா சர்மா குறித்து வெளி யான செய்திக்கு சம்பந்தப் பட்ட ஊடகவியலாளர் தான் காரணம்என்றுகருதிஹோக்லி பொது இடத்தில் பொறுமை இழந்து இவ்வாறு நடந்து கொண்டது தெரியவந்தது.

ஆனால் அந்த செய்திக்கும் குறிப்பிட்ட ஊடகவியலாளருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பது பின்னர் தெரிந்ததும் ஹோக்லி வருத்தம் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து, அணி

பக்கம் 04

# கெய்லுக்கு வியூகம் வைத்திருக்கின்றோம்

மேற்கிந்திய தீவுகள் அணி யின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்லின் மிரட்டலை சமாளிக்க இந்திய அணித்தலை வர் டோனி புதிய வியூகம் வகுத்துள்ளார். உலகக்கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்காவின் வில்லி யர்ஸ், மேற்கிந்திய தீவு களின் கிறிஸ் கெய்ல் போன்ற அதிரடி ஆட்டக்காரர்களின் ஆதிக்கம் அதிகமாக காணப் படுகிறது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான் ஆட்டத்தில் வில்லியர்ஸ் 'ரன் அவுட்' முறையில் வெளியேற்றப்பட்டதால் இந்தியா தப்பியது.

இந்த நிலையில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணியை, கிறிஸ் கெய்ல் புயல் தாக்காமல் இருக்க டோனி தலைமையிலான இந்திய அணி புதிய வியூகங்களை வகுத்து வருகிறது. இது தொடர்பாக இந்திய அணித்தலைவர் டோனி கூறுகையில்,

கிறிஸ் கெய்ல், வில்லியர்ஸ் போன்ற அதிரடி ஆட்டக்காரர்களைக் கட்டுப்படுத்து வதற்கு சிறந்த திட்டம் என்ன வென்றால், எதுவும் திட்டமிடாமல்

பக்கம் 04

## Picture of The Day



பங்களாதேஷ் - ஸ்கொட்லாந்து நேற்றைய ஆட்டத்தின்போது அனைவரினதும் கவனத்தை ஈர்த்த சிறுவனின் உற்சாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குழு A | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 4 | 0 | 0 | 8 |
| இலங்கை | 3 | 1 | 0 | 6 |
| ஆஸ்திரேலியா | 2 | 1 | 1 | 5 |
| பங்களாதேஷ் | 2 | 1 | 1 | 5 |
| இங்கிலாந்து | 1 | 3 | 0 | 2 |
| ஆப்கானிஸ்தான் | 1 | 3 | 0 | 2 |
| ஸ்கொட்லாந்து | 0 | 4 | 0 | 0 |

| குழு B | வெ | தோ | ச.நி | புள் |
|---|---|---|---|---|
| இந்தியா | 3 | 0 | 0 | 6 |
| தென்னாபிரிக்கா | 3 | 1 | 0 | 6 |
| மே.இ.தீவுகள் | 2 | 2 | 0 | 4 |
| பாகிஸ்தான் | 2 | 2 | 0 | 4 |
| அயர்லாந்து | 2 | 1 | 0 | 4 |
| சிம்பாப்வே | 1 | 3 | 0 | 2 |
| ஐ.அ.இராச்சியம் | 0 | 4 | 0 | 0 |

# வாய்ப்பை தக்க வைத்த வங்கப் புலிகள்

டார் கோட்சர். அவ்வப்போது ஸ்கொட்லாந்தின் இலக்குகள் சில சரியத்தான் செய்தது. அனைத்து சரிவுகளையும் தனிமனிதனாக சரிசெய்தார் கோட்சர். தனி மனிதனாக கத்துக்குட்டியை கலக்கல் குட்டியாக்கினார். 50 பந்துப்பரிமாற்றங்கள் ஸ்கொட்லாந்து 318–8. கோட்சர் 156.

கடின இலக்கு. ஸ்கொட்லாந்து தானே, வீழ்த்தலாம் என்ற நம்பிக்கையில் களம் புகுந்தது பங்களாதேஷ். வந்தவர்களுக்கு, ஸ்கொட்லாந்து கொடுத்தது அதிர்ச்சி. சர்கர் 2 ஓட்டங்களுடன் விடைபெற்றார். பங்களாதேஷ் 05 ஓட்டங்களுக்கு 1 இலக்கு.


இக்பாலுடன் மகமதுல்லா இணைந்தார். அதிரடி ஆரம்பம். இடையிடையே வானவேடிக்கைகளும் தவறாமல் இடம்பெற்றன. அணியின் ஓட்டம் கிடுகிடு வேகத்தில். மகமதுல்லா அரைச்சதம் கடந்தும் ஆட முனைந்த போது வெளியேறினார்.

களத்தில் வங்கத்தின் சிறுவன் என்று வர்ணிக்கப்படும் ரஹிம். தமீம் இக்பாலை விட அதிரடி காட்டினார்.

31 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் அணி 200 ஓட்டங்களை எட்டிப்பிடித்தது. அதேநேரம் தமீமும் 95 ஓட்டங்களுடன் டேவியின் வேகத்தில் சிக்கினார். ஆட்டம் எந்தப்பக்கம் சாயும் என்பதனை எவராலும் கணிக்க முடியாத நிலைமை. சிறிது நேரத்தில் ரஹிமும் விடைபெற்றார்.

நிலைமையை உணர்ந்து பொறுப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தினர் சகிப் அல் ஹசன் – ரஹ்மான். ரஹ்மான் சிக்ஸர்களில் வேடிக்கை காட்டினார். ரஹ்மான் அடித்த ஒரு சிக்சர் மைதானத்தின் தானியங்கி இயந்திரத்தில் பட்டு தெறித்தது. சிக்சரின் தூரம் 97 மீற்றராக பதியப்பட்டது.

247 ஓட்டங்களில் நான்காவது இலக்கு வீழ்த்தப்பட்ட பின்னர் இறுதிவரை ஸ்கொட்லாந்தால் இவர்களை பிரிக்க முடியவில்லை. களத்தில் நின்று 48.1 பந்துப் பரிமாற்றத்தில் ஆட்டத்தை பங்களாதேஷின் பக்கம் மாற்றி எழுதினார்கள். வங்கப்புலிகளிடம் அடிபட்டு தொடரை விட்டு வெளியேறும் நிலைமைக்கு சென்றது ஸ்கொட்லாந்து. (5–ரி)



நேற்றைய ஆட்டத்தில் ஸ்கொட்லாந்து தோல்வியடைந்த போதிலும் அந்த அணி சார்பாக 156 ஓட்டங்களை விளாசி ஆட்ட நாயகனாக தெரிவுசெய்யப்பட்ட கோட்சர்.

## 2015 உலகக் கிண்ணம்

பங்களாதேஷ் எதிர் ஸ்கொட்லாந்து
06 இலக்குகளால் பங்களாதேஷ் வெற்றி

நாணயச் சுழற்சி பங்களாதேஷ்

ஸ்கொட்லாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கோட்சர் | C சர்கர் B ஹொசைன் | 156 | 134 | 17 | 04 |
| மக்லிகொட் | C முகமதுல்லா B மோர்ரஷா | 1 | 1 | 02 | 0 |
| ஹார்டினர் | C சர்கர் B அகமட் | 19 | 32 | 03 | 0 |
| மங்கான | C & B ரஹ்மான் | 35 | 50 | 02 | 0 |
| மொம்ஷன் | C சர்கர் B ஹொசைன் | 39 | 38 | 02 | 01 |
| பெரிங்டன் | C ரஹிம் B அகமட் | 26 | 16 | 01 | 02 |
| குரொஸ் | C ரஹ்மான் B அகமட் | 20 | 14 | 01 | 01 |
| டேவி | ஆட்டமிழப்பில்லை | 04 | 03 | 0 | 0 |
| ஹக் | C சர்கர் B ஹுசைன் | 01 | 03 | 0 | 0 |
| இவன்ஸ் | ஆட்டமிழப்பில்லை | 0 | 0 | 0 | 0 |
| உதிரிகள் | | 07 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மோர்ரஷா | 08 | 60 | 01 | 0 |
| ஹுசைன் | 10 | 46 | 01 | 0 |
| அகமட் | 07 | 43 | 03 | 0 |
| ரூ.ஹொசைன் | 08 | 80 | 0 | 0 |
| முகமதுல்லா | 05 | 29 | 0 | 0 |
| ரஹ்மான் | 07 | 47 | 01 | 0 |
| ஹொசைன் | 05 | 32 | 02 | 0 |

TOTAL 318/8 (50)

1- 13 (மக்லிகொட்)
2- 38 (ஹார்டினர்)
3- 116 (மங்கான)
4 - 257 (மொம்ஷன்)
5 - 269 (கோட்சர்)
6 - 308 (பெரிங்டன்)
7 - 312 (குரொஸ்)
8 - 315 (ஹக்)

பங்களாதேஷ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ரமீம் | LBW B டேவி | 95 | 100 | 09 | 01 |
| சர்கர் | C குரொஸ் B டேவி | 02 | 05 | 0 | 0 |
| முகமதுல்லா | B வாட்லோ | 62 | 62 | 06 | 01 |
| ரஹீம் | C மக்லிகொட் B இவன்ஸ் | 60 | 42 | 06 | 02 |
| ஹசன் | ஆட்டமிழப்பில்லை | 52 | 41 | 05 | 01 |
| ரஹ்மான் | ஆட்டமிழப்பில்லை | 42 | 40 | 04 | 02 |
| உதிரிகள் | | 09 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| வாட்லோ | 9.1 | 75 | 01 | 0 |
| டேவி | 10 | 68 | 02 | 0 |
| இவன்ஸ் | 10 | 67 | 01 | 01 |
| மங்கான | 07 | 45 | 0 | 0 |
| ஹக் | 10 | 49 | 0 | 0 |
| பெரிங்டன் | 02 | 18 | 0 | 0 |

TOTAL 322/4 (48.1)

1- 05 (சர்கர்)
2 - 144 (முகமதுல்லா)
3 - 201 (இக்பால்)
4 - 247 (ரஹீம்)

ஆட்ட நாயகன் கோட்சர்

## அதிகூடிய இலக்குகள்



| | |
|---|---|
| 13 | சவுத்தி (நியூஸிலாந்து) 4 ஆட்டங்கள் |
| 11 | டேவி (ஸ்கொட்லாந்து) 4 ஆட்டங்கள் |
| 10 | ஸ்ரார்க் (ஆவுஸ்திரேலியா) 3 ஆட்டங்கள் |
| 10 | போல்ட் (நியூஸிலாந்து) 4 ஆட்டங்கள் |
| 9 | மோர்கல் (தெ.ஆபிரிக்கா) 4 ஆட்டங்கள் |

## அதிகூடிய ஓட்டங்கள்



| | |
|---|---|
| 270 | அன்வர் (ஐ.அ.இராச்சியம்) 4 ஆட்டங்கள் |
| 268 | சங்ககார (இலங்கை) 4 ஆட்டங்கள் |
| 258 | கெயில் (மே.இ.தீவுகள்) 4 ஆட்டங்கள் |
| 257 | அம்லா (தெ.ஆபிரிக்கா) 4 ஆட்டங்கள் |
| 256 | திரிமன்னே (இலங்கை) 4 ஆட்டங்கள் |

## ஹோக்லிக்கு எதிராக முறைப்பாடு

இந்திய கிரிக்கெட் அணியின் உபதலைவர் விராத் ஹோக்லி, ஊடகவியலாள ரைத் திட்டித் தீர்த்தமை தொடர்பில், ஐ.சி.சியிடமும், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையிடமும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஹோக்லி பொது இடத்தில் ஊடகவியலாளரிடம் அநாகரிகமாக நடந்துகொண்ட விதம் குறித்து அந்த பத்திரிகை சார்பில் இந்திய கிரிக்கெட் சபை மற்றும் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஹோக்லி விவகாரம் குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் புதிய செயலாளர் அனு ராக் தாகூர் கருத்து தெரிவிக்கையில்,

இந்தப் பிரச்சினை குறித்து ஹோக்லி விளக்கம் வழங்கி விட்டார். உலகக் கிண்ணத் தொடர் இந்திய அணிக்கு முக்கியமான தாகும்.

தவறான புரிந்து கொள்ளுதலால் நடந்த இந்தச் சம்ப வத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு உலகக் கிண் ணத்தில் இந்திய அணி கவனம் செலுத்துவது அவசியமானதாகும். எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்களை தவிர்க்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும், என்றார்.

இதேவேளை ஹோக்லி ஊடகவியலாளரைத் தகாத வார்த்தைகளால் திட்டவில்லை, என்று இந்திய அணி நிர்வாகம் மறுத்துள்ளது. (5–ரி)

## கொக்கரித்த ஹோக்லி

யின் மேலாளர் ரவி சாஸ்திரி, ஹோக்லியை அழைத்து, பொது இடத்தில் அமைதியை கடைபிடிக்க வேண்டும் என்றும், இல்லையென்றால் எதிர் காலத்தில், இந்திய அணியின் அணித் தலைவராக உருவாவதை இத்தகைய செயல்கள் பாதிக்கும் எனவும் அறிவுரை கூறியுள்ளார். (5–ரி)

## 25 அணிகள் வேண்டும்

இது குறித்து சிட்னியில் அவர் கூறியதாவது, 2019 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் விளையாடும் அணிகளின் எண்ணிக்கையை 10 ஆகக் குறைக்க சர்வதேச கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை முடிவு செய் துள்ளதாகத் தெரிகிறது.

இது பிற்போக்கான முடிவு. மிகுந்த ஏமாற்றமளிக்கிறது. கிரிக்கெட் விளையாட்டை உலக அளவில் பிரபலப்படுத்த இந்த நடவடிக்கை உதவாது. குறைந்தபட்சம் 25 அணிகளாவது பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டும். டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணிகள், மற்ற உறுப்பினர் அணிகளுடன் அதிக ஆட்டங் களில் விளையாடுவதன் மூல மாக அந்த அணிகளின் தரத்தை அதிகரிக்க உதவலாம் – என் றார். (5–ரி)

## குடிகாரர்களுடன் மல்லுக்கட்டிய சச்சின்

இந்தியா, தென்னாபிரிக்க அணிகள் மோதிய ஆட்டத்தைப் பார்க்க மெல்போர்ன் மைதானத்திற்கு சென்ற சச்சினுக்கு தர்மசங்கடமான நிலை ஏற்பட்டது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி இந்திய, தென்னாபிரிக்க அணிகள் மோதின. இந்த ஆட்டத்தைப் பார்ப்பதற்காக சச்சின் பார்வையாளராக அங்கு சென்றிருந்தார். அவருக்கு வி.ஐ.பி இருக்கைகள் ஒதுக் கப்பட்டிருந்தது. ஆனால் வி.ஐ.பி.,க்கள் அமரும் இரண்டாவது தளத்தில் குடிபோதையில் சிலர் இருந்திருக்கின்றனர். இவர்களை எழுப்ப சிரமப்பட்ட சச்சின் பின்னர் வேறு தளத்திற்கு சென்று ஆட்டத்தை ரசித்துள்ளார். (5–ரி)

## இலங்கைக்கு துன்பத்தின் மேல் துன்பம்

காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்குப் பதிலாக, சீக்குகே பிரசன்னவை ஆஸ்திரேலியாவுக்குஅழைப்பதற்குஇலங்கை அணி திட்டமிட்டிருந்தது.

தற்போது திமுத் கருணாரத்ன நாடு திரும்பியுள்ளதால், சீக்குகே பிரசன்னவை பதி னைந்து பேர் கொண்ட அணியில் இணைப்பதற்கு இலங்கை, ஐ.சி.சியிடம் அனுமதி கோரியுள்ளது. (5–ரி)

## கெய்லுக்கு வியூகம் வைத்திருக்கின்றோம்

இருப்பதே நல்லது. இவர்கள் போர் முக்கு வந்து சிக்சர்களை நொறுக்கத் தொடங்கி விட்டால், அதன் பிறகு ஒன்றும் செய்ய முடியாது.

ஷேஜுட் பிட்ச்சாக பந்து வீசி அச்சுறுத்தலாம். ஆனால் அதுவும் அடித்து விளாசப்பட்டால் அவ்வளவு தான். இப்படிப்பட்ட அதிரடி ஆட்டக்காரர்களை கொஞ்சம் ஏமாற்றி பார்க்கலாம். பந்து வீச்சாளர்கள் ஒரு சில வித்தியாசமான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

மற்றபடி இதை செய்தால் இப்படி நடக்கும் என்று திட்டமிட்டு அவர்களுக்கு எதிராக செய்ய முடியாது என்று கூறியுள்ளார். (5–ரி)

## இமாலய வெற்றி

ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் பெர்முடா அணியை 257 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியதே சாத னையாக இருந்தது.

நடப்பு தொடரில் தென்னாபிரிக்க அணியும் 257 ஓட்டங்கள் வித்தியா சத்தில்மேற்கிந்தியத்தீவுகள் அணியை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

- ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் நியூசிலாந்து அணி 290 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்தை வென்றதே அதிகபட்சமாகும் (2008 ஆம் ஆண்டு).
- வோர்ணர் விளாசிய 178 ஓட்டங்கள், உலகக் கிண்ணத்தில் ஆஸி. வீரரின் 3 ஆவது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும். வொட் சன் 185 ஓட்டங்கள் (2011 ஆம் ஆண்டு, பங்களாதேஷுக்கு எதிராக, 96 பந்தில்), மத்யூ ஹைடன் 181 ஓட்டங்கள் (நியூஸிக்கு எதி ராக, 2007 ஆம் ஆண்டு) விளாசி முன்னிலை வகிக்கின்றனர்.
- கிளென் மக்ஸ்வெல் 21 பந்து களில் அரைச் சதம் அடித்தது, உலகக் கிண்ணத்தில் 3 ஆவது அதிவேக அரைசத மாக அமைந்தது. நியூஸிலாந்து அணித் தலைவர் பிரண்டன் மக்கல்லம் 18 பந்துகளில் 50 ஓட்டங்கள் விளாசி முதலிடத்தில் உள்ளார் (இங்கிலாந்துக்கு எதிராக). (5–ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு இன்று வாய்ப்பு?

இந்தியா – மேற்கிந்தியத்தீவுகள் அணிகள், உலகக் கிண்ணத் தொடரில் இன்று மோதுகின்றன. இந்த ஆட்டம் தொடர்பில், இந்தியாவின் முன்னாள் அணித் தலைவர் கங்குலி, இந்திய ஊடகம் ஒன்றில் எழுதிய விமர்சனம்.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான லீக் ஆட்டம் இந்திய அணிக்கு முக்கியமானது. அதைவிட காலிறுதிக்கு முன்னேறுவதற்கு இந்த ஆட்டம் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு மிகவும் முக்கிய மானதாகும். காலிறுதிக்குத் தகுதி பெறும் 8 அணிகளும் சமபலம் வாய்ந்தவையாக இருக்கும் என்ற எனது நம்பிக்கை தொடருகிறது. காலிறுதியில் குறிப்பிட்ட நாளில் சிறப்பாக செயல்படும் அணி, எந்த அணியையும் வீழ்த்த முடியும்.


சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களை கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பேர்த் ஆடுகளம் நல்ல வாய்ப்பையும், நம்பிக்கையும் அளிக்கும். நல்ல வேகப்பந்து வீச்சை வைத்து இருப்பதால் மட்டும், சிறந்த போர்மில் இருக்கும் இந்திய அணிக்கு எதிராக வெற்றியை பெற்று விடமுடியாது. மேற்கிந்தியத்தீவுகள் அணி கட்டுக்கோப்புடனும், நல்ல உறுதியுடனும் ஆடினால் தான் இந்த ஆட்டத்தில் முத்திரை பதிக்க முடியும்.

பேர்த் ஆடுகளத்தில் அஸ்வினின் பந்து வீச்சு சுழற்பந்து வீச்சாளர்களும் பந்தை பவுன்ஸ் செய்ய முடியும் என்பதை எடுத்துக்காட்டியது. சுனில் நரைன் இல்லாததால் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் தரமான சுழற்பந்து வீச்சை காண முடியவில்லை. அடுத்த வாய்ப்பாக சுழற்பந்து வீச்சாளர் சுலிமான் பென் உள்ளார். வில்லியர்ஸின் அதிரடி தாக்குதலில் நிலைகுலைந்து போன பென் அந்த பாதிப்பில் இருந்து மீண்டு வர வேண்டும். இந்த ஆட்டத்திலும் நாணயச் சுழற்சி முக்கிய பங்கு வகிக்கும். முதலில் துடுப்பெடுத்தாடும் அணி அதிக ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை கட்டுப்பாட்டில் வைப்பதுடன், எதிரணியை எளிதில் வீழ்த்த முடியும்.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி ஒவ்வொரு ஆட்டத்திலும் அபாரமாக விளையாடி வலுவாக விஸ்வரூபம் எடுத்து இருக்கிறது. அதேநேரத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் ஆட்டத்தின் போக்கை மாற்றக்கூடிய சில துடுப்பாட்ட வீரர்கள் இருப்பதை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. ஒரு நாளில் அபாரமாக செயல்படக்கூடிய அவர்கள் மற்றொரு நாளில் புஷ்வாணமாக போய் விடுவதும் உண்டு. கிறிஸ் கெய்ல் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் இருக்கிறார். இந்திய அணிக்கு இக்கட்டான சூழ்நிலையில் ஷிகர்தவான் நிலைத்து நின்று ஆடி திறமையை வெளிப்படுத்துவது போல், கிறிஸ் கெய்ல் சிறப்பான ஆட்டத்தை வழங்கினால்தான் மேற்கிந்தியத்தீவுகள் அணி வலுப்பெற முடியும்.

காயம் காரணமாக கடந்த ஆட்டத்தில் ஆடாத இந்திய வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி ஆடும் பதினொருவர் அணியில் இடம் பெறக்கூடும். இது இந்திய அணிக்கு நல்ல பலமாகும். முகமது ஷமிக்கு லேசான வலி இருந்தால் கூட அவருக்கு ஓய்வு கொடுப்பது நல்லதாகும். ஏனெனில் காலிறுதி ஆட்டத்தில் அவரது பயன்பாடு முக்கியமானதாகும்.

முகமது ஷமி களம் திரும்பாவிட்டால் முந்தைய ஆட்டத்தில் விளையாடிய இந்திய அணியில் எந்தவித மாற்றமும் இருக்காது. டரன் பிராவோ இந்த ஆட்டத்துக்கு உடல் தகுதி பெறுவார் என்று மேற்கிந்தியத்தீவுகள் அணி எதிர்பார்க்கிறது. மத்திய வரிசையில் சிறந்த துடுப்பாட்ட வீரரான அவரது வருகை மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு கூடுதல் வலுசேர்க்கும் என்பதில் சந்தேகமில்லை. (5–ரி)



# காதலியை கரம்பிடிக்கும் ஹர்பஜன்

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் (வயது – 34). தனது நீண்ட நாள் காதலியை இந்த மாத இறுதியில் திருமணம் செய்யவுள்ளார்.

ஹர்பஜன் சிங், கீதா பசரா என்னும் நடிகையை நீண்ட காலமாக காதலித்து வருவதாக ஊடகங்களில், செய்தி உலாவிக் கொண்டிருந்தது. ஹர்பஜன் ஆடும் ஆட்டங்களைக் காண கீதா வருவது உண்டு.

தற்போது இவர்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த மாத இறுதியில் இவர்கள் திருமணத்தை நடத்த குடும்பத்தினர் முடிவு செய்துள்ளனர். கீதா பசாரா சில ஹிந்தி மற்றும் பஞ்சாபி திரைப்படங்களில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (5–ரி)

## தினம் ஒரு பரிசுப் போட்டி 21

ஆஸ்திரேலியா – இலங்கை அணிகளுக்கிடையில் நாளை மறுதினம் (08.03.2015) நடைபெறும் ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

.......................................................

பெயர் : ..........................................

தே.அ.இல. : ..........................................

முகவரி : ..........................................

..........................................

தொலைபேசி இல.: ..........................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (07.03.2015) மாலை 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கலாம்.

2,500/=

## பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

........................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

..................................

பெயர்: ........................

தே.அ.அ.இல. ........................

முகவரி. ........................

தொலைபேசி ........................

போட்டி முடிவுத் திகதி 26.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

## போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

## BCAS CAMPUS JAFFNA – 5 லட்சம் ரூபாவுக்கான பரிசுக் கூப்பன்

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

........................

பெயர்: ........................

தே.அ.அ.இல. ........................

முகவரி. ........................

........................

தொலைபேசி

........................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

## அரையிறுதி பரிசுப் போட்டி

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1)........................ 2)........................

3)........................ 4)........................

பெயர்: ........................

தே.அ.அ.இல. ........................

முகவரி. ........................

தொலைபேசி ........................

போட்டி முடிவுத் திகதி 17.03.2015

5,000/=

1 ஆம் பரிசு 2½ லட்சம்

1½

5,000/=

1

நியூ மைதிலி ஜுவலர்ஸ்
யாழ் மண்ணில் தன்னிகரில்லாதலைமை நிறுவனம்

**லக்கி பான்சி கவுஸ்** இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்** பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
**கவிதா** 350ஏ பிரதான வீதி,பருத்தித்துறை.
**கனன் போட்டோ** 165 பிரதான வீதி.பருத்தித்துறை.
**சூரியா பாமசி** புதிய சந்தை,அச்சுவேலி.
**நகுலன்** 85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
**...ட்சாயினி ஸ்ரோர்ஸ்** 3ஆம் சந்தி கெருடாவில்.
**...மலிங்கம்** கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி.
**கலைச்சோலை** இல 3 நவீன சந்தை வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்** ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்** மூளாய் வீதி வட்டுக்கோட்டை.
**தயாளன் ஸ்ரோர்ஸ்** பலாலி,வீதி,கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்** உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
**சிவன் ஸ்ரோர்ஸ்** பரமேஸ்வரா சந்தி,திருநெல்வேலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்** திருநெல்வேலி.
**ஓம் கணேசா** இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்** 103,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை** 41. வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்** 14. விதானையார் வீதி சுண்டுக்குளி.
**சுரேஸ் ஸ்ரோர்ஸ்** இல. 376 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே** செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்** சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்** பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்** சித்தங்கேணிச்சந்தி, சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்** பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்** சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசாலை** பஸ் நிலையம் சுன்னாகம்.
**கிருபா போட்டோ** கே.கே.எஸ்.வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பறம்ஸ்** நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்** ஏ–9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி** ஏ –9 வீதி கொடிகாமம்.
**கஜானன்** அல்லாரை வீதி, மீசாலை சந்தி.
**அன்பரசன் புத்தகசாலை** வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை** மல்லாவி.
**கோமதி நெற்கபே** வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை** 24, பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோமசுந்தரம்** ஏ – 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்** 31ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்** பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்** தாழ்வுப்பாடு வீதி,மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்.பி.சி.எஸ்)** பூநகரி.
**டிலசிகா** 124 கட்ச்ன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயன்பு** உடையார் கட்டு.
**சஜி புக் சொப்** விசுவமடு.
**வரணா புக்சொப்** 755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்** குமரபுரம் பரந்தன்.
**ராஜா தேநீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை** பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்** வரணி.
**விநாயகர் களஞ்சியம்** அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்** வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,** நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்** காரைநகர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எல்லாவற்றிலும் முன்னேற்றம் காணப்படும். எதிர்பார்த்த பணவரத்து இருக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**இடபம்:** திடீர்ச் செலவு உண்டாகும். அடுத்தவருக்கு எவ்வளவு நல்லது செய்தாலும் அது எடுபடாமல் போகலாம். பொருள்வரவு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** எதிர்பார்த்த கடன் தொகை கிடைக்கும். தொழில் ஸ்தானம் நன்றாக உள்ளது. தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். வேலைப்பளு அதிகரிக்கும்.

**கடகம்:** பல தடைகளைத் தாண்டி செயற்பட வேண்டி இருக்கும். வெளிநாடு சம்பந்தமான வேலைகளில் நிறைய லாபம் கிடைக்கப் பெறுவீர்கள்.

**சிங்கம்:** உங்களின் செயல் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் கனிவான பார்வை உங்களின் மீது விழும். உங்களின் உழைப்பு அங்கீகரிக்கப்படும். ஏற்கனவே எதிர்பார்த்திருந்த இடமாற்றம் கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்து வேலை பார்த்தவர்கள் தற்போது குடும்பத்தினரிடம் மீண்டும் சேர வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்சினை குறையும்.

**துலாம்:** அடுத்தவர்களுக்காக எந்தப் பொறுப்பையும் ஏற்காமல் இருப்பது நல்லது. உறவினர்கள் நண்பர்களிடம் இருந்து வந்த மனக்கசப்புகள் குறையும். ஆனாலும் தாய் வழி உறவினர்களுடன் சற்று ஒதுங்கியிருப்பது நல்லது.

**விருச்சிகம்:** வெளியூர் பயணம் செல்ல நேரலாம். அழகு சாதனங்கள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. ஒவ்வாமை போன்று ஏற்படலாம். எதிர்பார்த்திருந்த வெற்றி வாய்ப்பு கிடைக்கும்.

**தனுசு:** பாராட்டுகள் கிடைக்கும். தீவிர முயற்சியின் பேரிலேயே ஒப்பந்தங்கள் நிறைவேறும். நல்ல பெயர் கிடைக்கும். வழக்கு விவகாரங்கள் சாதகமாக அமையும். கைவிட்டுப்போன சொத்துக்கள் மீண்டும் வந்து சேரும்.

**மகரம்:** வெற்றிபெற தடைகளைத் தாண்டி படிக்க வேண்டி இருக்கும். பெரியோரின் ஆலோசனைப்படி செயற்படுவது நல்லது. எதிர்பார்த்த காரியங்கள் நடக்க அதிகமாக உழைக்க வேண்டி இருக்கும்.

**கும்பம்:** எல்லாவற்றிலும் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்சினை தீரும். நீண்ட நாளாக இருந்த கஷ்டம் நீங்கும். வேலைப்பளு அதிகரிக்கும்.

**மீனம்:** எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளிநாட்டுப் பயணம் சாதகமாக இருக்கும். வாக்கு வன்மையால் புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்கப் பெறுவீர்கள்.

# மணமகள் சந்தை





பல்கேரியாவில் ஸ்கோரா நகரில் இடம்பெற்ற திறந்த வெளி மண மகள் சந்தையில், ரோமா இன யுவதிகள் அவர்களது எதிர்கால கணவர்மாருக்கு விற்கப்பட்டனர்.

மேற்படி திருமண சந்தையானது அங்கு வருடமொன்றுக்கு 4 தடவைகள் இடம்பெற்று வருகிறது. இந்த சந்தைக்கு தமது மகன்மார் சகிதம் வரும் பெற்றோர் தமது மகன்மாருக்கு பொருத்தமான மணப் பெண்ணை சிறந்த விலையைக் கொடுத்து பெற்றுக்கொள்ளும் முயற் சியில் இறங்குகின்றனர்.


வறிய ரோமா இன குடும்பத்தினர் திருமணத்தால் கிடைக்கும் நிதி அனுகூலங்களைக் கருத்திற்கொண்டே இந்த திருமண சந்தையில் பங்கேற்கின்றமை குறிப்பிடத்தக்கது.



## 17 மாத குட்டி 80 கிலோ எடை

இங்கிலாந்தில் உள்ள தம்பதியர் சக நண்பர்களிடம் தங்களது பிரியத்துக்குரிய செல்ல நாயை அறிமுகப்படுத்துகின்றனர். எனினும், அவர்களது நண்பர்களால், அதை நாய் என்று நம்பவே முடியவில்லை. ஒரு வளர்ந்த குதிரையைப் போல் இருக்கும் பிட்புல் இனத்தைச் சேர்ந்த பிரம்மாண்டமான நாயாக இருக்கின்றது.

உலகின் அதிக எடை கொண்ட பிட் புல் நாயாக தமது நாய்தான் இருக்கும் என்று நண்பர்களிடம் அடித்துக் கூறுகின்றனர். காரணம் பிறந்து 17 மாதங்களே ஆன ஹல்க்கின் தற்போதைய எடை 80 கிலோ. இந்த நாயைப் பார்த்தாலே அடிவயிறு கலங்குவதாக அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.




# ரிலாக்ஸா வாசியுங்க...

கணவன் ஒருநாள் அலுவலகத்திலிருந்து தாமதமாக வந்தான். மனைவி அவன் உடையை சோதனை செய்தாள். ஒரு பெண்ணின் தலை முடி இருந்தது. உடனே 'ஓஹோ.. உங்க வயசுக்கு சின்னப் பொண்ணா கேக்குதோ..?' என்று பாட்டு பாட தொடங்கி விட்டாள்..!

இன்னொரு நாள் நரைச்ச முடி இருக்க.. 'கிழட்டு மாடுங்களோட சகவாசமா..? ச்சி.. வெட்கமா இல்லே..?' என்று கத்தினாள்.

மறுநாள் நம்ம ஹீரோ, உடையை நல்லா உதறிப் போட்டுக்கிட்டு வந்தான். மனைவிக்கு முடி எதுவும் கிடைக்கல. இருந்தாலும் புருஷன விடலையே.. 'அடப்பாவி மனுஷா.. மொட்டை அடிச்சவளைக் கூட விடுறது இல்லையா..??!!'



அடேய் நீங்க எல்லாம்
எங்கயிருந்திடா
கிளம்பி வாறீங்க....

# நான் அஜித் ரசிகன்



சிம்பு, சிவகார்த்திகேயன், விஷால், ஜெயம் ரவி, விமல் என்று கதாநாயகர்களின் தேர்வுக்குரியவர்களாகி விட்டார் பரோட்டா சூரி. இவருக்கு அஜித்தைத்தான் ரொம்பவும் பிடிக்குமாம். "எனக்கு அஜித் அண்ணனை ரொம்ப பிடிக்கும். நான் அவரோட ரசிகன். என் தம்பி இன்னும் ஒருபடி மேல. அஜித் அண்ணனுக்கு ஊர்ல ரசிகர் மன்றமே வைத்திருந்தவன். அவரோட சேர்ந்து நடிக்கற சந்தர்ப்பம் வீரம் படத்தில் வந்தது. அஜித் அண்ணனை கலாய்க்க வேண்டியிருக்கும்னு வேண்டாம் என்று சொல்லி விட்டேன். அஜித் அண்ணனை கலாய்ச்சு அதுல நான் நடிச்சிருந்தேன்னா, எங்கள் வீட்டுக்குள்ளேயே வெட்டு குத்து ஆகியிருக்கும் என்று, மீசையை முறுக்கி கண்களில் பயத்தைக் காட்டுகிறார் சூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் எழுச்சித் திட்ட பணியாளர்கள் கோருகின்றனர் நிரந்தர நியமனம்

## தவறினால் நாடளாவிய ரீதியில் போராட்டம்



இன்பருட்டி கிராம அபிவிருத்தி சங்க மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன் மற்றும் மாவை சேனாதிராசா ஆகியோர் பாலர் பாடசாலைப் பிள்ளைகளுக்கு உதவிப் பொருள்கள் வழங்கினர். அத்துடன் அந்தப்பகுதி பாலர் பாடசாலையின் கட்டட வேலைக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ சரவணபவன் ஒரு லட்சம் ரூபாவை தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து வழங்குவதாக உறுதியளித்தார். (வ)

யாழ்ப்பாணம், மார்ச் 6

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் வடக்கில் பணியாற்றிய மீன் எழுச்சித் திட்ட அலுவலர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கேட்டுள்ளதோடு தவறின் நாடளாவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கடந்த டிசெம்பர் மாதம் அரசால் சுற்றறிக்கை விடுக்கப்பட்ட போதும் அப்போது தமக்குப் பொறுப்பாக இருந்த இலங்கை மீன் எழுச்சித் திட்ட, திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.கே. லியனகே அதற்கான நடவடிக்கை எதனையும் எடுக்காதிருந்ததோடு, தற்போது அவர் தலைமறைவாகியுள்ளார் என்றும் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அலுவலர்கள் உதயனுக்குத் தெரிவித்துள்ளதாவது:

2000 ஆம் ஆண்டு தேசத்தைக் கட்டியெழுப்பும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் கீழ் நியாப் திட்டம் உருவாக்கப் பட்டது. 2008 இல் அந்தத் திட்டம் பொருளாதார அமைச்சின் கீழ் மீன் எழுச்சித் திட்டமாக மாற்றம் செய்யப்பட்டது. திட்ட மாவட்டச் செயலாளரின் அனுமதியுடன் மாவட்டச் செயலகங்களுக்கு உள்ளே அலுவலகம் அமைக்கப்பட்டு அரச நிறுவனமாகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் 2016 ஆம் ஆண்டு முடிவுறும் காலப்பகுதியாக இருந்த போதும் தகுந்த காரணங்கள் இன்றி கடந்த வருடம் டிசெம்பரில் திட்டம் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வடக்கில் அரச சுற்றறிக்கை யின்படி யாழ்ப்பாணத்தில் 8, கிளிநொச்சியில் 7, வவுனியாவில் 9, மன்னாரில் 6, முல்லைத்தீவில் 14 பேரும் பணியாற்றுகின்றனர். கடந்த டிசெம்பர் 29 ஆம் திகதிய சுற்றறிக்கையின்படி பணியாளர்களை நிரந்தரப் பணிக்கு அமர்த்துமாறு தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் அவர்கள் அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

ஆதலால் வடக்கில் 57 பேருக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 180 நாள் தொடர்ச்சியாக வேலை செய்த பணியாளர்கள் நிரந்தர நியமனம் செய்யும் திட்டத்தில் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும். தவறின் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (வ-4)

# அமெ.காங்.பிரதிநிதிகளுக்கு பணம் வழங்கியமை குறித்து விசாரணை

## பிரதமர் ரணில் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 6

அமெரிக்க காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதிகளுக்கு ஆட்சியில் இருந்த அரசால் பணம் வழங்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து விசாரிக்க வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு உத்தர விடுவதாகத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இது தொடர்பாக அமெரிக்காவுக்கும் அறிவிப்பதாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஜே.வி.பியின் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸா நாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே பிரதமர் ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

"அமெரிக்க காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதிகளுக்கு முன்னைய அரசால் பணம் வழங்கிய விவகாரம் தொடர்பில் விசாரணை செய்ய வேண்டும். அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு பணம் வழங்கியமையானது அந்த நாட்டுச் சட்டத்துக்கு எதிரானதாகும். இலங்கையைப் போன்ற நிலைமை அங்கு இல்லை. எனவே, இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்த வெளிவிவகார அமைச்சருக்கு உத்தரவிடவுள்ளேன். மேலும், இந்த நடவடிக்கையூடாக அமெரிக்க சட்டம் மீறப்பட்டுள்ளதால், அந்நாட்டுக்கு இதுபற்றி அறியப் படுத்துவோம்.

அமெரிக் காங்கிரஸ் பிரதிநிதி ஒருவர் சாப்பாட்டுக்குச் சென்றால்கூட யாருடன் சென்றீர்கள், அழைத்தது யார் என்றெல்லாம் கூறவேண்டும். அந்தளவுக்கு அங்கு சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப் படுகிறது. ஆனால், இந்த விடயத்தில் இங்கு என்ன நடந்துள்ளது என்று தெரியாது. அதனால் இதைப் பற்றி விசாரணை செய்வதுடன், அமெரிக்காவுக்கும் அறியப்படுத்துவோம்" – என்றார். (வ-சி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானைத் தொல்லைக்கு தீர்வைப் பெற்றுத் தருக

## குகநேசபுர மக்கள் வேண்டுகோள்

மட்டக்களப்பு, மார்ச்.6
மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புணானை கிழக்கு கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள மீள் குடியேற்றக் கிராமமான குகநேசபுர கிராமம் யானைத் தொல்லையால் மிகவும் பாதிக்கப்பட்டு வருவதாக பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.



நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக 1990 ஆம் ஆண்டு தங்களது குடியிருப்புக்களை விட்டு இடம்பெயர்ந்து அந்த மக்கள் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் வாழ்ந்து வந்தனர். பின்னர் மீண்டும் 2007 ஆம் ஆண்டு தங்களது இடங்களில் மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

64 குடும்பங்கள் வாழும் அந்தக் கிராமத்தில் அவர்களது பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகின்றது. நெல் மற்றும் வீட்டுத் தோட்ட உற்பத்திகளி லேயே அதிகமாக ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் அந்தக் கிராமத்துக்கு மின்சார வசதிகள் இல்லாததால் அங்கு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது. இரவு வேளைகளில் யானைகள் ஊருக்குள் வந்து அங்குள்ள தென்னந்தோட்டம் மற்றும் வீட்டுத்தோட்டங்களை நாசப்படுத்துவதாக பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

அந்த மக்கள் பயிர்களைமுறையாக அறுவடை செய்வதற்கு முன்பாக யானைகளால் பயிர்கள் அழிக்கப்பட்டுவிடுவ தாகவும், தங்களது கஷ்டத்துக்கு ஏற்ற பயன் கிடைக் காமல் போய் விடுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குகநேசபுர கிராமத்துக்கு யானைகள்வராமல்பாதுகாப்புவேலிகளை அமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்என்று அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை தாம் அங்கு நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழ்வதற்கு சம்பந்தப் பட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகள் தங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறும், உடனடியாக மின்சாரத்தை பெற்றுத் தருமாறும் குகநேசபுர கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ)

வாழ்த்துகின்றோம்
வரவேற்கின்றோம்

ஐந்தாண்டு சேவையினால்
யாழ் மாவட்ட கூட்டுறவை
மேல் நகரப் பாடுபட்டு
மேன்மை பெற வைத்துவிட்டு
மாற்றலாகும் கூட்டுறவு
அபிவிருத்தி
உதவி ஆணையாளரான
V.K அருந்தவநாதன்
அவர்களை
மனமார
வாழ்த்துகின்றோம்.
யாழ் மாவட்ட கூட்டுறவைக்
கட்டிக்காத்து வளர்ப்பதற்காக
காலடி எடுத்து வைத்திருக்கும்
கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளரான்
S. கணேஸ்
அவர்களை
அன்போடு
வரவேற்கின்றோம்.
பணிப்பாளர் சபையினர்,
அங்கத்தவர்கள்,
பணியாளர்கள்.
கோப்பாய் பனை தென்னை
வ.அ.கூ. சங்கம்
(57504)(5.3)

## கலந்துரையாடல்

தென்மராட்சி, மார்ச் 6
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடம்பெறும்.

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் ஒன்றிற்கான மீள் பதிப்பு செய்யப்பட்ட பயிற்சிப் புத்தகம் வழங்கல் பலமட்டக் கற்பித்தலுக்கான அட்டைத்தாள் அச்சிடுவ தற்கான குழுவை நியமித்தல் விடயங்களைகலந்துரையாடப்படவுள்ளன.

கலந்துரையாடலில் பாடசாலை அதிபர்மற்றும்தரம்5வகுப்புகளில் கற்பிக்கும்ஆசிரியர்கள்ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் அறிவித்துள்ளார். (வ–9)

## சிந்தனைக்களம்

யாழ்ப்பாணம், மார்ச் 6
அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்தும் தவத்திரு முனி யோகர் சுவாமிகளின்50ஆவது குருபூசை ஆண்டை முன்னிட்டு "யோகர் சுவாமிகளின் ஆன்மிக நெறிப் படுத்தல்" என்ற கருப் பொருளில் 'சிந்தனைக் களம்' நாளை சனிக் கிழமை காலை 8.45 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ)

பிறந்தநாள் வாழ்த்துகள்
செல்வி வனஸ்வினி சிறீகரசர்மா



இன்று [06.03.2015] வெள்ளிக்
கிழமை தனது முதலாவது
பிறந்தநாளை பாரீஸில்
வெகுசிறப்பாகக்
கொண்டாடுகிறார்.
இவர் சகல கலைகளும்
கற்று சகல செல்வ யோகப்
பெருவாழ்வு பெற்று
பல்லாண்டுகள் சிறப்புடன்
வாழ அல்லையம்பதி முருகன்
அருளும் பத்தினி அம்மன்
திருவருளும் நிறைந்து வாழ
ஆசி கூறி வாழ்த்துகிறோம்.
ஆசியுடன் வாழ்த்துவோர்:
தாத்தாமார், பாட்டிமார், சித்தப்பாமார், அத்தை,
மாமா, மச்சான், சித்திமார், உறவினர்கள்.
அப்பா, அம்மா, சிறி, சாரங்கி.
பாரிஸ்.
(சி/16895)(4.3.6)

4 ஆவது வருட திருமண நாள் வாழ்த்து



மூளாய் வேரம்,
சுழிபுரம்
(ஆனைக்கோட்டை)

இன்று (06.03.2015)
வெள்ளிக்கிழமை தமது
4 ஆவது வருட திருமண
நாளைக் கொண்டாடும்
ரவிதாஷன்
அலோஜினா
தம்பதியினரை
மேன்மேலும்
பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்: A.உ. [illegible]

பாராட்டி வாழ்த்துகின்றோம்




திருமதி யூஜின் குளோட்டில்டா யூலியஸ் (BA, Dip in Ed)
உப அதிபர்-
யா/சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

குருநகரில் ஒரு பம்பரம்

இவள் ஒரு ஓயாத பம்பரம்
அறுபது வயதிலும் அயராது சுழலுகிறாள்
06.03.1955 அன்று
தொப்புள் கொடியின் கயிற்றை இழுத்து
ஆட்டத்தை இறைவன் ஆரம்பித்து வைத்தான்
மண் மீது கொண்ட பாசத்தால்
இன்றுவரை ஓயாது ஆடுகின்றாள்
ஆறாம் அகவையில்
கல்வியெனும் அருந்தனக்
கயிற்றில் ஆடினாள்
அது செல்லநடை ஆட்டம்
உயர் வகுப்பில் விஞ்ஞானம் கற்றாள்
அது அன்ன நடை ஆட்டம்
ஆட்டம் திசை மாறியது
குடும்பப் பந்தத்தில் சுழன்று ஆடினாள்
பிள்ளைகள் பாசத்தில் மகிழ்ந்தாடினாள்
காலத்தின் சூழ்ச்சியா.....?
கடவுளின் சோதனையா......?
இந்தப் பம்பரத்தின்
மாட்சியை ஊரறிந்திட
குடும்ப வாழ்வுக் கயிற்றை - இறைவன்
காலனின் கையில் கொடுத்தாள்
பதியிழந்த இவள் கதியிழந்தாள்
காலச் சுழற்சியால்
கடல் கடந்தாள்
இந்தக் கட்டைப் பம்பரம்
காலம் கனிந்தது
தாயகம் மீண்டாள்
மீண்டும் இப் பம்பரம்
உயர் கல்விக் கயிற்றில்
ஆடத் தொடங்கியது
முயற்சியின் பயனாய்
பட்டதாரியானாள்
ஆசிரியப் பணியில்
ஆட்டம் வீச்சுப் பெற்றது
பாங்கின் பணிக்காய்
பக்தியுடன் சுழன்றாள்
மறைக்கல்வி வளர்த்திட
இறை கயிற்றில் ஆடினாள்
மகளிர் எழுச்சியுற
சமூகப் பணிக்கயிற்றில் ஆடினாள்
எத்தனை தளங்களில்
இவளின் சுழன்றாடல்
அத்தனையும் ஊரை அழகு செய்ய
சிரித்த முகத்தில் சிந்தனை ஆயிரம்
கறுத்த உருவம் தான்
ஆயினும் இவளோ
காரியப் பேரொளி
இளையோர் சூழ்ந்திடும்
தளபதி ஆகினாள்
ஊரின் இளையோர்
கல்வியில் மிளிர்ந்திட
கருத்துடன் ஆடினாள்
பூவையர், வாலிபர்
புதுயுகம் கண்டிட
கலையொடு விளையாட்டில்
சிகரத்தைத் தொட்டிட
கலையெனும் பம்பரக்
கயிறுமுத்து
தானும் ஆடினாள்
அன்றைய இளையோர்
இன்றைய தலைவர்கள் ஆகிட
குன்றிடைத் தீபமாய் ஒளிர்ந்திட
தன்னையே இணைத்து
தியாகியும் ஆகினாள்
அறுபது அகவை கண்டிட்ட
எழில்மிகு பம்பரத்தை
மறைவழி பார்த்தால்
நல்ல சமாரித்தனாக கண்டோம்
இவள் விதைக்கும் விதைகளோ
கற்களில், முட்களின்
நடுவீதியில் விழவில்லை
தாலந்து உவமையில்
நல்ல முயற்சியாள்
சமரசம் பேசுவதில்
இவள் சாண்க்கிய மாணவன்
இவள் விதைத்த விதைகள்
தேசங்கள் தோறும் விருட்சமாய்
ஐந்தாறு தலைமுறைகளாய்
இவள் பணி தொடர்ந்தன
இந்தப் பம்பரத்திற்காய்
இறைவா உன்னிடம்
தாழ்மையான விண்ணப்பம்
மேலும் ஒரு
அறுபது அகவை காண
இந்தப் பம்பரத்தை
சுழன்றாடவிடு
மகிழ்ந்தாடவிடு

Best Wishes
பவளவிழாவில் பசுமைத்துளிகள்
Best Wishes

குருநகர் தாய் ஈன்ற இணையற்றவளே
உன் வாழ்வால் வாழ வைத்தாய் உரை -நின்
கண்ணீர் மறந்து - பல மனங்களை
மகிழ்ச்சி ஆக்கினாய் பூரிப்படைகின்றோம்
வறியவர் வறுமை வரையறை கடக்க
வெறுமையுற்றோர் தேவை தீர்க்க
ஓய்வின்றி உறக்கமின்றி - உன்
தோளில் சுமக்கிறாய் பிறர் சிலுவைகள்

நிறை ஆளுமையுடன் ஆசிரியப்பணி - கண்டிப்புடன்
அன்பாக அணைத்திடும் செவிலியானாய்
தோழியாய் தேவையில் தோள் கொடுத்தாய் - பல
மாணவர் பெருமை பெறச்செய்தாய்
பக்தி நிறை பங்குமகளாய் - அர்ப்பணிப்புடன்
எப்பணியும் கடமையாய் செய்கிறாய் - நின் வாழ்வில்
உடல் சுகம் இன்தே பெற்று
இறையாசீருடன் வாழ வாழ்த்துகிறோம்.

பங்குத் தந்தையர்கள், பங்கு மக்கள்
குருநகர் புனித யாகப்பர் ஆலய அருட்பணிசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார அமைச்சராக இருந்தபோது கஷ்டங்களையே எதிர்நோக்கினேன்

## நாடாளுமன்றில் விவரித்தார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 6

தேசிய மருந்துகள் ஒழுங்கு படுத்தும் அதிகாரசபைச் சட்ட வரைவை நாடாளுமன்றில் சமர்ப்பிக்காது அதை மூடி மறைத்ததற்காக 400 மருத்துவ நிறுவனங்களிடமிருந்து தலா 25 லட்சம் ரூபா வீதம் முன்னாள் ஆட்சியாளர்களால் பெறப்பட்டுள்ளது என்றும்–அவ்வாறு பெறப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்றும்–ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன் தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் இடம் பெறும் மோசடிகளை அலரி மாளிகையில் வைத்து சுட்டிக் காட்டுகையில்; அதிகாரிகளின் முன்னிலையில் தான் அவமதிக்கப்பட்டதாகவும் இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகவே நாட்டில் ஊழல்கள் அதிகரித்ததாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, அமைச்சர் ஒருவருக்கு இருக்கக்கூடிய சுயாதீனத்தன்மை பறிக்கப்பட்டதாலும் தவறுகள் தொடர்ந்ததாலுமே முன்னாள் அரசிலிருந்து வெளியேறி இன்று ஜனாதிபதியாகியுள்ளேன். தவறுகள் தட்டிக்கேட்கப்பட்டிருக்கும் பட்சத்தில் நான் இன்னும் அமைச்சராகவே இருந்திருப்பேன் என்றும் அவர் மேலும் குறிப் பிட்டார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் முதல் தடவையாக உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:–

45 வருடங்களாக பேச்சு மட்டத்திலேயே இருந்துவந்த மருந்துக் கொள்கையுடன் தொடர்புடைய தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்ட வரைவை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளதையிட்டு சந்தோஷமடைகின்றேன்.

நாட்டின் சகாதாரத்துறைக்கு முக்கியத்துவமிக்க விடயமாக இது காணப்படுகின்றது. நூறுநாள் வேலைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதை நிறைவேற்றியுள்ளோம். இதற்காக ஆணை வழங்கிய மக்களுக்கு நன்றி.

இந்த சட்டவரைவுக்கு என்ன நடந்தது என்று 2010 இல் தேடிப்பார்த்தேன். அதன் பிறகு வரைவுநகல் தயாரிக்கும் பணிகளை முன்னெடுத்தேன். 2011 டிசெம்பரிலும் சட்ட வரைவு நகலைத் தயாரிக்கும் பணிகள் முடிவடைந்தன. எனினும் தயாரிக்கும் பணியில் ஈடுபட்ட சட்ட வரைஞர் திணைக்கள அதிகாரிக்கு ஓய்வு வழங்கப்பட்டிருந்தது. நான் அவருடன் தொடர்பு கொண்டு சட்டவரைவு எங்கே என வினவினேன். கணினியில் இருக்கிறது அனுப்புகிறேன் எனப் பதில் கிடைத்தது. ஆனால், கணினியில் இல்லை. சட்ட வரைவு இல்லை. கடைசியில் அவரும் இல்லை.

குறிப்பாக, இந்தச் சட்ட வரைவு காணாமற்போகச் செய்வதற்கு சுமார் 400 மருத்துவ நிறுவனங்களிடம் இருந்து தலா 25 லட்சம் ரூபா பெறப்பட்டுள்ளது என்று எனக்குத் தகவல் கிடைத்தது.

அதுகுறித்து விசாரணை நடத்தப்படவில்லை. அதிகாரம் அப்போது எவரின் கைக்குள் இருந்திருக்கும் என்பது உங்களுக்கும் தெரியும். பணத்துக்கு என்ன நடந்தது என்பதும் தெரியாது.

அதேவேளை, சுகாதார அமைச்சு தொடர்பில் அலரி மாளிகையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றின் போது ஊழல்கள் பற்றி நான் கருத்து வெளியிடுகையில், அதிகாரிகளை சுதந்திரமாகச் செயற்படுவதற்கு இடமளிக்குமாறு எனக்கு உத்தரவு வந்தது. அதையடுத்து அமைச்சருக்கு அதிகாரம் இல்லை என்பதை அதிகாரிகள் புரிந்து கொண்டனர். ஊழல்களும் தலைதூக்க ஆரம்பித்தன. அமைச்சர்களுக்கு சுயாதீனமாகவும், மனச்சாட்சியின் படியும் செயற்படுவதற்கு அப்போது இடமிருக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே நான் ஜனாதிபதியானேன். நான் ஜனாதிபதியானதால்தான் இந்தச் சட்டவரைவு நாட்டு மக்களுக்காகக் கொண்டு வந்தேன்.'

இதை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி.

சட்டவரைவு நிறைவேறி 24 மணித்தியாலத்துக்குள் பயன்பெற்றுவிட முடியாது. அதிகாரசபைக்குத் தெரிவிக்கவுள்ள அதிகாரிகளின் வினைத்திறன்மிக்க செயற்பாட்டிலேயே இதன் வெற்றி தங்கியுள்ளது.

அத்துடன், பொதுமக்களுக்கு இலவச சுகாதார சேவையைத் திறம் பட வழங்குவதே எனது எதிர்பார்ப்பாகும்–என்றார். (வ–சி)


## யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரின் எண்ணெய்க்கசிவு

மேற்படி பிரச்சினையை ஆராய்ச்சி செய்வதற்கும் தீர்வு காண்பதற்குமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக பின்வரும் தகவல்கள் பாதிக்கப்பட்ட பொதுமக்களிடமிருந்து கோரப்படுகின்றன. பின்வரும் வினாக்களுக்கு உங்களுடைய நேர்மையான பதில்களை எதிர்பார்க்கின்றோம்.

1. எப்பொழுது நீங்கள் கிணற்று நீரில் எண்ணெய்க்கசிவு உள்ளதை அறிந்தீர்கள்?
2. தற்பொழுது இந்த எண்ணெய்க்கசிவின் அளவு மாற்றமடைந்துள்ளதா?
3. உங்களுக்கோ உங்கள் குழந்தைகளுக்கோ ஆரோக்கியம் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளனவா?
4. வேறு ஏதாவது தகவல்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்களா?
5. உங்களுடைய பெயர்?
6. பாதிக்கப்பட்ட கிணறுகள் உள்ள முகவரி?
7. உங்கள் தொலைபேசி இலக்கம்?

உங்களுடைய பதில்களை 12.03.2015 இற்கு முன்னர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.
கு. சுந்தரலிங்கம் இல.09 சங்கிலியன் வீதி. நல்லூர்.யாழ்ப்பாணம்.
உங்கள் பதில்களை கொண்டு உங்களைச் சந்தித்து கலந்தாலோசிக்க எதிர்பார்க்கின்றோம்.

K.Suntharalingam
Chif Consultant Engineer
Environmental Engineering Consultants
(57525)(3.8)



## மேல் நீதிமன்றம், வவுனியா
### கேள்வி அறிவித்தல்

வவுனியா நீதிமன்ற வளாகத்தில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய கேள்விப்பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விவரங்களையும் வவுனியா மேல்நீதிமன்றக் கணக்காளரிடம் மீளளிக்க முடியாத வைப்பாக ரூ100/= ஐயும் மீளளிக்கக் கூடிய வைப்பாக ரூ 10000.00/= ஐயும் செலுத்தி 18.03.2015 புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி 18.03.2015 பிற்பகல் 2.30 மணிவரை ஆகும். அன்றைய தினம் பிற்பகல் சுமார் 3.00 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

அ.பிரேமசங்கர்,
தவிசாளர்/ மேல்நீதிமன்ற நீதிபதி,
மேல்நீதிமன்ற கேள்விச்சபை,
மேல்நீதிமன்றம்,
வவுனியா

02.03.2015 (சி 16880)(3.8)


# தேசிய மட்டத்தில் சாதனை



வலி.வடக்கு, மார்ச் 6

அளவெட்டி வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் 4 இல் கல்வி கற்கும் செல்வானந்தன் வினோஜன் என்ற மாணவன் தேசிய மட்டத்தில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியிலான சைவநெறி தேர்வு எழுத்துப் பரீட்சையில் கீழ்ப் பிரிவில் தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

குறித்த பாடசாலை வரலாற்றில் முதற் தடவையாக தேசிய மட்டத்திலான போட்டி ஒன்றில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ–86)


## 7வது ஐரோப்பிய திரைப்பட விழா

கைலாசபதி கலையரங்கு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
6, 7, 8 March 2015
10.15 am | 1.15 pm | 4.15 pm
நுண்கலைத்துறை யாழ். பல்கலைக்கழகம்
அனுசரணை : Harikanan

## ST. JOHN'S COLLEGE, JAFFNA OLD BOYS ASSOCIATION

NOTIFICATION
ANNUAL GENERAL MEETING

The 99th Annual General Meeting of the Old Boys' Association will be held on Saturday 21st March 2015 at 9.30a.m. in the College Auditorium.

Members who wish to submit resolutions are kindly requested to do so in Writing on or before 14th March 2015.

The programme for the day would be published indue course.

Breakfast & Lunch Tickets are available at the college till 20th March 2015

V.Sanjeev
Secretary
(o 16878)(3.8)

## தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கனடாக்கிளையின் ஆதரவுடன் கொழும்புக்கிளையினால்

வடமாகாணத்தில் நடத்தப்படும்
கணிதப்புதிர்ப் போட்டி– 2015

தரம் 8 ஐச் சேர்ந்த மாணவர்களுக்கு வருடா வருடம் நடத்தப்படும் மேற்படி கணிதப் புதிர்ப்போட்டி இவ்வருடமும் எதிர்வரும் மார்ச் மாதம் 14ஆம் திகதி ஐந்து மாவட்டங்களிலும் நடைபெற இருக்கின்றது. இப்போட்டியில் தமது மாணவர்களும் பங்குபற்ற வேண்டும் என விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக, மாணவர் முழுப்பெயர், பிறந்த திகதி, சேர்விலக்கம் மற்றும் பாடசாலையின் தொலைபேசி இலக்கம் அடங்கிய பட்டியலைப் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் "அதிபர், யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் தலைவர், சட்டத்தரணி இ. செல்வஸ்கந்தன் அவர்களினால் வழங்கப்படவுள்ள பரிசு விவரம் வருமாறு:

1 ஆம் இடம் : ரூபா. 25000.00
2ஆம் இடம் : ரூபா. 20000.00
3 ஆம் இடம் : ரூபா. 15000.00
4 ஆம் இடம் : ரூபா. [illegible]
அடுத்து 06 இடங்களுக்கும் ரூபா. 7500.00

அதிபர்
மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை.
(சி 16888)(3.8)

## இலவச சட்ட ஆலோசனை

- சட்டத்தரணிகளால் நாம் உங்களுக்கு இலவசச் சட்ட ஆலோசனை வழங்குகின்றோம். நீங்கள் அரச அல்லது தனியார் நிறுவனத்தினால் அநீதிக்கு இலக்கானவரா?
- அரச காணிகள் பற்றிய பிரச்சினைகளில் தொடர்புடையவரா?
- இலஞ்ச, ஊழல் மோசடிகள் தொடர்பில் நீங்கள் செய்த முறைப்பாட்டுக்கு நீதி கிடைக்கவில்லையா?
- மனித உரிமை மீறல்கள் தொடர்பான பிரச்சினைகளா?

உங்கள் முறைப்பாடுகளுக்கு
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும்
காலை 9.00 முதல் மாலை 4.00 வரை

077 967 2686

அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பு
இல.28, கைலாசபிள்ளையார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Facebook: http://www.facebook.com/page/Afriel/446860702089172
Website:http://www.afriel.org/
E-mail: afrielangelofyouth@gmail.com
(சி/ 16894)(4.3.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் கோவிந்தசாமி

(இளைப்பாறிய ஆசிரியர் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி)



யாழ், சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும் பெரிய அரசடி, ஆசிரியர் வீதி சங்கத்தானையை வசிப்பிடமாகவும், இந்தியாவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கோவிந்தசாமி 03.03.2015 செவ்வாய்க்கிழமை இந்தியாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா(இளைப்பாறிய அதிபர் -சாவகச்சேரி இந்துக்கல்லூரி, தமிழ்க்கலவன் பாடசாலை)- சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், பத்மஜோதி (இந்தியா), திருமகள்(லண்டன்), இளஞ்சேய்(லண்டன்), சிவரூபி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, நடராஜா(இளைப்பாறிய ஆசிரியர்), சுப்பிரமணியம், வேலுப்பிள்ளை மற்றும் சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நவரத்தினம்(இளைப்பாறிய தபால் அதிபர் - இந்தியா), ஜனக்குமார்(ஜனக்-லண்டன்), சங்கரி(லண்டன்), சிவதாசன் (சிவா- லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் யோகரட்ணம்(கனடா), சதாசிவம், யோகாம்பிகை, சிவதாசன்(நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சபாரத்தின்ம் (இளைப்பாறிய பிரதி அதிபர் -சாவகச்சேரி இந்துக்கல்லூரி) அவர்களின் அன்புச் சகலனும், திவ்யா(இந்திரா), குருபரன் (லண்டன்), ஜனகன் (லண்டன்), ஆதவன்(லண்டன்), கபிலன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று நாளை மறுதினம் (08.03.2015) ஞாயிற்றுக்கிழமை இந்தியா தமிழ்நாடு தாம்பரம் இந்து மயானத்தில் பி.ப 3 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
திருமகள் ஜனக்குமார் - பிரித்தானியா
(+447961460494)
சிவரூபி சிவதாசன் - பிரித்தானியா
(+447828751129)
பத்மஜோதி நவரட்ணம் - இந்தியா
(+919884725826)

தகவல் :-
செ.சபாரத்தினம்(சகலன்)
பெரிய அரசடி, ஆசிரியர் வீதி.
சங்கத்தானை
சாவகச்சேரி.
(077 214 6513)

(51913)(5.3)

## யாழ்.மாவட்ட கூ.அ. உதவி ஆணையாளராக கணேஷ்

யாழ்ப்பாணம்,மார்ச் 6

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக எஸ்.கணேஷ் பதவியேற்றுள்ளார். அவர் வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தில் உதவி ஆணையாளராக ஏற்கனவே பணியாற்றியவர். முன்னர் யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பணி யாற்றிய வீ.கே.அருந்த வநாதன் கிளிநொச்சி மாவட்டத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக இடமாற்றப்பட்டார். கிளிநொச்சி மாவட்டத்துக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எவரும் முன்னர் நியமிக்கப்படாததால் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். பாலச்சந்திரன்அங்குபதில் கடமையை மேற்கொண்டு வந்தார்.

அதேவேளைகிளிநொச்சி மாவட்டத்துக்கு இட மாற்றம் செய்யப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்வீ.கே.அருந்த வநாதன் மற்றும் யாழ். மாவட்டத்தின் புதிய ஆணையாளர் எஸ்.கணேஷ் ஆகியோருக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் நாளை யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சமாசத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும். சமாசத்தலைவர் ரி.கணேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் நிகழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (வ-17)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி வேலுப்பிள்ளை



வட்டுவத்தை, கரணவாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சரஸ்வதி வேலுப்பிள்ளை நேற்று (05.03.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி- வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தர் வேலுப்பிள்ளையின் (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) மனைவியும், காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் மாணிக்கவாசகர் (லண்டன்) திருமதி மகேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) திருமதி கனகாம்பிகை, செல்வி செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி சிவராஜினி (ஆசிரியை- யா/ கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க பாடசாலை)யின் அன்புத் தாயாரும் இராஜேஸ்வரனின் (பதிவாளர் மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை) மாமியாரும், நிதர்சன்(H.N.D.E- மட்டக்குளி), விஷசன்(N.D.T- மொரட்டுவ) அபர்ணன் (யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி கரவெட்டி) இ. சாம்பவி(யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.03.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெல்லன் கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டுவத்தை
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P : 021 321 8516

(54226)(5.3)

## திருமதி தங்கரட்ணம் சற்குணராஜா



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரட்ணம் சற்குணராஜா 28.02.2015 சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (08.03.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும்- ஏற்றுக்கொள்ளவும்.

சந்தையடி, மானிப்பாய்.
076 6029156

தகவல்:
குடும்பத்தினர்.

(57512)(4.3.7)

# மரண அறிவித்தல்

## திருமதி குப்புசாமி புவனேஸ்வரி ( புவனேஸ் அக்கா)



வவுனியா, கே பி கே மற்றும் ஜே பி கே நிறுவனங்களின் நிறுவுநர் ரவி - கே.பிரபாகரன் அவர்களின் அன்புத் தாயார் புவனேஸ்வரி அவர்கள் பெப்ரவரி 27 ஆம் திகதி வெள்ளிக் கிழமை லண்டனில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதப்பு-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குப்புசாமியின் அன்பு மனைவியும், விமலேஸ்வரி (மலர்), பிரபாகரன் (ரவி), சிவசோதி (தயா), கிருபாகரன் (கிருபா), சுதாகரன் (சுதா), விமலலோஜினி (லோஜி), லகுமீகரன் (லகுமி), சிவகரன் (கரன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆனந்தபவன், சிவனேஸ்வரி, காலஞ்சென்ற பவளமலர் மற்றும் கோணேஸ்வரி (ஈஷா), ஜிக்கினா, பாபு, அபிராமி, கெங்கா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ராகவி, வைஷ் ணவி, ஜனனி, ஜதுர்சன், சகானா, சரண்யா, யசாந், அஜந், சுஜினா, ஜசீனா, சுஜானா, துஷானா, ஜனுக்சா, டிலுக்ஷன், றியா, லியா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


ரவி 00447816225969
Thorney Bay Rd,
Canvey Island, Essex ss8 OHG
UK.

தகவல்:
குடும்பத்தினர்.

(56219)(4.3.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நீரிழிவு நோயின் அளவைக் கண்டறியும் புதிய பேனா அமெரிக்காவில் கண்டுபிடிப்பு!

வொஷிங்டன்,மார்ச் 6

நீரிழிவு நோயைக் கண்டு பிடிக்க உடலில் இருந்து ஊசி மூலம் இரத்தத்தை எடுத்து பரிசோதனை நடத்தப் படுகிறது. அதன் மூலம் இரத்தத்தில் உள்ள சீனியின் அளவு கணக்கிடப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஊசி மூலம் இரத்தம் எடுத்து பரிசோதனை செய்வதற்குப் பதிலாக அதிநவீன முறையில் நீரிழிவு நோயின் அளவைக்கண்டறிய புதிய வகைப் போல்பொயிண்ட் பேனாவொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேனாவை அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள சாண்டியாகோ பல்கலைக்கழக நிபுணர்கள் தயாரித்துள்ளனர். அதிநவீன பயோமையைத் தயாரித்துள்ளனர். இந்த மையில் பல இரசாயனப் பொருள்கள் கலக்கப்பட்டுள்ளன. இந்தப் பேனாவை உடலில் தோல் மீது வைத்து அழுத்தினால் போதும். அதன் உணர்வின் அடிப்படையில் இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவு பதிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# ஐ.நா. பொதுச் செயலர் நியமனம்; வெளிப்படைத்தன்மை தேவை

## இந்தியா வலியுறுத்தல்

நியூயோர்க்,மார்ச் 6

ஐ.நா. பொதுச் செயலாளர் நியமனத்தில்வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்த வேண்டும் என்று இந்தியாவலியுறுத்தியுள்ளது.ஐ.நா.சபையின் பொதுச் செயலாளராக உள்ள பான்கீமூனின்பதவிக்காலம் அடுத்த ஆண்டுடன் நிறைவடைய உள்ளது. கடந்த 2007 ஆம் ஆண்டிலிருந்து, இரண்டு முறை ஐ.நா.சபையின் பொதுச் செயலாளராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அந்தப் பதவிக்கு புதிதாக ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்போது, அதற்குத் தகுதியான ஒரு நபரின் பெயர், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் சார்பில் முன்மொழியப்படும். ஆனால் இந்த நடைமுறையை மாற்றி ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களின் பெயர்களை பாதுகாப்புச் சபை பரிந்துரைக்க வேண்டும் என்று இந்தியா சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

தற்போதுள்ள உலக சூழல் முற்றிலும் மாறுபட்டுள்ளது. எனவே ஐ.நா. பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறைகளில் மாற்றம் மேற்கொள்ள வேண்டியது அவசியம். அந்தப் பொறுப்புக்கு ஒன்றுக்கும் மேற்பட்டவர்களது பெயர்களை பாதுகாப்புச் சபையில் பரிந்துரைக்க வேண்டும் என்று ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தர உறுப்பினர் பக்வந்த்பிஷ்ணோய் கேட்டுள்ளார். (14)

## இந்திய மாம்பழ இறக்குமதிக்கு தடையை நீக்கியது ஐரோப்பிய நாடுகள்

டில்லி, மார்ச் 6

இந்தியாவின் புகழ்பெற்ற அல்போன்சா உள்ளிட்ட உயர்ரக மாம்பழங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. ஆனால் அவற்றில் புழுக்கள் போன்றவைஇருப்பதாகக்கூறி,கடந்தஆண்டு இறக்குமதிக்குத்தடைவிதிக்கப்பட்டது. அதன்படி 28 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய கூட்டமைப்பு அல்போன்சா மாம்பழங்களை இறக்குமதி செய்ய கடந்த ஏப்ரல் மாதம் தடை விதித்தது. மேலும் இந்தியாவில் இருந்து காய்கறிகளை இறக்குமதி செய்யவும், கடந்த மே மாதம் தடை விதிக்கப்பட்டது.

இந்தத் தடை நடைமுறைக்கு வந்து ஒரு வருடத்தை எட்டியுள்ள நிலையில், தற்போது மாம்பழ இறக்குமதி மீதான தடை நீக்கப்பட்டு உள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. எனினும் காய்கறி இறக்குமதி மீதான தடை நீடிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)



இந்தியாவின் வாரணாசி நகரில் வசித்து வரும் நாடு கடத்தப்பட்ட பழங்குடித் துறவிகள் மனித இறைச்சியை உணவாக உட்கொண்டு வருகின்றனர். (14)

## மயங்கி விழுந்தார் நடிகை சரிதா



திருவனந்தபுரம்,மார்ச் 6

பிரபல நடிகை சரிதாவுக்கும், மலையாள நடிகர் முகேஷுக்கும் கடந்த 1988ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. இவர்களுக்கு 2 மகன்மார் உள்ளனர். இந்தநிலையில் தம்பதிகளுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து கடந்த 2009ஆம் ஆண்டு விவாகரத்துகோரிநடிகர்முகேஷ்,சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

பல வருட விசாரணைக்குப் பின்னர்கடந்த2வருடங்களுக்குமுன்னர் சென்னை குடும்ப நல நீதிமன்றம் விவாகரத்து வழங்கியது. இதையடுத்து நடிகர் முகேஷ் கடந்த வருடம் மேதிலா என்ற பெண்ணை இரண்டாவதாக திருமணம் செய்தார். இந்த நிலையில் நடிகை சரிதா கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கொச்சி குடும்ப நல நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடர்ந்தார். தமது தரப்பு வாதங்களைதையும் கேட்காமல் நீதிமன்றம் விவாகரத்து வழங்கியுள்ளது. எனவே முகேஷின் 2ஆவது திருமணத்தை செல்லுபடி அற்றதாக அறிவிக்க வேண்டும் என சரிதா கோரியிருந்தார்.

இதையடுத்து சரிதாவும், முகேஷும் கொச்சி குடும்ப நல நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம்முன்னிலையானார்கள். இதன் பிறகு வெளியே வந்த நடிகை சரிதா, நீதிமன்ற வளாகத்தில் திடீரென மயங்கி விழுந்தார். இதனால் நீதிமன்ற வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது. (14)

## குடியுரிமை பெற சீனக் கர்ப்பிணிகள் புதிய உத்தி

கலிபோர்னியா,மார்ச் 6

தங்கள் குழந்தைகளுக்கு அமெரிக்கக் குடியுரிமை பெற கர்ப்பிணி என்பதை மறைத்து சீனப் பெண்கள் பலர் அமெரிக்காவுக்கு வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மகப்பேறு சுற்றுலா சேவை என்ற பெயரில் இந்த மோசடித் தொழில் நடைபெறுகிறது.

இது தொடர்பாக கலிபோர்னியா மாகாணம் லொஸ்ஏஞ்சலிஸ் நகரில் உள்ள பல்வேறு அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதிகளில் பொலிஸார் அதிரடிச் சோதனைகளைத் தொடங்கி உள்ளனர்.

கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள இர்வின், ரான்சோ குகமோங்கா, ரோலேண்ட் ஹைட்ஸ் மற்றும் வால்நட் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளிலும் இதுபோன்ற சோதனை நடத்தப்படும் என்றும், அமெரிக்க குடியுரிமை மற்றும் சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் பிறக்கும் குழந்தை வயதுக்கு வந்த பின்னர் வெளிநாட்டில் வசிக்கும் தனது குடும்ப உறுப்பினர்களுக்குவிசாவுக்குவிண்ணப்பிக்க முடியும். இதற்காகவே இதுபோன்ற சட்டவிரோத செயல்கள் நடைபெறுகின்றன.

மேலும், இது போன்ற செயலால் விசா மற்றும் வரி மோசடி, சட்டவிரோத பணப் பரிவர்த்தனை மற்றும் கூட்டுச் சதி உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுவதும் தெரியவந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளனர். (14)

# சூரிய சக்தி விமானங்கள் மூலம் இணையத்தள இணைப்புகள்

டெல்லி,மார்ச் 6

முன்னணிசமூகவலைத்தளநிறுவனமான பேஸ்புக், தான் உருவாக்கி வரும் சூரிய சக்தி விமானங்கள் மூலம் இந்தியாவில் இணையத்தள இணைப்புகளை அறிமுகப்படுத்தத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

இணையத்தள இணைப்புகளை வழங்குவதற்கான வழக்கமான தொழில் நுட்பங்களுக்குப் பதிலாக, மாறுபட்ட புதிய தொழில்நுட்பங்களை நிறுவனம் உருவாக்கி வருகிறது. மின் விமானங்கள் மூலம் அத்தகைய இணைப்புகளைவழங்குவது அதில் முக்கியமானது.

இந்த விமானங்களால் மிக உயரத்தில் இருந்துகொண்டு ஏராளமானோருக்கு எளிதாக இணையத்தள இணைப்புகளை வழங்க முடியும்.

மேலும், இந்த விமானங்கள் சூரிய சக்தியில் இயங்குவதால் இதற்கு மின்னுற்பத்திச் சாதனங்களோ, தரையிலிருந்து மின்சார விநியோகமோ தேவையில்லை. இந்த விமானத்தின் மாதிரியை இன்னமும் நாங்கள் அறிமுகப்படுத்தவில்லை. அவ்வாறு அறிமுகப்படுத்தும்போது, அதனை இந்தியாவில் அறிமுகப்படுத்தத் தயாராக இருக்கிறோம். இதன் மூலம், அங்கு இணையத்தள வசதி இல்லாத ஏராளமானோர், அந்த வசதியைப் பெறுவதற்கான வாய்ப்புக் கிட்டும் என நிறுவனம் தெரிவித்துள்ளது. (14)

# உலகப் போரில் மூழ்கடிக்கப்பட்ட ஜப்பானியக் கப்பல் கண்டுபிடிப்பு

70 ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டாவது உலகப் போரின் போது, அமெரிக்கப் படைகளால் மூழ்கடிக்கப்பட்ட ஜப்பானிய போர்க் கப்பலான முசாஷியை கடலடியில் கண்டுபிடித்திருப்பதாக அமெரிக்க ஆய்வாளர் போல் அலன் அறிவித்துள்ளார்.

இதுவரை கட்டப்பட்ட மிகப்பெரிய போர்க் கப்பல்களில் ஒன்றாக முசாஷி கருதப்படுகிறது. தமக்குச் சொந்தமான அகழ்வாராய்ச்சி அணி இந்தக் கப்பலைக் கண்டு பிடித்திருப்பதாக அலன் கூறியிருக்கிறார்.

பிலிப்பைன்ஸிற்கு அருகில் உள்ள சிபுயான் கடலில் ஒரு கிலோ மீற்றருக்கும் மேற்பட்ட ஆழத்தில் இந்தக் கப்பல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மூழ்கடிக்கப்பட்டு 70 ஆண்டுகளுக்குப் பிறகு முசாஷி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. முசாஷியும்



அதனுடைய துணைக் கப்பலான யமாடோவும்தான் இதுவரை கட்டப்பட்ட போர்க் கப்பல்களிலேயே மிகப் பெரியவை.

தானாக கடலடியில் இயங்கக் கூடிய வாகனத்தின் மூலம் பிலிப்பைன்ஸ் தீவுக்கூட்டத்தின் மத்தியில் இந்தக் கப்பல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கடலடியை முழுமையாக ஆய்வு செய்த பிறகு அலனின் ஆய்வுக் குழுவினர் இந்தப் பணியில் இறங்கியுள்ளனர். (14)

## எரிமலை வெடிப்பு

சிலி,மார்ச்6

சிலி நாட்டின் தென்பகுதியில் அமைந்திருக்கும் வில்லாரிகா என்ற எரிமலை நேற்று முன்தினம் வெடித்தது. இதையடுத்து, அங்கு தங்கியிருக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

2ஆயிரத்து 840 மீற்றர் உயரமுள்ள இந்த வில்லாரிகா எரிமலை, எப்போதும் கனன்று கொண்டிருக்கும் எரிமலையாகும். அதன் மையத்தில் எரிமலைக் குழம்பு நிரம்பிய ஏரியும் இருந்தது. மலையேறுபவர்கள் அதிகம் வந்துசெல்லும் மலை இது. இதற்கு முன்பாக 1985 ஆம் ஆண்டு இந்த எரிமலை வெடித்திருந்ததாகத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எலும்புக்கூடுகள் மீட்பு

பாரீஸ்,மார்ச் 6
பிரான்ஸின் தலைநகர் பாரீஸில் உள்ள மோனோபிரிக்ஸ் என்ற பல்பொருள் அங்காடியில், கட்டடத்தின் திருத்தப் பணிகள் நடைபெற்றபோது 200க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.
இதனையடுத்து பல்பொருள் அங்காடியின் தலைவர் தேசிய அகழ்வாராய்ச்சி நிறுவனத்தின் தடுப்பு பிரிவினருக்கு தகவல் தெரிவித்துள்ளார். தற்போது இந்த எலும்புக்கூடுகள் பற்றி அகழ்வாராய்ச்சி நிறுவனம் ஆராய்ச்சி மேற்கொண்டு வருகிறது.
இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது: இந்தப் பல்பொருள் அங்காடி இருக்கும் இடம் 11ஆம் நூற்றாண்டில் மருத்துவமனையில் இறந்தவர்களின் உடல்களை புதைக்கும் இடமாக இருந்தது. நோயின் தாக்கம் அல்லது பசிக் கொடுமையால் இவர்கள் இறந்திருக்கலாம்.
இந்த இடத்தை மேலும் தோண்டினால் ஏராளமான எலும்புக் கூடுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. மேலும் இந்த எலும்புக்கூடுகளைக் கொண்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ள உள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். (14)

# நிலை குலைந்தது பயணிகள் விமானம்

## உயிர் தப்பினர் 238 பேர்



காத்மாண்டு,மார்ச் 6
நேபாளத் தலைநகர் காத்மாண்டுவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தரையிறங்கிய துருக்கி நாட்டு விமானமொன்று, ஓடுபாதையிலிருந்து திடீரென விலகி புல்வெளியில் பாய்ந்தது.
எனினும், பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கக்கூடிய இந்த விபத்தில், விமானத்திலிருந்த 238 பேரும் காயமின்றி உயிர் தப்பினர்.
துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரிலிருந்து 227 பயணிகள், 11 பணியாளர்களுடன் பயணித்த 'துர்க்கிஷ் எயர் லைன்ஸ்' நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் நேபாளத் தலைநகர் காத்மாண்டுவை நேற்றுமுன்தினம் அன்றைய தினம் அதிகாலை வந்தடைந்தது.
ஏர்பஸ் ஏ–330 வகையைச் சேர்ந்த அந்த விமானம், காத்மாண்டு விமான நிலையத்தில் தரையிறங்கிபோது கடும் பனிமூட்டம் காணப்பட்டது.
இதன் காரணமாக, ஓடுபாதையின் மையப்பகுதியில் விமானத்தைத் தரையிறக்க விமானியால் முடியாததால் அந்த விமானம் கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள புல்தரை மீது பாய்ந்தது.
அதனைத் தொடர்ந்து விமானத்திலிருந்த 238 பேரும் அவசரக் கதவுகள் வழியாக உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.
இந்த விபத்துக்கு பனிமூட்டமும், வெளிச்சக் குறைவுமே காரணம் எனக் கூறப்பட்டாலும், விபத்துக்கான உண்மைக் காரணம் குறித்து கண்டறிய விசாரணை நடத்தப்படும் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (14)

# கைகளை வெட்டி கொடூரத் தண்டனை

### ஐ.எஸ். தீவிரவாதிகளின் வெறியாட்டம்

ரக்கா,மார்ச்6
சிரியாவின் ரக்கா நகரை தலைமையகமாக கொண்டு விளங்கும் ஐ.எஸ்.தீவிரவாதிகள், குற்றம் இழைப்போருக்குக்கடுமையானதண்டனைகளை வழங்கி வருகின்றனர்.
இந்தநிலையில் ரக்கா நகரில் திருடன் ஒருவனை தீவிரவாதிகள் கொடூரமாக கொலை செய்துள்ளனர். முதலில் திருட்டில் ஈடுபட்ட நபரைப் பிடித்த தீவிரவாதிகள், அவனைக் காரிலிருந்து இழுத்து வந்து மக்களின் முன்பு நிறுத்தினர். பின்னர் அவனை நாற்காலியில் அமரவைத்து கட்டி வைத்தனர். அதேவேளை மற்றொரு தீவிரவாதி அந்தநபர் புரிந்த குற்றங்களை பட்டியலிட்டான். இறுதியில் மற்றொரு தீவிரவாதி கயிறுகளால் கட்டிய அவனது கைகளை வெட்டினான். இந்தக் காட்சியை அந்நகர மக்கள் சாதாரணமாக வேடிக்கைபார்த்தனர்.இதற்கிடையே யாரேனும் திருடினால் அவருக்கும் இதே கதிதான் என்று தீவிரவாதி ஒருவன் மிரட்டியதாகவும் தகவல் வந்துள்ளது. (14)

# செயற்கைக்கோள் வெடித்துச் சிதறியது



வொஷிங்டன்,மார்ச் 6
அமெரிக்க இராணுவத்துக்குச் சொந்தமான செயற்கைக் கோள் ஒன்று விண்வெளியில் வெடித்துச் சிதறியுள்ளது. அமெரிக்க பாதுகாப்புத்துறை 1995 ஆம் ஆண்டு செயற்கைக்கோள் ஒன்றை விண்ணில் ஏவியிருந்தது. வானிலை மாற்றங்களை ஆராய்ந்து இந்த செயற்கைக் கோள் தகவல்களை அனுப்பி வந்தது.
பூமிக்கு மேலே 800 கி.மீ. தொலைவில் 20 ஆண்டுகளாக விண்வெளியில் வலம் வந்த இந்தச் செயற்கைக்கோளின் முக்கிய பாகம் திடீரென ஏற்பட்ட வெப்ப நிலை மாற்றத்தால் செயலிழந்து விண்வெளியில் வெடித்துச் சிதறியுள்ளது.(14)



# அமெ.தூதுவருக்கு கத்திக்குத்து

சியோல், மார்ச் 6
தென் கொரியாவுக்கும், வடகொரியாவுக்கும் இடையே நீண்ட நாள்களாக பகை நீடித்து வருகிறது. தென் கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்காவும், வட கொரியாவுக்கு ஆதரவாக ரஷ்யாவும் செயற்பட்டு வருகின்றன. இந்த நிலையில் கடந்த சில தினங்களாக அமெரிக்காவும்,தென்கொரியாவும்இணைந்து கூட்டு இராணுவப் பயிற்சி மேற்கொண்டு வருகின்றன. இதனால் கோபமடைந்த வட கொரியா, 2 குறுகிய தூர ஏவுகணைகளை பரிசோதனை செய்தது.
இந்த நிலையில நேற்றைய தினம் தென்கொரியாவுக்கானஅமெரிக்கத் தூதுவர் மார்க் லிப்பர்ட் முகத்தில் கிம்கி–ஜோங்என்ற(வயது–55)நபர் கத்தியால் குத்தினார். லிப்பர்ட்டின் இடது கை மணிக்கட்டையும் அந்த நபர் கத்தியால் கிழித்தார். தென் கொரியாவும், வட கொரியாவும் ஒன்றாக இணையவேண்டும் என்று கோஷமிட்டவாறே, கத்தியால் குத்திய அந்த நபரை, தென் கொரிய பொலிஸார் மடக்கி பிடித்தனர்.
கத்திக் குத்தால் லிப்பர்ட் முகத்திலிருந்தும், மணிக்கட்டிலிருந்தும் இரத்தம் பெருக்கெடுத்ததால், உடனடியாக அவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. தற்போது அவர் உடல்நலம் தேறி வருவதாக கூறியுள்ள அமெரிக்கா, இந்தச் சம்பவத்துக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (14)

# அஸாமில் இதுவரை 161 பேர் சாவு

குவாஹாட்டி,மார்ச் 6
அஸ்ஸாம் மாநிலத்தில் 1972 ஆம் ஆண்டு முதல் தற்போது 161 பேர், நாகாலாந்து பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டனர் என்று அஸ்ஸாம் சட்டப்பேரவை விவகாரங்கள் துறை அமைச்சர் ராக்கிபுல் ஹுசைன் தெரிவித்துள்ளார்.
அஸ்ஸாம் சட்டப்பேரவையில், அகில இந்திய ஐக்கிய ஜனநாயக முன்னணி கட்சியை சேர்ந்த எம்.எல்.ஏ. அமினுல் இஸ்லாம் எழுப்பிய கேள்விக்கு ராக்கிபுல் ஹுசைன் எழுத்துப் பூர்வமாக அளித்த பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அஸ்ஸாம் மாநிலம், கோலாகாட் மாவட்டத்தில் நாகாலாந்து பயங்கரவாதிகளால் கடந்த 1977ஆம் ஆண்டு முதல் நிகழ்த்தப்பட்ட 9 தாக்குதல்களில் இதுவரை 136 பேர் உயிரிழந்துள்ளனர். 166 பேர் காயமடைந்துள்ளனர். சிவசாகர், ஜோர்ஹட் உள்ளிட்ட மாவட்டங்களில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களில் 25 பேர் சாவடைந்தனர். பலர் காயமடைந்தனர். நாகாலாந்து, அஸ்ஸாம் எல்லைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும், எல்லை மீறல் தொடர்பாகவும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். (14)




உலகிலேயே மிகவும் வயதானவரான ஜப்பானைச் சேர்ந்த மிசாவ் ஓகாவா நேற்று தனது 117ஆவது பிறந்தநாளை வெகு விமரிசையாகக் கொண்டாடியுள்ளார். (14)

# ரஷ்யாவுக்கு மேற்கத்திய நாடுகள் எச்சரிக்கை

வொஷிங்டன்,மார்ச் 6
உக்ரைன் அமைதி ஒப்பந்தத்தை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ரஷ்யாவுக்கு மேற்கத்திய நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.
அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஹொலாந்த், ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல், இத்தாலியப் பிரதமர்மேட்டியோரென்ஸி,ஐரோப்பியச்சபைத் தலைவர் டொனால்ட் டஸ்க் ஆகியோர் காணொலி முறையில்நிகழ்த்தியசந்திப்பின்போது இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
மேற்கத்திய நாடுகளின் தலைவர்களிடையே இடம்பெற்ற இந்தக் காணொலிச் சந்திப்பின்போது, கிழக்கு உக்ரைனில் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் குலைக்கும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக கடுமையான பதில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. கடந்த பெப் ரவரி மாதமும், செப்ரெம்பர் மாதமும் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, உக்ரைன் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண அனைத்து உதவிகளையும் செய்வதாக தலைவர்கள் உறுதியளித்துள்ளனர் என வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# 9ஆயிரம் அடி உயரத்தில் பறந்த இளைஞர் மயக்கம்

பெர்த்,மார்ச் 6
ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இளைஞர், கிறிஸ்டோபர் ஜோன்ஸ், ஸ்கை டைவிங் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.
அண்மையில் 9ஆயிரம் அடி உயரத்தில் பறந்த விமானத்தில் இருந்து பயிற்சிக்காக டைவ் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் எதிர்பாராத விதமாக அவர் திடீரென மயக்கமானார். இதைக் கவனித்த ஜோன்ஸின் பயிற்சியாளர் சாதுரியமாகச் செயற்பட்டு மயக்கமுற்றிருந்த ஜோன்ஸுக்கு சுய நினைவை வரவழைக்க அவர் மீது தாக்குதல் நடத்தினார்.
நினைவிழந்த நிலையிலேயே சிறிது நேரம் பறந்து கொண்டிருந்த ஜோன்ஸுக்கு மூவாயிரம் அடி உயரத்துக்கு வந்தவேளை மீண்டும் நினைவு திரும்பியது.
இதுவரை ஸ்கை டைவிங்கில் 9ந்தாவது நிலை வரை ஜோன்ஸ் வெற்றிகரமாக முடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

# யாழ். மாவட்டத்தில் புகையிலை, மதுபாவனை அதிகரித்துள்ளதால் மோசமான விளைவுகள்

## நாடாளுமன்றத்தில் சரவணபவன் கவலை தெரிவிப்பு



உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் பிரகாரம் புகைபிடிப்பவர்கள் வெளியிடும் புகையைச் சுவாசிப்பதன் காரணமாக, சுமார் 6லட்சம் புகை பிடிக்காதவர்கள் சாவை எதிர்கொள்வதாகத் தெரிய வருகின்றது. மேலும் எமது நாட்டில் மாவட்ட ரீதியாகப் பார்க்கும் போது புகையிலைப் பாவனையாளர்களின் எண்ணிக்கை யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகமாகக் காணப்படுகின்றது. இது மாவட்ட ரீதியாகப் பார்க்கும் போது 42.9வீதமாகும். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புற்றுநோய் மருத்துவமனை, நோயாளர்களால் நிறைந்து காணப்படுகின்றது. மஹரகம புற்றுநோய் மருத்துவமனையும் எப்பொழுதும் நோயாளர்களால் நிறைந்து காணப்படுகின்றது.

இவர்களில் 30 வீதமானவர்கள் 15வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். 30 வீதத்துக்கும் சற்று அதிகமான தொகையினர் 25 வயதுக்கும் 39 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

எனவே கௌரவ சுகாதார அமைச்சர் இந்தத் திருத்தச் சட்ட வரைவை சரியான வேளையில் கொண்டு வந்துள்ளார் என்றே நம்புகின்றேன்.

புகைபிடிக்கும் பெரும்பாலானோரைப் புகையிலை அல்லது சிகரெட் கொலை செய்கின்றது. அது மாத்திரமன்றிப் புகைபிடித்தல் பழக்கம் இல்லாதோரையும் அது பாதிக்கின்றது. இதற்குக் காரணம் மற்றவர்களின் பொறுப்பற்ற நடவடிக்கையாகும். உலகளாவிய ரீதியில் 10 வீதமான இளைஞர்களின் மரணத்திற்குக் காரணமாக அமைவது இந்தப் புகைபிடித்தல் பழக்கமாகும். வருடாந்தம் உலகில் சுமார் 6 மில்லியன் மக்கள் புகையிலைப் பாவனை தொடர்பான நோய்களினால் இறக்கின்றனர். அதுமாத்திரமன்றி, புகையிலைப் பழக்கமற்ற 6 லட்சம் பேர் புகைபிடிப்பவர்களால் பாதிக்கப்பட்டு இறக்கின்றனர். அதாவது மற்றவர்கள் புகைபிடிக்கும்போது அப்புகையைச் சுவாசிப்பதால் இந்த உயிரிழப்பு ஏற்படுகின்றதென உலக சுகாதார நிறுவனம் தனது அறிக்கையில் குறிப்பிடுகின்றது.

இலங்கையில் எதிர்வரும் இரண்டு தசாப்தங்களில் புகைத்தலினால் ஏற்படக்கூடிய மரணங்களில் சடுதியான அதிகரிப்பு நிகழக் கூடும் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்திருக்கின்றது. இதனைத் தடுப்பதற்கு முன்னெச்சரிக்கைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். இல்லையேல் வரவிருக்கும் உயிரிழப்புக்களைத் தவிர்க்கமுடியாத அவலநிலை ஏற்படும்.

சுகாதார சேவைப் பணிப்பாளராக இருந்த மருத்துவர் மஹிபால அவர்கள் கூறுகையில், சிகரட் மற்றும் புகையிலைப் பாவனை மூலம் இலங்கையில் எதிர்வரும் இரண்டு தசாப் தங்களில் ஆண்டுக்குச் சுமார் 40,000 வரையிலான இறப்புக்கள் நிகழக்கூடும் எனக் குறிப்பிட்டுள்ளார். தற்போது மரணங்கள் பல்வேறுபட்ட சுகாதாரக் காரணங்களினால் ஏற்படுகின்றன. புகைபிடிப்பதன்மூலம் நாளொன்றுக்கு 57 பேர் மரணிக்கின்றனர். மேலும் 600 பேர் நாளாந்தம் மாரடைப்பு நோய் என வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர். புகைபிடிப்பதன்மூலமும் மதுபாவனை மூலமும் குடல் புற்றுநோய் மற்றும் வாய்ப்புற்றுநோய் இலங்கையில் அதிகரித்தவண்ணமுள்ளது. இந்த நிலையைப் போக்குவதற்குப் புகையிலை மற்றும் மது பாவனையைச் சடுதியாகக் குறைக்கக்கூடிய நடவடிக்கைகள் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் சுமார் 39 வீதமான ஆண்களும் 2.6 வீதமான பெண்களும் புகைபிடிக்கும் பழக்கத்துக்கு உட்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர் என 'இலங்கையில் புகையிலைக் கட்டுப்பாடு' (2009) எனும் அறிக்கை குறிப்பிடுகின்றது. 2009 இன் பின்னர் யாழ்ப்பாணத்தில் மது பாவனை அதிகரித்துள்ளது. அதாவது, சாராயப் பாவனை 2009இல் 5 லட்சம் லீற்றராக இருந்து 2010 இல் 1.6 மில்லியன் லீற்றராக உயர்ந்தது. இது 2013இல் 2 மில்லியன் லீற்றராக அதிகரித்தது. பியர் பாவனை யாழ்ப்பாணத்தில் 4 மில்லியனை எட்டியுள்ளது. பியர் மற்றும் சாராயம் இரண்டையும் சேர்த்தால் 6 மில்லியன் லீற்றர் அங்கே நுகரப்படுகின்றது. அதற்கப்பால் கள்ளு – (toddy) 5 மில்லியன் லீற்றர் நுகரப்படுகின்றது. எல்லாவற்றையும் சேர்த்தால் கிட்டத்தட்ட 110 இலட்சம் லீற்றர் மதுபான வகை நுகரப்படுகின்றது. ஆனால் யாழ். மாவட்டச் சனத்தொகை 6,10,600 ஆகும். ஆகவே, ஆண்டு ஒன்றுக்கு சராசரித் தனிநபர் மது நுகர்வு 18.15 லீற்றர் ஆகும். யாழ். குடாநாட்டில் மது பாவனை அதிகரித்துக்கொண்டிருக்கும் நிலையில், கடந்த 2013ஆம் ஆண்டு மட்டும் 40,56,999 லீற்றர் பியரும் 20,18,434 லீற்றர் சாராயமும் அருந்தப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர் மது மற்றும் புகையிலைப் பாவனை சடுதியாக அதிகரித்துள்ளமையானது அங்கு பெரிய பிரச்சினையாகவுள்ளது. இளைஞர்கள் மட்டுமல்லாமல் பாடசாலை மாணவர்கள், தனியார் கல்லூரி மாணவர்கள் என மது பாவனையாளர்களின் பரப்பு விரிவாக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டியிருக்கின்றன. இதன்படி பாடசாலை மாணவர்களுடைய மதுபாவனை அதிகரித்துள்ள நிலையில், அதனைத் தடுப்பதற்குப் பூரணமான நடவடிக்கை இதுவரையில் எடுக்கப்படவில்லை எனத் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், மறுபக்கம் சில தரப்புகளினால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் மதுப் பாவனை ஊக்குவிக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுகின்றன. இந்தத் தரவுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டு சாராயம் 5,67,756 லீற்றர் அருந்தப்பட்டுள்ளது. ஆனால், அதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு 2013ஆம் ஆண்டு 20,18,434 லீற்றராக அதிகரித்துள்ளதாகத் தரவுகள் குறிப்பிடுகின்றன. இதே போன்றே பியர் மற்றும் கள்ளு போன்ற மதுபானங்களின் பாவனையும் 2009ஆம் ஆண்டின் பின்னர் மூன்று மடங்காக அதிகரித்திருப்பதாகத் தகவல்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றன. 2014ஆம் ஆண்டு நிறைவடைந்துள்ள நிலையில் அவ்வருடமும் அதன் பாவனை முன்னரைவிட அதிகளவில் இருக்குமென எச்சரிக்கப்பட்டுள்ளதுடன், இந்த விடயம் தொடர்பாகப் பொறுப்புவாய்ந்த தரப்புக்களின் முழுமையான கவனம் தேவை எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் மொத்தத் தேசிய வருமானத்தில் சுமார் 12 வீதம், புகையிலைப் பொருள்கள் விற்பனைமூலம் கிடைப்பதுடன் இலங்கையிலுள்ள புகையிலை உற்பத்தி மற்றும் விற்பனை நிறுவனங்களைக் கடந்த அரசில் அங்கத்துவம் பெற்ற அமைச்சர்கள் சிலர் கையகப்படுத்தியிருப்பது ஒரு முக்கிய விடயமாகும். இந்த நிலையில் இலங்கையின் மற்றைய மாகாணங்களைவிடவும் வடக்கில் மதுபானம் மற்றும் புகையிலைசார் உற்பத்திகள் அதிகளவில் விற்பனை செய்யப்படுவதுடன் அவற்றை அருந்தவும் கொள்வனவு செய்யவும் மக்களுக்கு அதிகளவு தூண்டுதல் வழங்கப்படுவதாகவும் பல நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் கூறி வருகின்றன.

> இலங்கையில் சுமார் 39 வீதமான ஆண்களும் 2.6 வீதமான பெண்களும் புகைபிடிக்கும் பழக்கத்துக்கு உட்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர் என 'இலங்கையில் புகையிலைக் கட்டுப்பாடு' (2009) எனும் அறிக்கை குறிப்பிடுகின்றது. 2009 இன் பின்னர் யாழ்ப்பாணத்தில் மது பாவனை அதிகரித்துள்ளது.

வடக்கு, கிழக்கில் மதுப்பாவனை மற்றும் புகைபிடித்தல் பழக்கமானது என்றுமில்லாதவாறு அதிகரித்தவண்ணமுள்ளதுடன் இது பெரிய சமூக, கலாசார, குடும்பப் பொருளாதாரப் பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது. உதாரணமாக, இலங்கை மதுவரித் திணைக்கள அறிக்கையின்படி யாழ். மாவட்டத்தில் மட்டும் நாள் ஒன்றுக்குச் சுமார் 15,000 லீற்றருக்கும் அதிகமான மதுபானம் நுகரப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறான திடீர் அதிகரிப்பானது சமூகத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவல்லதாகும். ஒட்டுமொத்தமாக நோக்குகின்றபோது கடந்த வருடம் சாராயம் மற்றும் பியரின் நுகர்வு சுமார் 6 மில்லியன் லீற்றராகவும் காணப்படுகின்றது. ஆனால், சனத்தொகையானது சுமார் 6 இலட்சமாகவுள்ள ஒரு மாவட்டத்தில் ஆண்டுக்கு 11 மில்லியன் லீற்றர் மதுபான வகைகள் நுகரப்படுவதாயின் சராசரியாக ஒருவர் ஆண்டு ஒன்றுக்கு 18.33 லீற்றர் மதுபானம் என்ற தலா நுகர்வாக அல்லது மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவர் 1.53 லீற்றர் மதுபானம் நுகர்வதாக இந்தத்தரவுகள் புலப்படுத்துகின்றன. இந்தப் போக்கானது தலைகீழான பொருளாதார நகர்வையே காட்டுகின்றது.

இலங்கையில் ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாகத் தனிநபர் ஒருவரின் மதுபான நுகர்வு 11.2 லீற்றர் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது. இது ரஷ்யா போன்ற நாடுகளுக்கு அடுத்த நிலையில் உள்ளது. ஆனால், யாழ் மாவட்டத்தின் நிலை – 18.33 லீற்றர் என்ற அளவு –மிக மோசமானதாகவே உள்ளதென ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இவ்வாறான போக்கானது போர்க் காலப் பகுதியிலோ, அதற்கு முந்திய காலப் பகுதியிலோ காணப்படவில்லை. இவ்வாறான போக்கை போரின் பின்னரான, அதாவது 2009 இன் பின் அரசின் சட்டம், ஒழுங்கு நடைமுறைக்கு வந்த பின்னர், ஏற்பட்ட விளைவுகளாகக் கொள்ளலாம். அதேநேரம் இந்த நிலைமை மேலும் மோசமடையக்கூடிய சாத்தியமே காணப்படுகின்றது. பிரதான மதுப் பாவனையாளர்களாக இளம் வயது வாலிபர்களே அதிகம் காணப்படுகின்றனர். இதற்குச் சான்றாகக் குறித்த ஒரு பாடசாலையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின்போது இடம்பெற்ற கைகலப்பில் உயிரிழப்பு ஏற்பட்டதைக் கூறலாம். இது மிக வருந்தத்தக்கதாகும்.


மதுபாவனையிலிருந்து மீள்வதற்கான சிகிச்சை நிலையம், புனர்வாழ்வு நிலையம் மற்றும் துறைசார் ஆளணியினர் போன்ற தேவைப்பாடுகளை யாழ். மாவட்டம் வேண்டி நிற்கின்றது. இதற்கு முன்னுரிமையளித்து நாட்டின் இளைஞர்களை நல்ல முறையில் வழிநடத்த வேண்டிய பொறுப்பு அரசுக்குரியதாகும். 2013 டிசம்பரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, இலங்கையில் இரண்டாவது அதிகூடிய மதுப் பாவனையைக் கொண்டதாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகிறது. அதாவது அங்கு 34.4 சதவீதமான மக்கள் மதுப்பழக்கம் கொண்டவர்களாகக் குறிப்பிடப்பட்டிருப்பது கவலை தருவதாகவுள்ளது. ஏற்கெனவே, போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களிடையே காணப்பட்ட வேலையின்மை, வறுமை, சமூக மற்றும் உளத் தாக்கங்களே இந்த நிலைமைக்குக் காரணமாகக் கொள்ளப்படுகின்றது. சட்டம் ஒழுங்கு, சமூகநலத்திட்டம், வறுமையை ஒழிக்கும் [illegible] இந்த நிலைமையை மாற்றமுடியும். வறுமை மட்டமானது, கிளிநொச்சியில் 12.7 வீதமும், மன்னாரில் 20.1 வீதமும், முல்லைத்தீவில் 28.8 வீதமுமாகக் காணப்படுகின்றது. வேலையின்மையானது, கிளிநொச்சியில் 09 வீதமும், மன்னாரில் 8.1 வீதமும் முல்லைத்தீவில் 20 வீதமுமாகக் காணப்படுகின்றது.

தொன்மையான வரலாற்றையும் கலாசாரப் பாரம்பரியத்தையும் கொண்ட எமது தாய்நாட்டின் பெருமைக்குரிய பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாத்து மெருகூட்டி, கால மாற்றத்துக்கேற்ப இன்றுவரை அதன் அடிப்படை மாறாது வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதில் நீங்கள் அனைவரும் என்னுடன் ஒன்றுபடுவீர்கள் என்பதால், நான் திடமான நம்பிக்கையுடன் இந்த விவரங்களைச் சமர்ப்பித்துள்ளேன். ஆய்வின் பிரகாரம் கிடைத்த மதிப்பீட்டின்படி எங்களுடைய பிரதேசத்திலுள்ள அத்தனை பேரையும் – அது இளைஞர்களாக இருந்தாலென்ன, முதியவர்களாக இருந்தாலென்ன மதுப்பழக்கம், புகைப்பிடித்தல் உட்பட எல்லாவற்றிலிருந்தும் காப்பாற்ற வேண்டும். கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் வெகு வேகமாக அதிகரித்த மதுப் பாவனை, ஏனைய தடைசெய்யப்பட்ட போதைப் பொருள்களின் பாவனை என்பன எமது சமூக ஒழுங்கில் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியமையை நீங்கள் அறிவீர்கள். இந்த துரதிர்ஷ்டவசமான நிலைமையின் தாக்கத்திலிருந்து நாடு இன்னமும் முற்றாக விடுபடவில்லை என்பதை மிகவும் மன வேதனையுடன் நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

வடக்குக் கிழக்கில் 2009ஆம் ஆண்டு மதுபானத்தை விற்பனை செய்வதற்கு 40 உரிமங்கள் வழங்கப்பட்டன. 2010ஆம் ஆண்டு இது 51 ஆக உயர்வடைந்தது. இதுவொரு வழக்கத்துக்கு மாறான செயற்பாடாகும். இந்த நாட்டின் வேறு எந்தப் பகுதியிலும் இவ்வாறு நடப்பதில்லை. யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கு எல்லாம் உரிமம் வழங்கப்பட்ட மதுபானசாலைகள் காணப்படுகின்றன. யாழ். பல்கலைக்கழகம், பாடசாலைகள், ஆலயங்கள் ஆகியவற்றுக்கு அருகிலும் இவற்றைக் காண முடியும். இதுவொரு அபாயகரமான நிலையாகும். ஆகவே இந்த உரிமங்கள் திரும்பப் பெறப்படவேண்டும். அண்மையில் மது பானங்கள், சிகரெட் ஆகியனவற்றின் விலைகள் வரவு –செலவுத்திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட போதிலும், இது வருமானத்தை அதிகரிக்கவே செய்யும். மேலும் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது யாழ். மாவட்டத்தில் இவற்றின் விற்பனை அதிகமாக[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் திருமுகம்



## உதயனுக்கு ஒரு மடல்

மக்கள் மனம் நிறைந்த நாளிதழான உதயன் வாசகர்களின் கைகளில் தற்போது குறைப் பிரசவத்துடன் தவழ்வதாக நாம் உணர்கிறோம். சில குறைப்பாடுகள் காணப்பட்டாலும், ஒரு சிலவற்றை தங்கள் பார்வைக்கு முன்வைக்க ஆசைப்படுகிறேன். முக்கியமாக . என்றுமில்லாதவாறு சில இடங்களில் எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன.

வர்ணப் படங்கள் தெளிவற்றுக் காணப்படுகின்றன. வர்ணங்களின் பின்னணியில் அச்சாகும் எழுத்துக்கள் இளைஞர்களாகிய எங்களாலேயே வாசிக்க முடியாமலும், சினம்கொள்ளக் கூடியதாகவும் இருப்பதுடன் கண்ணுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் உள்ளது.

யாழ்.மண்ணுக்கே உரித்தான மொழி, இலக்கியப் பாணிகள் உள்ள போதிலும், கலாசார விழுமியங்கள், நகைச்சுவைகள், கதைகள் என தென்னிலங்கை மீடியாக்கள் மற்றும் முகப்புத்தகங்களில் வெளிவரும் தகவல்களை தரவிறக்கம் செய்து பிரசுரிப்பது மனத்துக்கு வேதனையளிக்கிறது. தமிழ் கலாசாரம் பேணும் தாங்கள் கலாசாரத்துக்கு முரணான தென்னிந்திய மொழிநடையில் வெளிவரும் தகவல்களைத் தரவிறக்கம் செய்யாமல் இருந்தால் நன்று.

அத்துடன் . இளைய சமுதாயம் முதல் மூத்தோர் வரையில் இணைய பாவனை அதிகமாகியுள்ள வேளையில் தயவு செய்து இணையக் கட்டுரைகள், முகப்புத்தக கட்டுரைகளை பிரதி செய்வது தங்களுக்கேயுரித்தான தனித்தன்மையை இழப்பதற்கு வழிகோலுகிறது.

தாங்கள் தற்போது செய்திகளுக்கான முக்கியத்துவத்தை விட பல மடங்கு விளம்பரங்களுக்கே செலவு செய்கிறீர்கள். எந்தப் பக்கம் பார்த்தாலும் விளம்பரம். விளம்பரங்களுக்கு நடுவே புறக்கணிக்க கூடிய அளவில் கருத்தில் எடுபடாச் செய்திகளை பிரசுரிப்பது தான் தோன்றித்தன மாகவுள்ளது.

எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பிரசுரிக்கும் தாங்கள் இதனையும் வாசகர் திருமுகத்தில் பிரசுரிப்பீர்கள் எனவும் இதற்கான தங்களின் மறுபதில்களுடன் எதிர்பார்த்து வெளிப்படைத் தன்மையுடன் நிற்கிறேன்.

*கு.மதுசுதன், கோண்டாவில்.*

## தமிழ்த் தேசிய நாளிதழ் வெளிவரவேண்டும்

உதயன் தமிழ்த் தேசிய நாளிதழ் பத்திரிகையை வடக்கு,கிழக்கு தமிழர் தாயகம் உட்பட தமிழர் வாழும் பகுதி மலையகம் வரை வெளிக் கொணர வேண்டும். தமிழீழ தாயகத்தில் இன்று வரை தமிழர் தாயகப் பத்திரிகையாக ஒன்றுமே வெளிவரவில்லை. தங்கள் பத்திரிகை நிறுவனம் ஏன் ஒரு பத்திரிகையை தமிழீழ தாயகத்தில் எல்லா இடமும் வெளியிடக் கூடாது? தற்போது அமைந்திருக்கும் ஆட்சியில் இதனைத் தாங்கள் மேற்கொள்ள இடமுண்டு. பல பத்திரிகைகள் தமிழீழ தாயகத்தை மையப்படுத்தி வரவேண்டும். தமிழ் எங்கள் தேசியம் என்னும் பெயரில் ஒரு பத்திரிகையை வெளியிடவேண்டும் அல்லது தமிழ் எங்கள் மொழி எனப் பெயரிடலாம். இந்தப் பத்திரிகை தமிழ் மொழி பேசும் வடக்கு, கிழக்கு தமிழீழ தாயகப் பகுதியில் வாழும் கிறிஸ்தவ, இஸ்லாமிய, இந்து மத மக்கள் எல்லோரையும் இணைக்க வேண்டும். தயவு செய்து காலம் தாழ்த்தாமல் இவ்வாறு ஒரு பத்திரிகையை வெளியிட தமிழ் அரசியல் தலைமைகள் உடன் முன்வரவேண்டும்.

*எம்.ரகுபாலன், சுவிற்ஸர்லாந்து*

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

## இரகசிய முகாம்களால் உருவாகியுள்ள சர்ச்சை

முன்னாள் ஜனாபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இலங்கையில் பல இடங்களில் இயங்கியதாக குற்றஞ்சாட்டப்படும் இரகசிய தடுப்பு முகாம்கள் குறித்து இப்போது சர்ச்சை உருவாகி இருக்கிறது. கொழும்பில் கடத்தப்பட்டு காணாமற்போன ஐந்து இளைஞர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த விசாரணையின் போது குறித்த இளைஞர்கள் கடற்படையினரால் கடத்தப்பட்டு திருகோணமலையில் உள்ள இரகசிய தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் கொல்லப்பட்டனரா? என்ற கோணத்தில் விசாரணை திரும்பி உள்ளது. அவ்வாறான இரகசிய தடுப்பு முகாம் இருப்பின் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவைதொடர்பான அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத் தரணி கே.வி.தவராஜா கோரியிருக்கிறார்.

கொழும்பில் கடத்தப்பட்டு காணாமற்போன குறித்த ஐந்து இளைஞர்கள் தொடர்பாக அவர்களது பெற்றோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை இடம்பெற்று வருகிறது. கடந்த சில வருடங்களாக நடக்கும் இந்த விசாரணை இப்புதிய அரசு பொறுப்பேற்ற பின் புதிய கோணத்தில் திரும்பியிருக்கிறது.

கடத்தப்பட்டு காணாமற்போனவர்கள் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் கொல்லப்பட்டனரா என்ற சந்தேகம் இந்த விசாரணைகளின் மூலம் எழுந்துள்ளது. கொழும்பில் இடம்பெற்ற கடத்தல்களுக்கும் கடற்படை உயர் அதிகாரிகளுக்கும் தொடர்பு உள்ளதா என்ற கோணத்திலும் விசாரணை செல்கிறது.

இவ்வாறு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் செயற்படுவதாக குற்றம் சாட்டப்படும் இரகசிய தடுப்பு முகாம்கள் தொடர்பில் இப்போது பல்வேறு சர்ச்சைகள் கிளப்பப்பட்டு வருகின்றன. இந்த வகையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் வெளியிட்ட கருத்து முக்கியத்துவம் பெறுகிறது. "காணாமற்போனவர்கள் என்று கூறப்படுப்வர்கள் இரகசியத் தடுப்பு முகாம்களில் இருக்கலாம் என்று நாங்கள் நம்புகின்றோம். அது தொடர்பில் எம்மால் விசாரணைகளை மேற்கொள்ள முடியாது. அதனை விசாரித்து உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு அரசிடம் கேட்டிருக்கிறோம்" என்று காணாமற்போனவர்களின் உறவினர்களிடம் கூறினார் வடக்கு முதலமைச்சர்.

இரகசியமான தடுப்பு முகாம்களில் காணாமற்போனவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. குறிப்பாக திருகோணமலையில் 70 பேர் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. இது தொடர்பில் விசாரணை நடத்தித் தருமாறு அரசிடம் கோரியிருக்கிறோம். இதனை யார் உங்களுக்குச் சொன்னது என்று அரசு எங்களை கேட்கிறது. அதனை விடுத்து இது குறித்து விசாரிக்குமாறு அரசிடம் கூறியுள்ளோம் என்றும் குறிப்பிட்டார் முதலமைச்சர்.

வடக்கு முதலமைச்சர் வெளியிட்ட கருத்துக்களும், உயர் நீதிமன்றத்தில் ஐந்து இளைஞர்கள் காணாமற்போனமை தொடர்பான விசாரணையில் குறிப்பிடப்படும் தகவல்களும் இந்த இரகசிய முகாம்கள் தொடர்பான சந்தேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன.

போர்க் காலத்திலும், அதற்குப் பின்னரும் நாட்டில் குறிப்பாக கொழும்பிலும், வடக்குக் கிழக்கிலும் பல நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் காணாமற்போனார்கள் அல்லது கடத்தப்பட்டார்கள். விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்த கடத்தல்களும் காணாமற்போதல்களும் இடம்பெற்றன. வடக்குக் கிழக்கில் கடந்த 1996 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை பல இளைஞர்கள் இனந்தெரியாதோரால் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டார்கள். இரவு வேளைகளில் இளைஞர்களின் வீடுகளுக்கு ஆயுதங்கள் சகிதம் வாகனங்களில் வருவோர் பெயர் குறிப்பிட்டு அழைத்து இளைஞர்களை கடத்திச் சென்றதாக அவர்களின் பெற்றோர் கூறுகின்றனர். யாழ். குடாநாட்டில் இந்தக் கடத்தல் சம்பவங்கள் மிக உச்சம் அடைந்திருந்தன. குடாநாடு முற்றாக படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த வேளையிலேயே இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்தன. அதேபோன்று திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் பல தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமற்போனார்கள். அதேநேரத்தில் வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக கொழும்பில் உள்ள விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் இளைஞர்கள் பலர் இரவு வேளைகளில் அங்கு வரும் இனந்தெரியாதோரால் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் காணாமற்போனார்கள்.

இவ்வாறு கடத்தப்பட்டு காணாமற்போனவர்கள் இந்த இரகசிய இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனரா? அல்லது அவர்கள் உயிருடன் இல்லையா? என்ற அங்கலாய்ப்பே இப்போது அவர்களது பெற்றோருக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த இரகசிய முகாம்களில் இருக்கும் பிள்ளைகளை எப்படிக் கண்டுபிடிப்பது என்று ஏங்குகின்றனர் பெற்றோர்கள்.

எனவே பல ஆண்டுகளாக தமது பிள்ளைகளைக் காணாது ஏக்கத்துடனும் துயரத்துடனும் வாழ்வை நகர்த்திக்கொண்டிருக்கும் நூற்றுக் கணக்கான குடும்பங்களுக்கு உரிய பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் இந்த புதிய அரசுக்கு இருக்கிறது.

ஆகவே இரகசிய முகாம்கள் தொடர்பான தகவல்களை விரைவில் அம்பலமாக்கி இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விதைக்கும் வினை திரும்பவந்து தாக்குவதைத் தடுக்க இயலாதே....

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ்ப் பெற்றோர்களில் ஆயிரக்கணக்கானோர், தமது பிள்ளைகள் எங்கு இருக்கிறார்கள், என்ன ஆனார்கள் - என்பது குறித்த தகவல் தெரியாமல், நித்தம் நித்தம் தங்களை உருக்கிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த இருபது ஆண்டுகளாகத் தேடாத இடமில்லை, என்ற நிலையில், அங்கும் இங்கும் அலைந்தவாறு இரத்தக் கண்ணீர் வடித்து வருகிறார்கள்.

தமது வாக்குகளால் பதவிக்கு வந்த புதிய ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்திலேனும், தத்தமது இரத்தத்தின் இரத்தங்களை காணும் பாக்கியம் கிடைக்குமா என்று ஒவ்வொரு மணித் துளியிலும் ஏங்கித் தவிக்கிறார்கள்.

அந்த வகைசார் ஏக்கத்துடன், அவர்கள் யாழ். மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தையும், வடக்கு மாகாணசபை முதல்வரின் வதிவிடத்தையும், சூழ்ந்து கொண்டு தமது பிள்ளைகளை மீட்டுத் தருமாறு கதறி வீதியில் விழுந்து அழுதார்கள்; கெஞ்சினார்கள்.

வழக்கப் பிரகாரம், அரச அதிபர், பாதிப்புற்றோரின் மனுவைப் பெற்றுக்கொண்டு அதனை ஜனாதிபதிக்குக் கிடைக்கச் செய்வதாகக்கூறி அனுப்பினார்.

வடக்கின் புதிய ஆளுநர் பளியக்காராவையும் சந்தித்துத் தமது நிலையை விவரித்து தமது கோரிக்கையை வெளிப்படுத்தினர், காணாமற்போனோர்களின் இரத்த உறவுகள்.

அதே கையோடு, வடக்கின் முதல் அமைச்சரின் அலுவலகத்துக்குச் சென்று கண்ணீரும் கம்பலையுமாகக், கதறி அழுத வண்ணம் தமது கையறு நிலையை வெளிப்படுத்தினர்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் பயங்கரவாதத்தினால் காணாமற்போகச் செய்யப்பட்டோரின் நிலையும், நீறுபூத்த நெருப்பாகவே அமிழ்ந்து கிடக்கிறது.

தமது பிள்ளைகளை சுமார் 20 ஆண்டுகளுக்கும் அதிக காலமாக, காணாமற்போனோர் என்ற வகையில் வைத்து, அவர்களை மீண்டும் எப்பொழுது காண்போம் என்ற ஏக்கத்தில் வாழும் பெற்றோர்களுக்கு, சிறுதுளி ஆறுதல் தரும் தகவல் ஒன்றை முதலமைச்சர் வெளிப்படுத்தினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை (03.03.2015 இல்) வடக்குக்கு வருகை தந்த புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், காணாமற்போனோர் தொடர்பில், தாம் பேச்சு நடத்தியதாகவும் --

விசாரணைகள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை எதிர்வரும் வெசாக் தினத்துக்கு முன்பதாக பொது மன்னிப்பில் விடுவிக்குமாறு தான் ஜனாதிபதியிடம் கோரியிருப்பதாகவும் --

பதிவில் இல்லாதவர்கள் தொடர்பிலேயே பிரச்சினை உண்டு என்றும் -- முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.

முதலமைச்சர் தெரிவித்த தகவலின் - கருத்தின் பிரகாரம் - "காணாமற்போனோர்" என்ற பதிவில் இல்லாதவர்களின் நிலைமை, ஒருவகைச் சிக்கல் கொண்டதாகவே உள்ளது.

இதேவேளை --

காணாமற்போனவர்களில் ஒரு சாரார், இரகசியமான தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் அதனை உறுதி செய்வதற்குப் புதிய அரசு தயாராக இல்லை என்ற "சுழிச்சு விளையாடும் போக்கு" உயர்ந்து எழுகிறது.

ஒட்டு மொத்தத்தில் காணாமற்போன -- காணாமற்போகச் செய்யப்பட்ட -- தமிழர்கள், தமிழ் இளைஞர்கள் நிலை குறித்து வேகமாகச் செயற்படும் போக்கை அரசிடம் காணமுடியவில்லை.

மனிதாபிமானம் இருப்பின், அதில் கூர்மையான, நேர்மை சார்ந்த அக்கறை புதிய அரசுக்குத் தேவை. தங்களிடம் உள்ள இயலாத்தன்மையை தமிழ்ப் பிரசைகள் விடயத்தில் சாக்குப் போக்குக் கூறித் தமது பொறுப்பில் இருந்து கைகழுவி விடுவதற்கு முனையக் கூடாது. அது மனிததர்மமும் அன்று; நல்லாட்சியும் ஆகாது.


இப்போதைய தேசிய நிறைவேற்றுச் சபைக்கும் -- புதிய அரசுக்கும், மஹிந்த தலைமையில் செயற்பட்ட முந்தைய அரசுக்கும் இடையே வேறுபாடு இல்லை என்ற நிலைமையே மேலெழுந்து நிற்கும்.

சிரித்துச் சிரித்துத் தமிழர்களின் வாழ்வியலைக் கருவறுக்கும் மூடுமந்திரங்கள் வேண்டாமே.

தீதும் நன்றும் பிறர்தர வருவதில்லை. அவரவர் நியாயமற்ற, நீதியற்ற செயற்பாடுகளே, ஒரு கட்டத்தில் கௌவிக்கொண்டு அளவிலாச் சோதனைகளை வெளிப்படுத்துகின்றன. அது அரசியலுக்கும், ஆட்சியியலுக்கும் அச்சொட்டாகப் பொருந்தும்.

வினை விதைத்தால் அது திரும்பவந்து தாக்குவதை தடுக்க இயலாதே [illegible] வாழ்வுக்கு பொருந்துவது போன்று ஆட்சியியலுக்கும் அது நூறுவீதம் பொருந்தும்.

# சீனாவின் செல்வாக்கு பறிபோகின்றதா?



இலங்கைக்கு வரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அந்த நாட்டுக்கு இராணுவ உதவிகள் உட்பட பல வகை உதவிகளை வழங்கவுள்ளார். இலங்கையில் பல பில்லியன் டொலர்களை செலவுசெய்து சீனா பெற்றுள்ள செல்வாக்கை குறைப்பதற்காகவே மோடியின் இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன என றொய்ட்டர் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக றொய்ட்டர்ஸ் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இந்தியாவின் முன்னைய அரசாங்கங்களால் புறக்கணிக்கப்பட்ட மாலைதீவு ,மொறிஷியஸ் மற்றும் சீசெல்ஸ் தீவுகளுக்கான தனது பயணத்தின்போது மோடி உதவிகள் குறித்த வாக்குறுதிகளை வழங்குவார். 28 வருடங்களின் பின்னர் இலங்கைக்கு இந்தியப் பிரதமர் ஒருவர் பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனா இந்தசிறிய தீவுகளில் துறைமுகங்களை, மின்நிலையங்களை, வீதிகளை அமைத்துள்ளது. அதன் கடற்படையும் இந்து சமுத்திரத்திற்குள் ஆழமாக ஊடுருவியுள்ளது. கடந்த வருடம் இலங்கை துறைமுகத்திற்குள் சீன நீர் மூழ்கிகள் சென்றமை புதுடில்லியை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் பதற்றமான உறவுகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா இந்தத் தீவுகளுடன் பாதுகாப்பு உறவுகளை நெருக்கமாக்குவதன் மூலம் அவற்றைத் தனது அரவணைப்புக்குள் கொண்டுவர விரும்புகின்றது என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

[illegible] இந்தியா ஆற்றவேண்டி உள்ளது என 10 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்த தீவுகளுக்கான மோடியின் பயணத்திற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டுள்ள பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாங்கள் ரோந்துப் படகுகளை, ராடர்களை, இந்தத் தீவுகளுக்கு வழங்குகின்றோம், என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

மோடியின் பயணத்தின் நிகழ்ச்சி நிரலில் இலங்கையே முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இங்கு புதிதாக ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ள அரசு சீனாவின் அதிகரித்து வரும் செல்வாக்கு காரணமாக கவலை கொண்டுள்ளதுடன், சீனாவின் உதவியுடன் முந்தைய அரசு முன்னெடுத்த திட்டங்களை ஆய்வுக்குட்படுத்தியுள்ளது. மேலும் இலங்கை அரசு எதிர்காலத்தில் சீன நீர் மூழ்கிகளுக்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை மோடி மேலும் தீவிரப்படுத்துவார். திருகோணமலையில் ஏற்படுத்தப்பட உள்ள மின் நிலையத்துக்கான இறுதி அங்கீகாரத்தை வழங்குவார் எனவும் தெரிய வருகின்றது.

இலங்கைக்கு வழங்கப்படும் இராணுவப் பயிற்சியை மேலும் தரமுயர்த்துவது குறித்தும் இரு நாடுகளும் பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ளன.

பாதுகாப்புத் தேவைகள்:-

கடந்த வருடம் இந்திய பாதுகாப்பு அமைச்சு இந்தத் தீவுகளின் கடல் சார் தேவைகள் குறித்து ஆராய்ந்தது. அதற்குத் தீர்வு காண அது முயல்கின்றது என இந்திய பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார்.

மொறிஷியஸ் பயணத்தின் போது மோடி இந்தியாவின் 1300 தொன் கடலோர கண்காணிப்புப் படகை வெள்ளோட்டம் விடுவார்,

மொறிஷியஸுக்கு நாங்கள் கிட்டத்தட்ட கடலோர எல்லைக் காவற் படையையே வழங்கியுள்ளோம் என இந்திய கடற்படையின் முன்னாள் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ரஞ்சித் ராய் தெரிவிக்கின்றார். ஏனைய நாடுகளுக்கும் இதே போன்ற உதவிகள் தேவைப்படுகின்றன என்கிறார் அவர்.

இலங்கைக்கு மீன்பிடிப் படகுகள் தொடர்பான உதவி தேவையாகவுள்ள அதேவேளை மாலைதீவுக்கு கடற்கொள்ளையர் மற்றும் ஐ.எஸ். அமைப்பின் ஊடுருவல் போன்றவற்றிலிருந்து தன்னைப் பாதுகாப்பதற்கான உதவி அவசியமாகவுள்ளது. மாலைதீவு விமான நிலையத்தை தரமுயர்த்தும் பணிகளையும் இந்தியா மேற்கொள்ளவுள்ளது.

ஆபிரிக்காவில் கடற் கொள்ளையர்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கப்பல்கள் எரிபொருள் மீள்விநியோகத்தை மேற்கொள்வதற்கு சீசெல்ஸ் பொருத்தமான துறைமுகம் என சீனா கருதுகின்றது.

எனினும் சிறிய நாடுகள் இந்தியா அல்லது சீனாவா தங்களுக்குத் தேவை என்பதை தீர்மானிக்க வேண்டும் என்ற அழுத்தத்தை மோடி ஏற்படுத்தக்கூடாது என்கிறார் இந்து சமுத்திர பாதுகாப்பு குறித்த நிபுணர் விஜய் சகுஜா.

இலங்கை உட்பட இந்து சமுத்திரப் பகுதியில் உள்ள சிறிய தீவுகளுக்கான சீனாவின் இராணுவ ஆதரவே இந்தியாவுக்கு அதிகளவு பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால் இந்த விவகாரங்களை அவர் தனது பயணத்தின்போது கிளறாமலிருப்பது நல்லது. அது இந்தியாவா அல்லது சீனாவா என்ற நெருக்கடி நிலையை சிறிய நாடுகளுக்கு உருவாக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

*நன்றி: றொய்ட்டர்ஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ வந்தியத்தேவர்



# வரலாற்றில் இடம்பிடிப்பாரா மைத்திரி?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமக்கும் இடையில் எந்த ஒப்பந்தமும் எழுத்தில் இல்லை. ஆனால் மனதளவில் ஒப்பந்தம் இருக்கிறது. மனிதாபிமான அடிப்படையில் செய்யப்பட வேண்டும், அணுகவேண்டும் என்ற ஒப்பந்தம் இருக்கிறது. இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருக்கிறார்.

பொதுமக்களின் காணிகள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதில் தாம் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்த அவர், அலரிமாளிகை அருகே உள்ள காணிகளும் ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் உள்ள காணிகள் பலவும் திரும்பக் கையளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். மேலும், யாழ்ப்பாணத்தில் ஆயிரம் ஏக்கர் நிலத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்தில் 6 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பு விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. அந்தக் காணிகளில் வசித்த மக்கள் இடம்பெயர்ந்து இன்னமும் அகதிகளாக முகாம்களிலேயே வசிக்கின்றனர். தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி தொடர் போராட்டங்களும் நடத்தி வருகின்றபோதும், அவை விரைந்து முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும். அற்பசொற்ப உதவிகளை அவர்களுக்கு வழங்குவதால் அந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயரப்போவதில்லை. கடந்த அரசின் பொருளாதார அமைச்சு மக்களுக்கு வழங்கியதாகச் சொல்லப்படும் வாழ்வாதார உதவிகளால் எந்தவொரு குடும்பமும் வலுவானதொரு ஒரு பொருளாதார வளர்ச்சியை எட்டியதாக இல்லை. எனவே அவர்களது சொந்த நிலங்களைத் தாமதமின்றிக் கையளிப்பதன் ஊடாகவே அந்த மக்கள் தமது பொருளாதார மேம்பாட்டைக் கட்டியெழுப்ப, அரசு தனது வாக்குறுதிகளை விரைந்து செயற்படுத்துவது இன்றியமையாததாகும். போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளில் முன்னுரிமை தேவை. அரசின் நூறுநாள்வேலைத்திட்டத்தில் வடக்கில் பெரிதாக எதுவும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. அனேகஉள்ளூராட்சிமன்றங்களில் வீதிகள்கூட இன்னமும் மோசமான நிலையிலேயே உள்ளன.

எமது பகுதிகளில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் முன்வைக்கும் பிரேரணைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை ஒப்புக்கொண்டிருக்கும் அரசுத் தலைவர் இனப்படுகொலை தொடர்பான மாகாண சபையின் தீர்மானத்தை மனச்சாட்சிக்கமைய ஒப்புக்கொள்வாரென்பது தமிழ் மக்களின் நியாயமான எதிர்பார்ப்பாகும். கடந்த அரசு திட்டமிட்டு இனப்படுகொலையை நடத்தியது என்பது வரலாற்று உண்மை. புலிகள் இன்னமும் இருக்கிறார்கள் என்று முன்னர் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தபாயவும் அவரது சகபாடிகளும் தொடர்ந்தும் சொல்லி வந்தேயுள்ளனர். இந்த நிலையில் தான் பல ஆயிரக் கணக்கான தமிழ் மக்களைக் கொன்றொழித்து விட்டுப் புலிகளை அழித்துவிட்டதாகச் சிங்கள மக்கள் மத்தியில் மார்தட்டிப் பேசிக் கொண்டார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அவர் நடத்தியது இனப்படுகொலை தான் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. போர்க் குற்ற விசாரணைகளையும்துரிதப் படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்க விரைந்து செயற்படுவதன் மூலம் இனங்களுக்கிடையில்

காணிகளை விடுவிக்குமாறு கோரி தொடர் போராட்டங்களும் நடத்தி வருகின்ற போதும், அவை விரைந்து முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும். அற்ப சொற்ப உதவிகளை அவர்களுக்கு வழங்குவதால் அந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயரப்போவதில்லை.

நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பொறுப்பாகும்.

கடந்த காலங்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, யாழ்ப்பாணம் வருகிறார் என்றால் மிகப்பெரும் எடுப்பில்நகரம்பரபரப்பாகிக்கொண்டிருக் கும். இ.போ.ச. பஸ்கள் மக்களுக்கான போக்குவரத்துச் சேவையை நிறுத்திவிட்டு கூட்டத்துக்கு ஆள்களைச் சேர்க்கும் பணியில் ஈடுபடுத்தப்படும். போதாக்குறைக்கு பாடசாலை மாணவிகளைக் கொண்டு வரவேற்பு நடனம், வழியனுப்பு நடனம் என்று அதிகாரிகள் வேறு அசத்தித் தங்களது இருப்பைத்தக்கவைத்துக்கொள்வார்கள்.

இதுபோன்ற பந்தா எதுவுமின்றி சாதாரணமாக வந்து திரும்பியுள்ள ஜனாதிபதி மைத்திரியை தமிழ் மக்களின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாண முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்களும் வரவேற்று மக்களது கஷ்டங்கள் பிரச்சினைகளை எடுத்துக்கூறியதுடன் தமிழ் மக்களின் தலையாய பிரச்சினையாகவுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் உரையாடியுள்ளனர்.

நீண்டகால அரசியலில் இருக்கும் ஒருவர் என்ற வகையிலும் இந்த நாட்டில் தீர்க்கப்படவேண்டிய முக்கிய பிரச்சினை எது என்பதும், அதனைத் தீர்க்க விரும்பாத அரசியல்வாதிகளால் நாடு எந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதையும் புரிந்து வைத்திருக்கும், ஒரு அரசியல்வாதி என்பதாலும் கடந்த கால ஆட்சியில் பாஸிசத்தை நோக்கி நகர்ந்து வந்த அரசுக்கு எதிராக ஒரு நல்லாட்சி நோக்கிய ஜனாதிபதி யாக பதவியேற்றுக் கொண்ட மைத்திரிபால சிறிசேன தமிழர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரமான நீதியான தீர்வைப் பெற்றுக் கொடுத்த ஒருவராக வரலாற்றில் இடம்பிடிக்கப் போகிறாரா? அல் லது நான்கு வருடம்தானே ஒரு மாதிரி இழுத்தடித்துக்காலத்தைகடத்தி விடுவோம் என்றிருக்கப் போகிறாரா? என்று பொறுத்திருந்து பார்ப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 1 | | | 7 | | |
| | 3 | | 5 | | 6 | | | |
| | | | 9 | 7 | 3 | 5 | 4 | |
| 3 | 1 | 5 | | | 9 | | | 4 |
| 7 | | | | | | | | 1 |
| 6 | | | 8 | | | 3 | 5 | 9 |
| | 2 | 6 | 7 | 3 | 5 | | | |
| | | | 4 | | 1 | | 2 | |
| | | 9 | | | 2 | | | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 7 | 8 | 3 | 2 | 4 | 1 | 5 |
| 5 | 1 | 3 | 6 | 4 | 7 | 8 | 9 | 2 |
| 8 | 2 | 4 | 9 | 5 | 1 | 3 | 7 | 6 |
| 7 | 8 | 1 | 4 | 2 | 3 | 6 | 5 | 9 |
| 9 | 6 | 2 | 1 | 8 | 5 | 7 | 3 | 4 |
| 4 | 3 | 5 | 7 | 9 | 6 | 1 | 2 | 8 |
| 3 | 4 | 6 | 5 | 1 | 9 | 2 | 8 | 7 |
| 1 | 5 | 8 | 2 | 7 | 4 | 9 | 6 | 3 |
| 2 | 7 | 9 | 3 | 6 | 8 | 5 | 4 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள் ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரை யிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறு வன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக் கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நீரிழிவு நோயாளிகளுக்கு

### காலில் ஏற்படும் பாதிப்புகள்

நீரிழிவு நோயாளிகளுக்கு அழுத் தத்தைத் தாங்கக்கூடிய கால் பகுதியில் அடிக்கடி புண் ஏற்படும். ஒவ்வொரு ஆறாவது நீரிழிவு நோயாளிக்கும் பாதப் புண் பிரச்சினை ஏற்படுகிறது. இதனால் கால் துண்டிக்கும் அளவுக்குப் பிரச்சினை செல்கிறது. உலக அளவில் கால் துண்டிப்பு செய்வதற்கு, 85 சதவிகி தம் அளவுக்குப் பாதங்களில் ஏற்படும் புண்ணே காரணமாக உள்ளது.

கால்களை தினசரி கவனித்தல்:
வெட்டுக்காயங்கள், வெடிப்புகள், கொப் புளங்கள், சிவந்துபோய் இருத்தல், வீக்கம், நகங்களில் பிரச்சினை உள்ளதா என்பதை தினசரி கவனிக்க வேண்டும். கண்ணாடி உதவியுடனோ அல்லது அடுத்தவர் உதவியுடனோ அடிப்பாதங் களைப் பார்க்க வேண்டும். ஏதேனும் வித்தியாசமாக இருந்தால், உடனடி யாக வைத்தியரை அணுக வேண்டும். அன்றாடம் கால்களைக் கழுவி சுத்த மாக வைத்துக்கொள்ள வேண்டும். மிதமான வெந்நீரைப் பயன்படுத்த வேண்டும். கால்களை மென்மையான துணி அல்லது பஞ்சு வைத்து கழுவவேண் டும். அழுத்தமாகத் துடைக்காமல் ஒற்றி ஒற்றி ஈரத்தை எடுக்க வேண்டும். கால் விரல்களுக்கு இடையே ஈரம் இல் லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வெறும் காலுடன் நடக்கக்கூடாது. வீட்டில்கூட செருப்பு அணிந்து நடக்க வேண்டும். புகை பிடிக்கக் கூடாது. இத னால், கால்களில் இரத்த ஓட்டம் குறையும்.





## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

### நம்பிக்கையுடன் செயலாற்றுங்கள்

உங்களால் உங்கள் இயல்பை மாற்றமுடியாது. இயற் கையால் இயற்கையை அழிக்க முடியாது. உங்கள் இயற்கைதூய்மை.அது இலட்சக்கணக்கான யுகங்களாக மறைக்கப்பட்டு இருக்கலாம். ஆனால் இறுதியில் வென்று மேலே வரும். எனவே நம்பிக்கையை இழக்காதீர்கள். நம்பிக்கையுடன் செயலாற்றுங்கள். வெற்றி நிச்சயம்.

## கோயிலுக்குள் செல்லுமுன் பாதணியை கழற்றிப் போடுவது ஏன்?

ஞானச்சுடர்



புண்ணிய கருமங்கள் எல்லாமே காலணி இல்லாமற் செய்யவேண்டும் என்று கூறுவதுண்டு – என்றாலும் கோயிலில் நுழையும்போது பாதணி அணிவது ஆகாது என்பது கட்டாயம். சில கோயில் களில் சட்டையும் அணிவது தடை செய்யப்பட் டுள்ளது. ஆனால் எல்லாக் கோயில்களிலும் பாதணியணிவது கட்டாயமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தத் தடை காரணமாக சிலர் கோயிலுக்கு வெளியில் நின்று வணங்கி விட்டுச் செல்வதையும் நாம் காண்கின்றோம்.

கோயில் சுவர்களுக்குட்பட்ட இடம் தெய்வபூமி என்பதே இந்துமத நம்பிக்கை. இறைவன் வேறெங்கும் நிலைகொள்ளவில்லை என்று இதற்கு அர்த்தம் கொள்ள வேண்டாம். பாதணியைக் களைந்து கோயிலுக்குள் நுழையும் பக்தரின் பாதங்கள் இயல்பாகவே காந்த சக்தியுடைய தலையில் பதிகின்றன. மனிதனின் உடல் நலத்துக்கு உத்தமமானதெனக் கண்டறிந்துள்ள பூமியின் காந்த சக்தியின் ஒழுக்கு, பாதம் தலையில் பதியும்போது உடலுக்குள் செலுத்தப்படுகின்றது. அதுமட்டுமல்ல மூலிகைகளுடைய மலர்களும் இலைகளும் கலந்த தண்ணீர் விழுந்த பூமியானதால் கோயில் சுற்றுமுள்ள மண்ணுக்கு மருத்துவக் குணங்களும் இருக்கலாம்.

இவையெல்லாம் மனதில் கொண்டு கர்வத்தையும் காலணியையும் களைந்து இறை தரிசனம் செய்யும்போது நவீன சாஸ்திரம் விவரிக்கின்ற "மாக்னடிக் தெரபி" அல்லது காந்த சிகிச்சை நம்முள் நடக்கின்றது. இஷ்ட தெய்வத்தை நினைத்து தியானித்து வெகுநேரம் கோயிலில் செலவழிக்கும்போது மனதுக்கும் உடலுக்கும் ஒரேபோல் நன்மைகள் கிடைக்கப் பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

## நாளை

மாசி-23
சனிக்கிழமை
07.03.2015

திதி: துதியை பி.இ.04.11 வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.ப.02.22 வரை
சுபநேரம்: 3.25.-04.55 வரை
இராகுகாலம்: 09.25-10.55 வரை

## தவக்காலச் சிந்தனை

### மண்ணா, விண்ணா? பெரியது

இவ்வுலக வாழ்வு என்பது இறைவன் வழங்கிய மாபெரும் கொடையாகும்: அதன் இறுதிப் பயன் எமது வாழ்வியலின் போக்குகளைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. நற்செயல் களைத் தீச்செயல்களால் மழுங்கடிக்கத் துடிக்கும் இவ்வுலகில், நாம் எதைத் தேர்ந் தெடுக்கிறோமோ அதன் விளைச்சலையே அறுவடையாகப் பெறுவோம். அந்த அறு வடை நேரம் இன்றோ? நாளையோ? அது எம்கையில் இல்லை. படைத்தவன் அழைக் கும் போது படியேறத் தயாராக இருக்க வேண்டும். "நீங்களும் ஆயத்தமாக இருங் கள்; ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிட மகன் வருவார்" (லூக் 12:40)

இயேசுவே எம் கடவுள், தலைவர் என்று கூறிக்கொள்ளும் நாம் அவர்தந்த வாழ்வின் செல்வத்தை எவ்வாறு பயன்படுத்துகிறோம்? பொறுப்புக்கள் மட்டில் பிரமாணிக்கமாக இருக்கிறோமா? இவ்வுலக செல்வத்தை முதன்மைப்படுத்தும் போது விண்ணுலகப் பரிசு பின்தள்ளப்படுகிறது. இயேசு இவ்வுலகில் துன்பங்கள் பாடுகள் சிலுவையை ஏற்றார். விண்ணுலகில் தந்தையில் அரியணையில் சம பங்கேற்றார்.

எம்மிடமுள்ள பணம், பதவி, ஆற்றல், கல்வி, பண்பு, அன்பு , மன்னிப்பு என்பன விண்ணக செல்வ மீட்டும் படிக்கற்களாக அமையட்டும். பிறர் வாழ்வை வளமூட்ட உதவட்டும். அதன் வழியாக இறைவன் அழைக்கும்போது நற்கதிபெற எம்மைத் தயார்படுத்துவோம்.

*எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.*


## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 700 | 700 | 600 | 550 |
| நண்டு | 250 | 300 | 350 | 300 | 200 | 300 |
| கணவாய் | 500 | 450 | 600 | 500 | 400 | – |
| பாரை | 450 | 400 | 550 | 450 | 600 | 370 |
| சுறா | 500 | 500 | 600 | 600 | 600 | 450 |
| சீலா | 300 | 350 | 400 | 400 | 400 | 350 |
| விளை | 550 | 350 | 550 | 450 | 400 | 300 |
| முரல் | 300 | 300 | 400 | 300 | 300 | 250 |
| கும்பிளா | 350 | 380 | 500 | 400 | 400 | 250 |
| கிழாக்கன் | 300 | 500 | 450 | 350 | 400 | – |
| ஒரா | 300 | 300 | 400 | – | 300 | – |
| திரளி | 150 | 200 | 230 | 200 | – | 100 |
| நகரை | 150 | 250 | 330 | 300 | 200 | 250 |
| சூடை | 100 | 100 | 100 | 100 | 100 | 70 |
| ஒட்டி | 100 | 150 | 250 | 200 | – | 100 |
| திருக்கை | 150 | 250 | 250 | 230 | 200 | 140 |
| பாலை | 400 | 300 | 300 | 350 | 600 | – |
| வாளை | 100 | 100 | 300 | 250 | 600 | 250 |
| கொய் | 100 | 100 | 80 | 100 | 150 | [illegible] |
| மதனம் | 150 | 200 | 300 | 250 | – | 250 |

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 40 | 30 | – | 20 | 30 | 40 | 20 |
| கத்தரி | 120 | 120 | 120 | 120 | 120 | 120 | 120 | 90 |
| கரட் | 120 | 120 | 120 | 120 | 100 | 140 | 120 | 150 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 40 | 60 | 45 | 40 |
| பயிற்றை | 60 | 70 | 40 | 40 | 70 | 100 | 80 | 80 |
| பாகல் | 80 | 80 | 100 | 80 | 100 | 140 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 40 | 60 | 80 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 70 | 80 | 90 | 70 | 80 |
| சி.வெங்காயம் | 50 | 80 | 50 | 70 | 70 | 120 | 80 | 60 |
| பூசணி | 70 | 70 | 80 | 60 | 80 | 100 | 120 | 100 |
| தக்காளி | 80 | 50 | 50 | 30 | 40 | 60 | 120 | 40 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 70 | 60 | 80 | 80 | 70 |
| கீரை | 20 | 20 | 30 | 06 | 20 | 20 | 35 | 25 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 30 | 25 | 10 | 10 | 15 |
| பச்சை மிளகாய் | 60 | 80 | 80 | 60 | 70 | 100 | 150 | 130 |
| புடோல் | 60 | 60 | 80 | 40 | 60 | 60 | 80 | 60 |
| கோவா | 50 | 60 | 40 | 50 | 40 | 100 | 80 | 40 |
| வெண்டி | 50 | 60 | 40 | 30 | 50 | 80 | 80 | 40 |
| போஞ்சி | 100 | 120 | 80 | 120 | 100 | 200 | 220 | 150 |
| லீக்ஸ் | 150 | 160 | 160 | 140 | 180 | 200 | 170 | 120 |
| தேங்காய் | 60 | 45 | 60 | 50 | 45 | 60 | 35 | 45 |
| உருளைக்கிழங்கு | 90 | 70 | 80 | 70 | 70 | 80 | 65 | 70 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 | 30 | 40 | 60 | 40 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 160 | – | 200 | 160 | 160 | 120 | 200 | 200 |
| இராசவள்ளி | 120 | – | 100 | 80 | 80 | 140 | 120 | 80 |
| பனங்கிழங்கு | 04 | 02 | 05 | 02 | 03 | 05 | 03 | – |
| முருங்கைக்காய் | – | – | 200 | – | – | – | 200 | – |
| பீற்றூட் | – | – | 60 | – | – | – | – | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மாதங்களில் பிறந்தவர்களின் பலன்கள்

சூரியன் தனது சுழற்சிக் காலத்தில் மிதுன ராசியில் சஞ்சரிக்கும் காலம் ஆனி மாதம் என்று அழைக்கப் படுகிறது. இந்த ராசி புதனுக்கு ஆட்சி வீடு ஆகும். பஞ்ச தத்துவங்களில் ஒன்றான காற்றை இந்த ராசி பிரதிநிதித் துவப்படுத்துகிறது. இதனால், புதனுக்கே உரிய பிரத்தியேக குணங்களான நடுநிலை தவறாமை, நுண்ணறிவு, உதவும் மனப்பான்மை, யுக்தி, சாதுரியம், எதையும் கற்றுக் கொள்வதில் ஆர்வம், வேகமாகச் செயற்பட்டு காரியங்களை முடிக்க முனைதல், தந்திரம், நகைச்சுவை உணர்வு, கேளிக்கை, கிண்டல் முதலியவற்றில் எல்லையில்லாத ஆர்வம், கதைகளில் ஈர்ப்பு போன்றவை இந்த மாதத்தில் தோன்றியவர்களிடத்தில் அதிகமாகக் காணப்படும்.

**தோற்ற அமைப்பு**

மெலிந்த, உயரமான உடலமைப்பு, நீள்முகம், விரிந்த, அகன்ற நெற்றி, நீள்புருவம், குறுகுறுக்கும் பார்வை ஆகியவற்றுக்குச் சொந்தக் காரர்கள். அகன்ற வாயும் மேல் உதடு தடித்தும் குவிந் தும் காணப்படும். செவிகள் விரிந்து இருக்கும். தோள்கள் தடித்திருக்கும். வேகமான நடைப் பாங்குடையவர்.

**குணம்**

நிரந்தரக் கொள்கைகள் இவர்களிடம் காணப்படாது. அடிக்கடி தாம் எடுக்கும் முடிவுகளை மாற்றிக்கொண்டே இருப்பர். செயலில் ஈடுபடும் போது மற்றொன்றாக முடியும். இவரிடத்தில் பழகாதவர்கள் இவரைப் பற்றிப் புரிந்து கொள்வது அசாத்தியமான காரியம். நெருங்கிப் பழகுபவர்களும் இவரைத் தவறாகவே புரிந்துகொள்வர். வெகு சீக்கிரமாகக் கிரகிக்கும் தன்மையுடையவர்.

அதுபோலவே வெகு சீக்கிரத்தில் மனதை மாற்றிக்கொள்ளவும் இவர்களால் முடியும். அவசர காரர்கள் என்றாலும் தந்திரசாலிகள். உள்ளத்தில் இருப்பதை வெளிப்படுத்த மாட்டார்கள். பிறர் உள்ளத்தைச் சோதித்துப் பார்ப்பவர். அவசரத்தால் ஆகாது என்று தெரிந்தவுடன் கொள்கையை மாற்றிக்கொள்வர். வைகாசியில் தோன்றியவர்களைப் போல் இவர் பொறுமைசாலிகளல்லர்.

துயரத்தை வரவேற்கவும், கஷ்டத்தைத் தாங்கவும் மாட்டார்கள். இத்தகைய சந்தர்ப்பங்கள் வாழ்க்கையில் நேரிடும்போது மெல்ல நழுவிக் கொள்வர். சீரப்பிராசையால் எதையும் செய்யத் துணியார். ஆனால் காரியங்களை வெகு சுலபமாக்கிக்கொள்வர். ஆரம்பித்த காரியங்களில் தலையிடுவர். இவருக்குத் தெரியாத விஷயங்கள் எவை என்ற கேள்விக்கு உறுதியாக ஒன்றையும் இவரை குறிப்பிடவும் முடியாதாம். மேதாவிகளைப்போல் பிறர் புலனுக்குத் தோற்றமளித்திடுவர். இவர் கற்றுத் தோற்றது பல. இவர் ஆலோசனை களைக் கேட்டறிந்து செயலில் ஈடு பட லாம். ஆனால் இவரை சகாயத் திற்கு மட்டும் அழைக்கலாகாது. சகாயத்திற்கு அழைத்தவர் களுக்கு அபாயம் நேரிடுவது போல் தெரிந்தால், இடையில் இவர்கள் சொல்லாமல் நழுவி விடுவார்கள்.

இவர்கள் காரியவாதிகளல்லர். இலட்சியவாதிகளும் அல்லர். சம யோசித சூழ்நிலைக்கேற்றவாறு கருத்தை மாற்றிக் கொள்வர். தம்மைப் பாதிக்காமலிருக்கும் காரியங்களிலும் அதிகப் பொறுப்பு ஏற்படாமலிருக்கும் துறைகளிலும் இவர் தைரியமாக தோன்றிடுவர்.

கடன் வாங்குவதென்றால் இவருக்குப் பயம். கடன் வாங்கினாலும் கூடிய சீக்கிரத்தில் திருப்பிக் கொடுத்திடுவர். இல்லாமலிருந்தாலும் அதிகப் பிரயாசைக்குள்ளாகமாட்டார்.

பழகாதவர்களிடத்திலும் இவர் நீண்டநாள் பழகியவர்போல் பழகுவர். மூளைதான் இவருக்கு மூலதனம். இதைக்கொண்டு வியாபாரமோ, தொழிலகங் களோ நிறுவினால் நிர்மூலமாகி, வேறு தொழிலில் ஈடுபடவேண் டிய நிர்ப்பந்தம் உண்டாகும். புத்தகங்களில் அதிக ஈடுபாடுள் ளவர்கள். தர்க்கத்திலே தாம் தோல்வியுற நேர்ந்தாலும் குதர்க்கம் பேசுவதில் வித்தகர். வாதிகளிடத்தில் விதண்டாவாதியுமாவர். ஒரே கல்லில் இரண்டு கனிகளை அடையும் சாதுரியமுடையவராக இருப்பார்.

**நோயும் குணமாவதும்**

சிறு வயதில் தொண்டையில் ரணம் உடைய வர்களாக விளங்குவர். இதற்குக் காரணம் குளிர் பானங்கள், ஐஸ்கிறீம் போன்றவற்றை உட்கொள்வதே. இதனால் இருமல், சளி, தொண்டையில் சதை வளருதல் போன்ற உபாதைகள் ஏற்படும். இதனால் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளவும் நேரிடும். கூடாத பொருள்களை அறவே நீக்குவது சாலச் சிறந்தது. வயது வளர வளர, இந்த மாதத்தில் தோன்றியவர்கள் ஆழ்ந்த யோசனையில் ஈடுபடுவதால் நரம்புத் தளர்ச்சி போன்ற பிணிகளுக்கு இடந்தர நேரிடும்.

கூடுமானவரையில் குடிப்பதற்கு வெந்நீரை உபயோகிப்பது நலம். உணவும் சூடு குறையாமல் இருப்பது மிகவும் நல்லது. தனித்திருக்கும்போது ஏதாவதொரு சிறு பணியில் ஈடுபடுவது சிறந்தது. குளிர்ந்த தண்ணீரில் நீராடுவது கூடாது. வெந்நீரும் நன்கு கலந்து, சற்று ஆறிய நீரே உகந்தது.

இரும்புச் சத்து அதிகமுள்ள காய்கறிகளையும் வஸ்துக்களையும் உட்கொள்வது மிகவும் சிறந்தது. மேலே கூறிய இம்முறைகளை இவர் கையாண்டு வருவாரா யின் என்னென்றும் நோயற்று நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

**நிறை குறைகள்**

கஷ்டப்பட்டு முன்னுக்கு வரக் கூடிய ஆற்றல் மிக்கவர். எதையும் கூர்ந்து நோக்கும் ஆராய்ச்சித் திறனுடையவர். எக்காரியத்திலும் நல்லது, கெட்டது என இரண்டையும் அலசிப் பார்த்துப் பின்னர் செயலில் ஈடுபடுவர்.

அதிகக் கஷ்டத்தை ஏற்கத் தயங்குவர். பொறுப்பை ஏற்பதென்றால் இவருக்கு வேம்பு. ஆனால் எதையும் ஏற்றுக்கொண்ட பின்னர் முழு முயற்சியுடன் சாதித்து முடித்திடுவர். இவர் தனக்கெனப் பாடுபடாவிட்டாலும் பிறருக்காக ஈடுபடும் விவகாரங்களில் மிகவும் உற்சாகம் கொண்டவர். இவருக்கென சில கொள்கைகளை வகுத்துக் கொள்வர். தம்முடைய அபிப்பிராயத்தைத் துச்சமென மதிப் பவர்களிடத்தில் இவர் உறவு கொள் ளார். கடு கடுப்பானவர். பிறர் மனதைப் புண்படுத்தும்படி பேசுவதென்றால் சந்தர்ப்பத்தை நழுவவிடார். ஏழை எளியவர்களுக்கு உபகாரி. ஆனால் பணக்காரர் என்றால் இவர் எதிரியாகவே பாவிப்பார். கேளிக்கை விநோதங்களில் இவருக்கு மிக்க ஆர்வமுண்டு.

விளையாட்டுப் பந்தயங்களிலும் கலந்து கொள்வர். சண்டை சச்சரவுகளில் இவர் மறைந்து கொள்வர். அதிக சிரமம் இல்லாமல் அரிய, பெரிய காரியங்களைப் பிறர் வியக்கும் வண்ணம் சாதிக்கும் திறமையுடை

## ஆனி

யவர் தந்திரமாகச் சாதிக்கக் கூடிய கரரியங்களில் விடாக் கண்டர்கள். தரகு, மத்தியஸ்தம் செய்யும் துறைகளில் இவர்களைக் கருவியாகப் பயன்படுத்தினால் காரிய வெற்றியும் கைமேற் பலனும் கிட்டிடும்.

**துணை**

ஐப்பசி, மாசி மாதத்தில் தோன்றிய பெண்களை வாழ்க்கைத் துணவியாக ஏற்கவும் தொழிலில் கூட்டாளிகளாகச் சேர்த்துக் கொள் ளவும் உகந்தது. கார்த்திகை, தை மாதத்தில் பிறந்தவர்களுடன் சேர்ந்தால் விரோத மும், வஞ்சகமும், ஏமாற்றமும் ஏற்படும்.

**தொழில்**

ஒரே இடத்தில் நிரந்தரமாக இருக்கக் கூடியவர்களல்லர். நிரந்தரமாக உட்கார்ந்து செய்யக்கூடிய கடினமான வேலைகளுக்கு இவர் தகுதியுடையவரல்லர். சதா காலமும் சுற்றுப் பிரயாணம் செய்யும் காரியங்களிலும் பிறர் செய்த காரியங்களை மேற் பார்வை செய்யும் விவகாரங்களிலும் கணக்குகளைப் பரிசோதித்தல், தொழில் ஸ்தாபனங்களுக்கு முக்கியப் பிரதிநிதிகளாக வேலை பார்த்தல், தகராறுகளை மத்தியஸ்தம் செய்தல், தரகு பேசுதல், மொழி பெயர்த்தல் போன்ற காரியங்களில் இவர் சிறந்த திற மைசாலிகளாக விளங்குவர்.

அதிக சரீர உழைப்பின்றி மூளையின் உதவியைக் கொண்டு புத்திகூர்மையாலும் வாக்கு சாதுரியத்தாலும் சாதிக்கக்கூடிய செயல்களில் இவர் திறமை சோபிக்கும். சட்ட நுணுக்கங்களை ஆராய்வதிலும் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதிலும் பிறர் குற்றங்களை வேவு பார்ப்பதிலும் இவருக்கு நிகர் இவரேதான். ஆனால், இவரைப் பிறர் கட்டுப்படுத்துவதோ, அடிமையாக்கிக் கொள்வதோ முடியாத காரியம். சுயேச்சைவிரும்பிகள். இவருடைய விருப்பத்துக்கு விட்டுக் கொடுத்தால் தான் இவரால் காரியத்தைச் சாதிக்க முடியும். இல்லையேல் ஆரம்பித்தவை முடிவுபெறாமலேயேநிற்கும்.

# குடும்பத்தோடு ஒன்றி வாழுங்கள் !



பிள்ளைகள் தற்போதெல்லாம் நன்கு படித்துவிட்டு நல்ல வேலைக்குச் சென்றதுமே குடும்பத்தில் இருந்து சற்று விலகி வாழ ஆரம்பித்து விடுகிறார்கள். சில பிள்ளைகள் தங்களது உண்மையான சம்பளம் எவ்வளவு என்று கூட பெற்றோரிடம் சொல்லாமல் மறைத்து விடுகின்றனர். பிள்ளைகள் பிறந்தது முதல் வளர்த்து படிக்க வைத்து நல்ல பணியில் சேரும் வரை அனைத்துச் செலவுகளையும் பெற்றோர் பார்த்து பார்த்து செய்யும் போது, அவர்களது உண்மையான சம்பளம் என்ன என்று சில பெற்றோர் அவர்களது நண்பர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ள நேரிடுகிறது. இது, கூட்டுக் குடும்பங்களாக இருந்து தனிக் குடும்பங்களாக மாறிய தன் பின் விளைவுகள் என்பதை யாரும் மறுக்க முடியாது. எவ் வாறு ஒரு மிகப் பெரிய குடும்பத் தில் இருந்து பிரிந்து, தனியாக சுதந்திரமாக வாழ நாம் ஆசைப் பட்டோமோ, அது [illegible] இருந்து பிரிந்து அவர் களது இஷ்டப்படி வாழ நமது பிள்ளைகளும் பிரியப்படுகிறார்கள். கணவரோ, மனைவியோ இருவருமே அவர்களது பெற்றோர் மற்றும் சகோதர, சகோதரிகளுடன் நல்ல உறவைப் பேண வேண்டும். அதுபோல, மனைவியின் குடும்பத் தோடும் நல்ல முறையில் பழக வேண்டும். மனைவியையும் அவளது தாய், தந்தை வீட்டுக்குச் செல்லவும், அவர்களது சகோதர, சகோதரிகளைக் கவனித்துக் கொள்ளவும் வாய்ப்பு அளிக்க வேண்டும். சில மனைவிகள் தங்களது குடும்பத்தை மட்டும் பார்த்துக் கொண்டு, கணவரின் குடும்பத்தை கவனிக்காமல் விட்டுவிடுவார்கள். அவ்வாறு இல்லாமல், பெண்கள் தங்களுக்கு உள்ள சமூக அக்கறையை கருத்தில் கொண்டு கணவரது பெற்றோரையும் தம் பெற்றோர் போல காக்க வேண்டும். தனிக் குடும்பங்களாகப் பிரிந்தாலும், சில நல்ல, கெட்ட காரியங்களுக்கு ஒன்று கூடி, சகோதரத்துவத்தை நிலைநாட்டினால், நமது பிள்ளைகளுக்கும் குடும்பங்கள் மீதான ஒரு நம்பிக்கை மற்றும் பற்றுதல் ஏற்படும். அவர்களைப் பற்றிய அக்கறை பெற்றோருக்கு [illegible] அவரது சித்தப்பா, பெரியப்பா, அத்தை மாமாக்களுக்கும் உள்ளது என்பது அவர்களை குடும்பத்தில் இருந்த விலகிச் செல்ல விடாமல் தடுக்கும். எனவே, கூட்டுக் குடும்ப முறையை மறந்து விட்ட பலரும், தனிக் குடும்பங்களையாவது குடும்பங்களாக வைக்கப் போராடுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தன்வினை தன்னைச் சுடும்




ஒரு ஊரில் செல்வந்தர் வீட்டின் தொலைபேசி கட்டணம் மிக அதிகமாக வந்தது. அப்பா சொன்னார், நான் நம்ம வீட்டு போனை உபயோகப்படுத்துவதே இல்லை. ஆனாலும் இவ்வளவு தொகை வந்து இருக்கு? யார் இதற்கு காரணம்? என்று யோசித்துக் கொண்டு தன் மனைவியிடம் கேட்டார். நானும் அலுவலக தொலைபேசி மட்டுமே உபயோக படுத்துகிறேன்.எனக்குத் தெரியாது அவரும் கூறிவிட்டு, தனது மகனிடம் கேட்குமாறு கூறினார். மகனும், நான் காரணம் இல்லப்பா. நான் அலுவலகம் கொடுத்த கைபேசியைத்தான் உபயோகப்படுத்துகிறேன். எனக்கும் தெரியாதுப்பா! என்றான் நாம் யாரும் உபயோகப்படுத்த வில்லை என்றால் எப்படி இவ்வளவு கட்டணம் வரும். தலையைப் போட்டு உடைத்துக் கொண்டிருந்தார். வாடிக்கையாளர் சந்தேகம் தீர்க்க, தொலைபேசி நிறுவனத்துக்கு அழைத்துக் காரணம் கேட்டார். அதில் எந்த மாற்றம் இல்லை எனக் கூறிவிட்டனர் அது வரைக்கும் அமைதியாக இருந்த வேலைக்காரன் சொன்னான், உங்களை மாதிரித் தான் நானும். என்னுடைய அலுவலக தொலை பேசி மட்டுமே பயன்படுத்துகிறேன். ஐயா, என்ன தப்பு இருக்கிறது என்ற மனகுமுறலோடு சில நேரங்களில் நாம் செய்யும் தவறு நமக்கே புரிவதே இல்லை, வேறொருவர் நமக்கு அதை செய்யும் வரை...!

# வர்ணம் தீட்டலாம் வாங்க...





# இரண்டாவதாக வழங்கப்பட்ட வாய்ப்பு



மின்சார பல்பைக் கண்டுபிடித்தது யார் என்று கேட்டால், தோமஸ் அல்வா எடிசன் எனப் பட்டெனக் கூறிவிடுவீர்கள். அவர் மின்சார பல்பைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர் ஆயிரம் முறையாவது சோதித்துப் பார்த்திருப்பார். ஒரு நாள் எடிசனின் சோதனை வெற்றிபெற்றது. அவரது உதவியாளர்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர். அப்போது எடிசன், அலுவலகப் பணியாளரை அழைத்தார். 'இந்த பல்பைச் சோதனை செய்" என்றார் எடிசன். எடிசன் சொன்னவுடன் அவனுக்கு ஒரே பதற்றம். பல்பை வாங்கும்போதே தவறுதலாகக் கீழே போட்டுவிட்டான். எடிசனுக்குக் கோபம் வந்தது. ஆனால், ஒன்றும் சொல்லவில்லை. எடிசன் தன்னை வேலையை விட்டு அனுப்பிவிடுவார் என்று அந்தப் பணியாளன் பயந்தான். எடிசன் மீண்டும் ஒரு புதிய பல்பை உருவாக்கினார். மறுபடியும் அதே அலுவலகப் பணியாளரை அழைத்தார். 'இந்தப் பல்பையாவது சரியாக வாங்கிச் சோதனை செய்" என்று சொன்னார் எடிசன். எடிசனின் இந்தச் செயல் அவரது உதவியாளர்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது. அவர்களுள் ஒருவர், "ஏற்கெனவே ஒரு முறை பல்பை உடைத்துவிட்டான், மீண்டும் அவனுக்கு எதற்கு வாய்ப்புதர வேண்டும்?" என்று கேட்டார். இன்னொரு உதவியாளரோ, 'மீண்டும் அவன் பல்பை உடைத்துவிட்டால் உங்கள் உழைப்பு வீணாகிவிடாதா" என எடிசனிடம் கேள்வி எழுப்பினார். அதற்கு எடிசன் பொறுமையாகப் பதில் கூறி னார். 'இந்தப் புதிய பல்பை உருவாக்குவதற்கு எனக்கு ஒரு நாள் தான் ஆனது. மீண்டும் அது கீழே விழுந்து உடைந்து விட்டால், ஒரேநாளில் என்னால் புதிதாக இன்னொரு பல்பை உருவாக்கி விடமுடியும்.ஆனால்,இந்தவேலையை மறுபடி அவனிடம் ஒப்படைக்காவிட்டால், அவன் தன்னுடைய தன்னம்பிக்கையை இழந்துவிடுவான். அதை மீண்டும் அவ்வளவு எளிதாக அவனிடம் உருவாக்க முடியாது. அப்படி நடப்பதை நான் விரும்பவில்லை' என்று சொன்னார்.



# மழையே வந்திடு!



மழையே மழையே வந்திடு
மண்ணில் வந்து விழுந்திடு!
உழவே செழிக்க வந்திடு
உயிரைக் காக்க வந்திடு!
பச்சை கொஞ்சி வயலிலே
பயிர்கள் செழிக்க வந்திடு!
இச்சை கொண்டு மக்களே
இனிதே வாழச் செய்திடு!
தாகம் தீர்க்க வந்திடு
தாயாய் வந்து நின்றிடு!

மேகம் திரண்டு வானிலே
மின்னல் இடியுடன் வந்திடு!
கானல் நீக்க வந்திடு
கங்கை, பொன்னியில் வந்திடு!
வேனல் போக்க இன்பமே
வீற்றிருக்க வந்திடு!
காடு செழிக்க வந்திடு
கனிகள் கொடுக்க வந்திடு!
நாடு செழிக்க வைத்திடு
நல்ல மழையே வந்திடு!

*(நேற்றைய தொடர்ச்சி)*

அந்தக் குறிப்பிட்ட குடும்பத்துடன் தொடர்பில் உள்ள உறவினர்களைக் குறைந்த பட்சமாகப் பாதிக்கின்றது. அந்தக் குடும்பத்தின் தாக்கம், தொடர்பு ஆகியவைகள் மற்றவர்களைப் பொறுத்து சமூகத்தில் எந்த அளவுக்கு இருக்கின்றதோ அந்த அளவுக்கு சமூகத்தையும் பாதிக்கின்றது.



எறும்புக் கூட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள் அதன் சமூகத்தை படைப்பது ராணி எறும்புதான். அந்த ராணி எறும்பைச் சுற்றியே எறும்புகளின் சமூகம் தனது பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட கூட்டத்தின் ராணி எறும்பை மட்டும் தனியாகப் பிரித்து உலகின் எந்த மூலையில் வைத்திருந்தாலும், அந்த எறும்புக் கூட்டம் இயங்கிக் கொண்டே இருக்குமாம்.அந்த ராணி எறும்பு எப்போது சாகின்றதோ அப்போது தான் அந்தக் கூட்டத்தின் செயற்பாடுகளில் சம மின்மை ஏற்படுமாம். எறும்புகளின் எந்த சக்தி அதன் ராணி எறும்பை உலகின் எந்தப்பகுதியில் இருந்தாலும் மற்ற எறும்புகளை இயக்குகின்றதோ, அந்தச் சக்தி தான் இந்த சங்கிலித் தொடர்பு கோட்பாட்டை புரிந்து கொள்வதன் அடிப்படை.

இந்த விதியை நாம் உணரும்போது சமூகத்தின் ஏதாவது ஒரு இடத்தில் இருந்து நமது நன்மைக்காக நமது காரியங்களை இந்த சங்கிலித் தொடர்புவிதி மூலமாக விரைவு படுத்தலாம்.நமது மனதை ஆக்கிரமித்துள்ள ஏதாவது ஒரு குற்ற உணர்வில் இருந்து மனச் சாந்தி பெறலாம்.நமது மனச் சங்கிலி உறவு எப்போதாவது செயற்படவில்லை .அதில் ஏதோ தடங்கல் ஏற்படுகின்றது என்றால் அதனை அடுத்த ஏதாவது ஒரு கன்னியில் இருந்து சீர் படுத்தலாம் .

நாம் மற்றவர்கள் மனதில் ஏற்படுத்தும் மாற்றங்கள்,உணர்வுகள் இந்த சங்கிலித் தொடர் உறவில் செலுத்தப்பட்டு மீண்டும் நம்மிடமே திரும்பிவரும்.நமது வாழ்வில் தேக்கங்களோ, சோதனைகளோ நம்மால் எப்படி முயன்றும் மாறாமல் இருக்கின்றதா? அப்படி என்றால் இந்த சங்கிலித் தொடர் உறவை நாம் சீர்திருத்த வேண்டும் எனலாம். இந்த சங்கிலித் தொடர் உறவில் அதன் ஏதாவது ஒருஇடத்தில்இருந்து வெடிக்கு தீ வைப்பதைப் போன்று வையுங்கள். இதன் மூலம் நமது தடைப்பட்ட சங்கிலி உறவுகள் சரிப் படுத்தப்படலாம். ஓர் உதாரணத்துக்குச் சொல்லுகின்றேன், நமக்கு எந்த விதத்திலும் தொடர்பு இல்லாத நம்மை யார் என்றே தெரி யாத நமது ஊரைக்கூட சேர்ந்திராத சில நபர்களை அவர்கள், இவர்கள் தான் என்று நீங்களும் அறியாமலும் அவர்களும் அறியாமல் அவர்களுக்கு ஏதேனும் ஒரு வகை யில் அவர்களது மனது கிளர்ச்சியடையும் படி செயல் செய்யுங்கள் .அது கண்டிப்பாக நமதுவாழ்வில் தேக்கமடைந்த ஒரு பகுதியில் கிளர்ச்சியை ஏற்படுத்தி தேக்கத்தை நீக்கச் செய்யும். (முற்றும்)



# உங்களால் முடியாதது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிறுத்தப்பட்டது சீனாவின் போட்சிற்றி

கொழும்பு, மார்ச் 6

'கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், பிரதமர் தலைமையிலான குழுவினிரின் அறிக்கையின் பின்னரே இத்திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதா? இல்லையா? என்பது குறித்து தீர்மானிக்கப்படும்" – என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமான ஹபீர் ஹாசிம் தெரிவித்தார்.

சட்டமா அதிபர், சுற்றாடல் அதிகார சபை முதலீடு, நிதி, துறைமுக அமைச்சின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள பிரதமர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இவர்களின் ஆலோசனைக்கு அமையவே இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், அறிக்கை எமது நாட்டுக்குப் பாதகமாக அமையுமாயின் இத்திட்டம் முற்றாக கைவிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

"கடந்த அரசு எமது நாட்டுக்குத் தீங்கு ஏற்படுத்தும் வகையில் பல நாடுகளுடன் ஒப்பந்தங்களை செய்துள்ளமை துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் வெளிப்படையாகத் தெளிவாகின்றது. சட்டரீதியான நிறுவனங்களிடம் உடன்படிக்கை செய்யாது துறைமுக அதிகாரசபையுடன் உடன்படிக்கை செய்துள்ளமை இதன்மூலம் புலப்படுகின்றது.

இந்தத் துறைமுகத் திட்டத்தினால் எமது நாட்டுக்குச் சொந்தமான 50 ஹெக்டேயர் நிலப்பரப்பு சீன நாட்டுக்கு சொந்தமாகுமென அந்த உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட இந்த நிலப்பரப்பானது எமது நாட்டின் இரண்டு பிரதான துறைமுகங்களுக்கு நடுவில் இந்தத் திட்டம் அமையவுள்ளது. அவ்வாறே சீன அரசு தங்களுக்குத்தேவையானபோது – தேவையான நேரத்தில் துறைமுகத்துக்கு நடுவிலுள்ள பிரதேசங்களைப் பயன்படுத்துவதற்கும் அவர்களது கடற்படைக் கப்பல்களை நங்கூரமிடுவதற்கான உரிமையையும் பெறுகிறது. இதனால்தான் கடந்த காலங்களில் நீர்மூழ்கிக் கப்பல்கள் எமது துறைமுகங்களுக்கு அருகில் நங்கூரமிடப்பட்டிருந்தன.

இவை எமக்குப் பெரும் பிரச்சினை. அவ்வாறே இந்தப் பகுதியில் மேலும் 80 ஹெக்டேயர் நிலப்பகுதி குத்தகைக்கு வழங்குவதற்கும் இந்தத் திட்டத்தின்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான பிரச்சினைகள் உட்பட நாட்டின் நிதிப்பிரமாணங்களை மீறியே இந்த உடன்படிக்கைகள் செய்யப்பட்டுள்ளமை தற்போது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளன. இதனை உடனடியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு கோரியே பிரதமர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் பரிந்துரைக்கு அமையவே இந்தத் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளதுடன், எமது நாட்டுக்கு தீங்கு ஏற்படுத்தும் வகையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தலைமையிலான இக்குழு தெரிவிக்குமாயின் கொழும்பு நகரத் திட்டம் கைவிடப்படும்" – என்றார்.

(த–சி)

# முகத்தை மூடும் தலைக்கவசம் அணிந்து வங்கியில் கொள்ளை

கொழும்பு, மார்ச் 6

தனியார் வங்கியில் நுழைந்த முகமூடிக் கொள்ளையர்கள் வங்கியில் இருந்த சுமார் 10 லட்சம் ரூபா வரையான பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தெஹிவளை – அத்திட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் வங்கி ஒன்றிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசம் அணிந்தவாறு துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் வங்கிக்குள் நுழைந்த இருவர் இந்த கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் .

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையிலேயே முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசம் அணிவதற்குத் தடை விதிக்கப்பட்டுக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த)

# சேனக பிபிலவின் உயிரிழப்பில் மர்மம்

கொழும்பு, மார்ச் 6

ஔடதக் கொள்கைத் திட்டத்தை அறிமுகப்படுத்திய சேனக பிபிலவின் மரணம், மர்மம் என்றே விக்கிபீடியா இணையதளத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டினார் பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல.

ஜமைக்காவில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற பிறகே அவருக்கு ஏதோ நடந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற தேசிய மருந்துகள் ஒழுங்கு படுத்தும் அதிகாரசபை சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

"பேராசிரியர் சேனக பிபில தேசிய வீரர் மட்டுமல்ல, சர்வதேச மட்டத்தில் பெரிதும் அறியப்பட்ட நபராவார். இவர் அறிமுகப்படுத்திய மருந்துக் கொள்கைத் திட்டம் 90 நாடுகளில் அமுலில் இருக்கின்றது. எனினும், அதை ஏற்பதற்கு இலங்கைக்கு 40 வருடங்கள் தேவைப்பட்டுள்ளன.

சேனகபிபிலயின் பிறப்பு உள்ளிட்ட விடயங்களைப் பிரசுரித்துள்ள விக்கிபீடியா இணையதளத்தில் இவரது மரணம் இரகசியம் என்றே கூறப்பட்டுள்ளது. மேற்கிந்தியத் தீவுகளிலுள்ள ஜெமைக்காவில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டுக்குச் செல்வதற்கு முன்னர் அவர் நன்றாக இருந்தார். அதன் பின்னரே அவருக்கு ஏதோ நடந்துள்ளது. சர்வதேச மருந்துக் கம்பனிகளுக்கு அவர் பெரிதும் சவாலாக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது" – என்றார்.

(த–சி)

# அமெ.பிரதிநிதிகளுக்குப் பணம் விசாரணைக்கு ரணில் பணிப்பு

கொழும்பு, மார்ச் 6

அமெரிக்க காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதிகளுக்கு ஆட்சியில் இருந்த அரசால் பணம் வழங்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து விசாரிக்க வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு உத்தரவிடுவதாகத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இது தொடர்பாக அமெரிக்காவுக்கும் அறிவிப்பதாகவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே பிரதமர் ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

"அமெரிக்க காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதிகளுக்கு முன்னைய அரசால் பணம் வழங்கிய விவகாரம் தொடர்பில் விசாரணை செய்ய வேண்டும். அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு பணம் வழங்கியமையானது அந்நாட்டுச் சட்டத்துக்கு எதிரானதாகும். இலங்கையை போன்ற நிலைமை அங்கு இல்லை. எனவே, இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்த வெளிவிவகார அமைச்சருக்கு உத்தரவிடவுள்ளேன். மேலும், இந்த நடவடிக்கையூடாக அமெரிக்க சட்டம் மீறப்பட்டுள்ளதால், அந்நாட்டுக்கு இதுபற்றி அறியப்படுத்துவோம்.

அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதி ஒருவர் சாப்பாட்டுக்குச் சென்றால் கூட யாருடன் சென்றீர்கள், அழைத்தது யார் என்றெல்லாம் கூறவேண்டும். அந்தளவுக்கு அங்கு சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஆனால், இந்த விடயத்தில் இங்கு என்ன நடந்துள்ளது என்று தெரியாது. அதனால் இதைப் பற்றி விசாரணை செய்வதுடன், அமெரிக்காவுக்கு அறியப்படுத்துவோம்" – என்றார்.

(த–சி)


## விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் மூத்தவிநாயகர் கோவிலுக்கு அருகில் கூட்டுறவுச் சங்கம் இயங்கும் இரு கடைகளும் வீடும் (நிலப்பரப்பு 1 குழி 2) விற்பனைக்குண்டு

தொடர்பு : - 076 672 6452
077 577 4915

## ஸ்ரீ மான் கல்கி பகவானின் 67 ஆவது ஜென்மதின மஹோற்சவப் பெருவிழா

ஸ்ரீ கல்கி பகவானின் 67ஆவது ஜென்ம தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு சுன்னாகம் ஐயனார் கோயில் வீதி காளிகோயி லில் இருந்து நகர சங்கீர்ணத்துடன் பாற்குட பவனி ஆரம்பித்து சுன்னாகம் ஜெயகிருஸ்ணாஜி சத்சங்க நிலை யத்தை அடைந்து 67 திரவியங்களால் பாதுகாபிஷேகம் சிறப்பாக நிகழவுள்ளது.

Web cast தரிசனம் முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெறும்.

## மணமகள் தேவை

யாழ் இந்து 1980, 2இல் செவ்வாய், மூலநட்சத்திரம், 63½ கிரக பாவம், அரச எழுதுவினைஞர் (Clerk),HNDA, நற்பழக்கமுடைய மணமகனுக்கு நன்கு படித்த மணமகள் தேவை.

தொடர்பு: -
077 955 8170(பெற்றோர்)

## வீடு வாடகைக்குண்டு

யாழ் பல்கலைக்கழகத்துக்கு மிகவும் அண்மையாக புதிதாகக் கட்டப்பட்ட வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்குண்டு.

தொடர்பு : - 075 210 2281

## வேலைக்கு ஆள் தேவை

கே. கே. எஸ் வீதியில் அமைந்துள்ள திருமண சேவைக்கு பெண் உதவியாளர் தேவை (வயது வந்தவர்கள் விரும்பத்தக்கது.) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : - 077 321 8664

## வாடகைக்குண்டு

யாழில் ஐஸ்கிறீம் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யும் கடை சகல தளபாடங்களுடன் பங்கு அல்லது கொமிசன் அடிப்படையில் தரப்படும். தொடர்பு : - 077 998 1896

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரை அண்டிய பகுதியில் (02 KM இற்குள் சகல வசதிகள் கொண்ட வீடு தேவை.

மாதாந்தம் 20,000/= மட்டும் வழங்கப்படும்.

தொடர்பு: 077 955 1617

(57522)(4.3.7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பிரதேச செயலாளர்

திரு சி.சத்தியசீலன்

அவர்கள் இலங்கை நிர்வாக சேவையில் தரம் I(SLAS Class I) நிலை அடைந்தமையை அகமகிழ்ந்து பாராட்டிவாழ்த்துகின்றோம்.

"நிர்வாகத் திறமையினால்
நிறைவான நிலை அடைந்த
சீரிய! சீலரே! நிறைவுடன் வாழ்க!
விரைந்த உயர்வு விழுதான பணி வாழ்வு
விஞ்சிய செய்பணி விருட்சமாய் வாழ்க!!!"

பாராட்டி வாழ்த்துவோர்:
பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் - பிரதேச செயலகம், பூநகரி.

## உன்னத சேவையாளனை பாராட்டி வாழ்த்துகின்றோம்



ம.பற்றிக் டிறஞ்சன்

செயலாளர், கமத்தொழில், கமநல சேவைகள், கால்நடை, நீர்ப்பாசனம் மற்றும் கூட்டுறவு அமைச்சு - வடமாகாணம்.

எமது திணைக்களத்தில் கடந்த எட்டு ஆண்டுகளாக உதவி ஆணையாளராகவும், பிரதி ஆணையாளராகவும், வடமாகாண பிரதி ஆணையாளராகவும் சிறந்த சேவையாற்றியதுடன் எமது தீவக பிரதேச விவசாயிகளின் உயர்ச்சிக்காக பல்வேறு வழிகளில் முன்னின்று அயராது உழைத்ததுடன் தீவு பிரதேச கமநல சேவைகள் நிலையங்களையும் வளமானதாக்கி பெருமை சேர்த்த தீவக மண்ணின் மைந்தன் திரு.ம.பற்றிக் டிறஞ்சன் அவர்கள் பதவி உயர்வு பெற்று வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளராக பொறுப்பேற்றதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைவதுடன் அவர் மென்மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று எதிர்காலத்தில் சீரும் சிறப்புடன் சேவையை தொடர எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

[illegible] அமைப்புக்கள்
கமநலசேவைப்பிரிவு - வேலணை

## Majestic Cineplex Jaffna

கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30
சில்வர் 10.15 / 2.15 / 6.15
ப்றொன்ஸ் 10.30 / 2.30 / 6.30

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021567-1111

# இலங்கைக்காக பரப்புரை செய்வதற்கு அமெ. நிறுவனங்களுக்கு ரூ. 17 கோடி

## முன்னைய அரசு வழங்கியதாம்

கொழும்பு, மார்ச் 6
இலங்கை அரசுக்குச் சாதகமான மனப் பாங்கை வெளிநாடுகளில் கட்டியெழுப்ப கடந்த 5 வருடங்களில் அமெரிக்காவைச் சேர்ந்த 4 கம்பனிகளுக்கு 12 இலட்சத்து 88 ஆயிரத்து 106 டொலர்களை – இலங்கை மதிப்பில் சுமார் 16 கோடியே 75 இலட்சம் ரூபாவை முன்னைய அரசு வழங்கியுள்ளது என வெளிவிவகார பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா சபையில் தகவல் வெளியிட்டார்.

மேலும், ஆட்சியிலிருந்த அரசு இவ்வாறு பணம் கொடுத்து செய்யமுடியாமல் போனதை தற்போது எமது வெளிவிவகார அமைச்சர் ஒன்றரை மாதங்களுக்குள் செய்து முடித் துள்ளார் என்றும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே இவ்வாறு தெரிவித்த பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா மேலும் தெரிவித்தவை வருமாறு:– ஆட்சியி லிருந்த அரசு கடந்த 5 வருடங்களில் இலங்கைக்கு அதிகமான மனப்பாங்கை வெளி நாடுகளில் கட்டியெழுப்புவதற்காக அமெரிக் காவைச் சேர்ந்த 4 கம்பனிகளுக்கு பணம் வழங்கியிருந்தது. பற்றன் பொக்ஸ் எல்.எல். பி. கம்பனிக்கு 2010ஆம் ஆண்டு 3 இலட்சத்து 15 ஆயிரம் டொலர்களையும், 2011இல் 4 இலட்சத்து 20 ஆயிரம் டொலர்களையும், 2012இல் ஒரு இலட்சத்து 5 ஆயிரம் டொலர்களையும் வழங்கியுள்ளது. கிரான் போட் ஜோன்சன் ரொபின்சன் பீ.ஆர். கம்பனிக்கு 2010ஆம் ஆண்டு 45 ஆயிரம் டொலர்களை வழங்கியது. ஸ்டீவ் கெட்ஜேஸ் கம்பனிக்கு 2010இல் 49 ஆயிரத்து 106 டொலர்களை வழங்கியது. மஜோரிட்ட குரூப் எல்.எல்.சி. கம்பனிக்கு 2013ஆம் ஆண்டு 3 இலட்சத்து 54 ஆயிரம் டொலர்களை வழங் கியிருக்கிறது. பற்றன் பொக்ஸ் எல்.எல்.பி. கம்பனி தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய வெளி விவகார அமைச்சருக்குச் செய்த சிபாரிசின் அடிப்படையிலும், கிரான்போட் ஜோன்சன் ரொபின்சன் பீ.ஆர். கம்பனி தூதுவர் பேர்னாட் குணதிலக்க வழங்கிய சிபாரிசின் அடிப்படையிலும் தெரிவுசெய்யப் பட்டுள்ளது.– என்றார். (த–6)

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணபிள்ளை செல்வகுமார்



சர்வோதய வீதி ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை செல்வகுமார் நேற்று (05.03.2015) வியாழக் கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் கிருஷ்ணபிள்ளை– இராசமணி தம்பதி யரின் கனிஷ்ட புத்திரனும், அருந்தவம், (யோக நாதன்), தயாராணி தம்பதியரின் அன்பு மருமகனும், பிரியந்தினியின் அன்புக் கணவரும், பாஸ்கரன் , செல்வராசா, சதீஸ்வரன், அனிஸ்வரன் , ராகவன், கிருஷ்ணகுமார், அனுஷா, கிருஷா காலஞ்சென்றவர்களான மதிராஜ், செந்தில்ராஜ், கஜிதா ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2015) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தொ.இல– 0777913490 தகவல், குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் யேசுரத்தினம்



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் யேசுரத்தினம் நேற்று (05.03.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற யேசுரத்தினத்தின் மனைவியும், காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரதி, மாலதி ஆகியோரின் அன்புத் தாயும், நடராஜா (ஓய்வுபெற்ற மரக்கூட்டுத்தாபன உத்தியோகத்தர்), நாகராஜா(ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்) ஆகியோரின் மாமியும், சிவதர்சனன், பார்த்தீபன், பிரபாகரன்-சகிலா, துஷ்யந்தன்- ரோகினி, சுதர்சன், விஜிந்தன்-ரோகினி, கிரிஷ்நாத்-மீரா, சுகீந் திரராசா-வினோதினி, வரதன்-வைஷ்ணவி, அரவிந்தன்-துஷ் யந்தினி, மோகனராஜா-நிஷாந்தினி, தஜீவன் ஆகியோரின் பேர்த்தியும், ரமேஷ், சுரேஷ் ஆகியோரின் பெரியதாயும், மீரா, ரமணன், தயாளன் ஆகியோரின் சிறியதாயும், கஜேந்திரனின் சின்னமாமியும், விதுஷா, பிரவீன், அபிஷா, சரண்யா, நிலக்ஷன், கரீசன், சந்தோஷ், டனீஷ் ஆகியோரின் அன்புப் பாட்டியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2015) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில், காங்கேசன் துறை வீதி, உடுவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### தம்பையா பரமானந்தம்



புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 7ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட (ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு) தம்பையா பரமானந்தம் 04.03.2015 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு புதல்வரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி-கண்மணி தம்பதியரின் மருமகனும், ஈஸ்வரிதேவியின் கணவரும், சுகந்தி, Dr. பரணீதரன் (சுகாதார வைத்திய அதிகாரி-புதுக்குடியிருப்பு), ஜெயந்தி, ஜெயமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், மதியழகன் (லண்டன்), அபிராமி (பிரதேச செயலகம்- புதுக்குடியிருப்பு), விக்கினேஸ் (கட்டார்), ஆனந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2015) வெள்ளிக் கிழமை காலை 4 ஆம் வட்டாரதத்தில் அமைந்துள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
077 371 2830

தகவல்:
குடும்பத்தினர்.

# ராணுவப் புரட்சி குறித்து விசாரணை வேண்டும்

## கோருகின்றது ஜே.வி.பி

கொழும்பு, மார்ச் 6
கடந்த ஜனவரி 8ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட ஆட்சி தக்கவைப்பு முயற்சி தொடர்பில் தொடர்ந்தும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஜே.வி.பி. மீண்டும் கோரியுள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறப் போவது தொடர்பில் அதீத நம்பிக்கை கொண்டிருந்தார். எனினும் தேர்தல் முடிவுகள் அவருக்கு அதிர்ச்சியை அளித்தன.

இதனையடுத்தே அவர், ஆட்சி தக்கவைப்பு இராணுவப் புரட்சி ஒன்றுக்கு திட்டமிட்டார். எனினும் பொலிஸ் தரப்பு இதற்கு இணங்கவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி தக்கவைப்பு முயற்சி வெற்றியளித்திருந்தால், நாட்டில் இரத்தக்களரி ஏற்பட்டிருக்கும் என்று அநுரகுமார குறிப்பிட்டார்.

குறித்த ஆட்சித்தக்க வைப்பு முயற்சி குறித்து பொலிஸ் தரப்பு உதய கம்மன் பிலவை விசாரணை செய்து, பின்னர் நீண்ட கால அவகாசத்தின் பின்னரே முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸை விசாரணை செய்தது.

இதன்போது தமது இருவரின் வாக்கு மூலங்களும் முரண்பாடாக அமையாமல் இருக்க, கம்மன்பிலவும் மொஹான் பீரிஸும் கலந்துரையாடியிருக்க முடியும் என்று அநுர திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் அரசு தமது 100 நாள் திட்டத்துக்குள் இது தொடர்பில் விசாரணையை நடத்த வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (த)

## 15 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இரத்தினம் சிறிகாந்தன்
(தொலைத்தொடர்புப் பரிசோதகர் சிறிலங்கா ரெலிகொம்)

தோற்றம் 21.02.1953
மறைவு 06.03.2000

ஹரே கிருஷ்ணா ஹரே கிருஷ்ணா
கிருஷ்ணா கிருஷ்ணா ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

திருமதி சிவமலர் சிறிகாந்தன்
அராலி தெற்கு, அராலி.
(57440) 5.3

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 19 ★ 11 ★ 1954
மறைவு 04 ★ 02 ★ 2015

### அமரர் சின்னத்துரை விஜயமூர்த்தி

கடந்த 04.02.2015 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னத்துரை விஜயமூர்த்தி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (06.03.2015) வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட் அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாவலடி, உடுப்பிட்டி. (54230) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 28 01 1967
உதிர்வு 04 02 2015

### செல்வி உதயமலர் கயிலாயபிள்ளை

கடந்த 04.02.2015 சிவபதமடைந்த எமது அன்புச் சகோதரியின் வீட்டுகிருத்திய் நிகழ்வு இன்று (06.03.2015) வெள்ளிக் கிழமை நடைபெறும்.

மாதமொன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் துயர்
எங்களை எல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்தி விட்டுச் சென்ற
எங்கள் அன்புத் தங்கையின்

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

192, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(67621) (4.6.2)

சகோதரன் (பவா),
சகோதரிகள், மைத்துனர்மார்,
மைத்துனி, பெறாமக்கள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடியிலிருந்து கீழே விழுந்த சிறுமி சாவு

## கிராண்ட்பாஸ் பகுதியில் பரிதாபம்

கொழும்பு, மார்ச் 6
கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் அமைந்துள்ள தொடர்மாடிக் குடியிருப்பு ஒன்றின் ஆறாவது மாடியிலிருந்து கீழே விழுந்த சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுப்பிரமணியம் சுகன்யா என்ற 17 வயதுச் சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த சிறுமி மூவதொர உயன என்ற புதிய மாடிக் குடியிருப்பின் 6 ஆவது மாடியில் இருந்து வீழ்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுமியின் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனை நேற்று முன் தினம் புதுக்கடை 4 ஆம் இலக்க நீதிமன்ற நீதிவானால் முன்னெடுக்கப்பட்டது.சம்பவம் தொடர்பில் கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த சிறுமி தவறுதலாக மாடி வீட்டிலிருந்து வீழ்ந்துள்ளாரா அல்லது தற்கொலை செய்து கொண்டாரா என்ற ரீதியில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சிறுமி வீட்டில் இருந்து தப்பிச் செல்ல முற்பட்டபோதே மாடி வீட்டில் இருந்து வீழ்ந்துள்ளதாகப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (த)

## மரண அறிவித்தல்

### திருமதி ராஜேஸ்வரி ராஜரத்தினம்



போயிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாக வும், கருகம்பனை வீதி, கீரிமலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ராஜேஸ்வரி ராஜரத்தினம் நேற்று (05-03- 2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியர் - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாகிகு மருமகளும், கிருஷ்ணர் ராஜரத்தினத்தின் (கிளி) அன்பு மனைவியும், ராஜ்குமார் (ஜேர்மனி), விஜயகுமார் (ஜேர்மனி), விஜயராணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மாட்டினா (ஜேர்மனி), கமலினி (இலங்கை), சற்குணநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பாத்தியான் (ஜேர்மனி), நவிதன், கவிதன், அபிதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.03.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10மணியளவில் கருகம்பனை வீதி, கீரிமலையில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக, கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கருகம்பனை வீதி,
கீரிமலை. (57537)

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 077 783 4698

## மரண அறிவித்தல்

தோற்றம் : 30 ★ 09 ★ 1942



மறைவு: 04 ★ 03 ★ 2015

### திருமதி சந்தியா றோஸ்மேரி (பொன்னம்மா)

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்தியா றோஸ்மேரி 04.03.2015 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியா (துரை ஐயா)வின் அன்பு மனைவியும் கட்சன் (பிரான்ஸ்), தவன் (பிரான்ஸ்), ஜீவன், ரூபன், விமலன் (கனடா), சந்திரிகா (கனடா), சிம்சன் (கனடா), நித்தியா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24/6, மந்தியகிழக்கு வீதி, றெக்கிளமேசன்,
குருநகர், யாழ்ப்பாணம். 077 82 10291

தகவல்:
பிள்ளைகள்

# 16 ஆயிரம் லீற்றர் எதனோல் மீட்பு

கொழும்பு, மார்ச் 6
சட்டவிரோதமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட 1.6 மில்லியன் ரூபா பெறுமதியான 16 ஆயிரம் லீற்றர் எதனோல் அடங்கிய கொள்கலன்கள் ஊறுகொடவத்தைப் பிரதேசத்தில் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவை தாய்லாந்திலிருந்து இலங்கைக்குச் சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இரத்மலானையிலுள்ள ஒரு கம்பனியே இதனை இறக்குமதி செய்வதில் ஈடுபட்டதாகச் சுங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (த)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் தவராசலிங்கம்

(இளைப்பாறிய ப.நோ.கூ.சங்க உத்தியோகத்தர்-நீர்வேலி)



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தவராசலிங்கம் நேற்று (05.03.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் இரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், ஸ்ரீரஞ்சினியின் அன்புக் கணவரும், நிரஜாவின் அன்புத் தந்தையும்,தவமணி, நாகேஸ்வரி, வசந்தாதேவி சிவபாலசுப்பிரமணியம், சித்திரவேலாயுதபிள்ளை, செல்வசற்குருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்தாதேவி, வரதராஜன் ஆனந்தராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொகுதிப்பண்ணை,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை றெக்சன்



யாழ். சக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், லண்டன் (Barking) வெற்றிலைக் கேணி, ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை றெக்சன் அவர்கள் 26-02-2015 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் மரியமலர் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி கிரேஸ்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவநாயகி (யசோ) அவர்களின் பாசமிகு கணவரும், றொஷானி, மதுஷானி, விதுஷானி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதா, காலஞ்சென்ற சுமா நிக்சன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமலன் அவர்களின் பாசமிகு மைத்துனரும், மொறின், டொறின் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வு லண்டனில் இன்று (06.03.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறும். அல்வாய் வடக்கு சற்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தில் 07.03.2015 சனிக்கிழமை காலை 07.00 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சற்கோட்டை, அல்வாய்
வடமேற்கு, அல்வாய். (54229)

தகவல்:
உறவினர்கள், குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி சவுந்தரம் சங்கரப்பிள்ளை

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 29, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சவுந்தரம் சங்கரப்பிள்ளை 04.03.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மு.க. சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தையுலம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தர்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முருகேசு மற்றும் நாகம்மா, சின்னம்மா (பிரான்ஸ்), செல்லம்மா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான அருள்பிரகாசம், நாகராஜா, குகநாதன், கனகரத்தினம், பொன்னம்பலம், விசாலாட்சி, சிவகாமி, தையலம்மை ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற துரைரெத்தினம் மற்றும் கணேஷரெத்தினம், திகம்பரேஸ்வரி, ஞானேஸ்வரி, காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, நவநீதரெத்தினம் மற்றும் சடாட்சரமணி (சுவிஸ்), விக்கினேஸ்வரி (Unicef கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயும், உமாதேவி, கனகேஸ்வரி, கோபாலகிருஷ்ணன் (JP), சீவரெத்தினம் மற்றும் காலஞ்சென்ற குலஆனந்தன் (முன்னாள் இ.போ.ச.திடீர் பரிசோதனைக்குழு அதிகாரி) மற்றும் செல்வரெத்தினம் (சுவிஸ்), கங்க நாதன் (சாயி வீடியோ யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், அனுசுயா, பிரபுதா, கல்ப்பனா, காண்டீபன், காஞ்சனா, கனீதனா, கஜீபன், தயாநிதி, வாகினி, குணாஜினி, கஜரூபன், ஜெகதீஸ்வரி, ஞானகாந், கஜநீதன், சயாநந்தி, குஜாயினி, துஷாந்தினி, சியானந்தன், டயந்தன், மோஜனன், செந்தூரன், சியாமா, திபிகா, தர்சிகா, சாயிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.03.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்.வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாக்குறுதியை

அதேவேளை, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரையில் இலங்கை தொடர்பான அறிக்கை பிற்போடப்பட்டமைக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு தெரிவித்துள்ளது. (ற)

### சீனாவின்

"இலங்கையின் புதிய அரசு, முதலீட்டுச் சூழலை முன்னேற்றுவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளை சீனா புரிந்து கொண்டுள்ளதுடன் அதனை மதிக்கிறது.

அத்துடன், இலங்கை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை பொருத்தமான முறையில் தீர்க்கும் என்றும், சீனா – இலங்கை நட்பின் ஒட்டுமொத்த நலன்களுக்காக, இலங்கையில் முதலீடு செய்துள்ள, சீன நிறுவனங்களின் நம்பிக்கையை காப்பாற்றவும், இலங்கையின் தேசிய அபிவிருத்தியில் உள்ள அடிப்படை நலன்களைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கும் என்றும் சீனா நம்புகிறது"– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சீன வெளிவிவகார அமைச்சரின் அழைப்பின் பேரில், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சீனாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் போது, இலங்கையில் அபிவிருத்தி மற்றும் முதலீட்டில் சீன நிறுவனங்களை வரவேற்பதாகத் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் மீளாய்வு, சீனாவின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் திட்டங்களை மட்டும் அடிப்படையாக வைத்து நடத்தப்படும் தனித்துவமான ஆய்வு அல்ல. நல்லதொரு முதலீட்டுச் சூழலை உருவாக்குவதை இலக்காக வைத்து மேற்கொள்ளப்படுகிறது.

சீனாவின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் குறித்த மீளாய்வின் முடிவுகள் குறித்து இலங்கை, சீனத் தரப்புடன் நெருக்கமான தொடர்பை பேணும். – என்றும் அவர் கூறியிருந்தார். (ற–5)

### மோடியின்

தமிழகத்திலுள்ள அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. அத்துடன் பயணத்தை ரத்துச் செய்ய வலியுறுத்தி, நாளை சனிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அந்த அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

இளந்தமிழகம் இயக்கம், திராவிடர் விடுதலைக் கழகம், தமிழ்நாடு மாணவர் இயக்கம் ஆகியனவே இந்த எச்சரிக்கையை இந்திய மத்திய அரசுக்கு விடுத்துள்ளன.

"இந்திய மத்திய அரசு, இலங்கையைப் புறக்கணிக்க வேண்டும். இந்தியப் பிரதமர் இலங்கைக்கான தனது பயணத்தை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும். இலங்கையில் நடந்தது தமிழினப் படுகொலை என்று அங்கீகரித்து, வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, இந்திய நாடாளுமன்றத்திலும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்."– என்று அந்த அமைப்புகள் கோரியுள்ளன.

"சர்வதேச அரங்கில் இலங்கையின் மதிப்பை உயர்த்தும், நோக்கத்திலும் இலங்கையைப் பாதுகாக்கவுமே இந்தியப் பிரதமர் இலங்கைக்குச் செல்கின்றார். 28 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் ஒருவர் இலங்கைக்கு பயணம் மேற்கொள்கிறார் என்பதைவிட அன்று போலவே இன்றும் சிங்களப் பேரினவாத அரசுடனான உறவை வலுப்படுத்தவே போகிறார் மோடி. சிங்கள பேரினவாத அரசை உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் தனிமைப்படுத்த, இலங்கையை புறக்கணிப்போம் என்பதே எமது முழக்கம். இந்திய அரசு இலங்கையுடனான அரசியல் பொருளாதார பண்பாட்டு உறவுகளை துண்டித்துக் கொள்ள வேண்டும்."– என்றும் அந்த அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

"இந்திய அரசின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கை கொழும்பு பொதுநலவாய மாநாட்டிற்கு செல்லக் கூடாதென போராட்டம் நடத்தியதால் அவரின் இலங்கைப் பயணத்தை தடுக்க முடிந்தது. ஆனால் இன்று இன்னும் வெளிப்படையாக இலங்கைக்கு ஆதரவளிக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு செல்வதை தடுக்க வேண்டிய தேவை முன்னிருந்ததை விட அதிகமாகவுள்ளது."– என்று அந்த அமைப்புகள் தெரிவித்துள்ளன. (ற–5)

### சீன ஆதிக்கத்தை

செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

"இந்துமா சமுத்திரத்தில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அடுத்த வாரப் பயணம் அமையவுள்ளது. இந்துமா சமுத்திரத்திலுள்ள நான்கு தீவுகளுக்கு அவர் பயணம் மேற்கொள்கின்றார். மொறிசியஸ், சிஷல்ஸ், மாலைதீவு, இலங்கை ஆகிய நான்கு நாடுகளுக்குமே இந்தியப் பிரதமர் பயணம் செய்யவுள்ளார்.

இந்தப் பிராந்தியத்தில் பில்லியன் கணக்கான ரூபாவைச் செலவிட்டு சீனா பெற்றுள்ள செல்வாக்கை உடைப்பதற்காக, இந்தியப் பிரதமர் பரந்தளவிலான இராணுவ மற்றும் பொதுமக்களுக்கான உதவித் திட்டங்களை வழங்கவுள்ளதாக இந்திய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்."– என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இலங்கையில் தனது நீர்மூழ்கிகளை தரிக்கச் செய்ததன் மூலம், சீனக் கடற் படையும் இந்தியப் பெருங்கடலில் திடீரென நுழைந்துள்ளது. இந்த நிலையில், இந்தியப் பிரதமர் பயணம் செய்யவுள்ள நான்கு தீவு களுடனும், நெருக்கமான பாது காப்பு ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று இந்திய அரசு நம்புவதாக, இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியப் பெருங்கடலில் பாதுகாப்பு வழங்குநராக இந்தியா பங்காற்றுவதாக, எதிர்வரும் 10 ஆம் திகதி இந்தப் பயணம் ஆரம்பமாகவுள்ளது. இந்தியப் பிரதமர் பயணம் மேற்கொள்ளும் நான்கு நாடுகளுக்கும், ரோந்துக் கப்பல்கள், கண்காணிப்பு ரேடார்கள், போன்றவற்றை வழங்கவுள்ளது.

மோடியின் பயணத் திட்டத்தில் உச்சமாக இருப்பது இலங்கை தான். இலங்கையுடன் இறுக்கமான பாதுகாப்பு ஒத்துழைப்பை ஏற்படுத்தவும், 2012 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில், திருகோண மலையில் 500 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை, கட்டுவதற்கான இறுதி ஒப்புதலைப் பெறுவதையும், மோடி எதிர்பார்ப்பதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். – என்று அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (ற–5)

### ஐ.நா.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஆற்றிய உரையின்போது ஐ.நா. விசாரணை அறிக்கையிலுள்ள உள்ளடக்கங்கள் அரசின் உள்ளக விசாரணையின்போது கருத்தில்கொள்ளப்படும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியமை தொடர்பில் தெளிவுபடுத்துமாறு வினவியபோதே அமைச்சரவைப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளக விசாரணை குறித்த அறிக்கையொன்றை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் செப்ரெம்பர் மாத அமர்வில் சமர்ப்பிக்க இலங்கை அரசு உறுதியளித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"ஐ.நா. மனித உரிமைகள் சபையானது நடத்திய விசாரணை கடந்த அரசு ஏற்றுக்கொள்ளாததன் காரணமாக அந்த விசாரணை ஒரு பக்கச் சார்பானதாக அமைந்துவிட்டது. எமது நியாயங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்தக் காரணத்தினாலேயே நாம் உள்ளக விசாரணையை நடத்த முன்வந்தோம். இதன்போது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து நாம் விசாரணைகளை மேற்கொள்வோம்" – என்றார். (ற–சி)

### சம்பந்தனும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தும் என்று கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அன்றைய தினம் மாலை மோடி இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றவும் உள்ளார். இந்தியப் பிரதமர் ஒருவர் இலங்கை நாடாளுமன்றத்தில் ஆற்றும் இந்த முதலாவது உரை, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, 13ஆம் திகதி கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசிலுள்ள முக்கியஸ்தர்களையும் சந்தித்துப் பேசவுள்ள இந்தியப் பிரதமர், மறுநாள் 14ஆம் திகதி சனிக்கிழமை வடக்குக்கு செல்லவுள்ளரா். அங்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உட்படப் பல தரப்பினரைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

அன்றையதினம் கீரிமலையில் இந்திய வீட்டுத் திட்டத்தைக் கையளிக்கும் நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ள இந்தியப் பிரதமர், அதன் பின்னர் மன்னாருக்கும் செல்லவுள்ளார்.

இதேவேளை, 15ஆம் திகதி மலையகத்துக்குப் பயணம் செய்ய இந்தியப் பிரதமர் மோடி திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின்போது, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி 1987ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த பின்னர், இலங்கைக்கு உத்தியோக பூர்வ பயணம் மேற்கொள்ளும் முதலாவது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி என்பது குறிப்பிடத்தக்கது. (ற–சி)

### இலவச

அதன்முதல் கட்டமாக எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக கொழும்பு மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளைச் சேர்ந்த 250 இடங்களில் இலவச 'வை பை' இணைப்புக்கள் வழங்கப்படுமென்று அவர் உறுதியளித்துள்ளார்.

இ"ரண்டாம் கட்டமாக நாடு முழுவதும் உள்ளடக்கக் கூடிய வகையில் 750 இடங்களுக்கு இலவச 'வை–பை' இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன. இது எதிர்வரும் மூன்றுமாத காலத்துக்குள் பூர்த்தி செய்யப்படும்."– என்றும் அவர் கூறினார். (ற–5)

### இன்று

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமரைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

நாளை சனிக்கிழமை அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொழும்பில் சந்திப்பார்.

இந்தியப் பிரதமருடன் பேசப்படவுள்ள விடயங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பு நடைபெறும். கடந்த ஆண்டு இந்தியாவுக்குக் கூட்டமைப்பு சென்றபோது வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்துவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–5)

### துறைமுக

திட்டம் குறித்து மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் இடைக்கால அறிக்கை அமைச்சரவை உபகுழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதில், கொழும்பு துறைமுக நகரத் திட்டத்துக்குச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் அனுமதி பெறப்படாமல் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

அதன்படி, இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது இடைநிறுத்தப்படும்.

இந்த திட்டத்தைச் செயற்படுத்துவதற்குத் தேவையான அனுமதிகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து இரண்டு வாரங்களுக்குள் பெற்று சமர்ப்பிக்குமாறு திட்டத்தைச் செயற்படுத்தும் நிறுவனத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டு நாடு திரும்பி ஒரு வாரத்தினுள் இவ்வாறானதொரு முடிவு எட்டப்பட்டுள்ளது. (த–5)

### 35 ஆயிரம்

யாழ்.மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகள் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில், 6 ஆயிரத்து 7 குடும்பங்களைச் சேர்ந்த 18 ஆயிரத்து 795 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 907 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 970 பேரும், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 191 குடும்பங்களைச் சேர்ந்த 679 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 156 குடும்பங்களைச் சேர்ந்த 718 பேரும், சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 211 குடும்பங்களைச் சேர்ந்த 694 பேரும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

இவர்களுக்கு தற்போது குடிதண்ணீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது. (ற–5)

### எமக்குத்

"வலி.வடக்கு மக்கள் தங்களது சொந்த இடங்களுக்கு விடுவிக்குமாறு, 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அதில் அப்போது எதிர்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க வந்து கலந்து கொண்டார். அவரிடம் '1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15 ஆம் திகதி உங்களின் ஆட்சியில் தான் இந்த மக்கள் வெளியேற்றப்பட்டார்கள். ஏன் நீங்கள் எங்களை குடியமர்த்தவில்லை?' – என்று அவரிடம் கேட்டோம். 'எங்களுடைய அரசு அப்போது மாற்றப்பட்டதால் அதனை செய்ய முடியவில்லை. இன்னொரு ஆட்சி மாற்றம் வந்தால் கட்டாயம் மீள்குடியேற்றம் செய்வோம்' என்று அவர் கூறினார்.

தற்போது மக்கள் ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றார்கள். எங்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ரணில் விக்கிரமசிங்க முதல் கட்டமாக ஆயிரம் ஏக்கர் விடுவிப்பு செய்து ஆரம்பித்து வைத்திருக்கின்றார்.

அந்த வாக்குறுதியை மறவாது, தொடர்ந்து மிக வேகமாக மிகுதி 5 ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்தையும் விடுவித்து, முழு மக்களையும் குடியமர்த்த வேண்டும். மக்கள் கண்ணீருடன் வாழும் 25 வருட வாழ்க்கைக்கு முடிவுகட்டி, சொன்னதை நிறைவேற்றிக் காட்டும் அரசாக மக்களின் மனதில் நிலைத்து நிற்பீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்."– என்றும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ற–5)

### இலங்கைக்கு

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 28 ஆவது அமர்வு ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது. அதில் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கடந்த காலங்களில் தோல்வியில் முடிந்த – பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக் கொள்ளாத, உள்ளக விசாரணைப் பொறிமுறையை மீண்டும் நடைமுறைப்படுத்த இலங்கையின் அதிகாரத் தரப்புக்கள் எத்தனிக்கக் கூடாது. பாதிக்கப்பட்ட மக்களது கருத்துக்க்ள் – ஆலோசனைகள் – பெறப்பட்டு புதிய உள்ளக விசாரணைப் பொறிமுறை உருவாக்க வலியுறுத்துகின்றேன்.

இலங்கை தொடர்பான அறிக்கை எனது பரிந்துரையுடனேயே, செப்ரெம்பர் மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது. ஐ.நா. விசாரணைக் குழுவினர் வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையிலும், இலங்கையின் புதிய அரசு வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையிலுமே அதனை மேற்கொண்டேன்."– என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு என்னையும், வலிந்து காணாமற் போகச் செய்யப்பட்டோர் மற்றும் உண்மை, நீதிக்கான விசேட பிரதிநிதிகளை 30ஆவது ஐ.நா. அமர்வுக்கு முன்னதாக (அடுத்த ஆண்டு மார்ச் மாதம்) இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இலங்கைக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி நீதியையும், சமாதானத்தையும் – நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்."– என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ற–5)

## மரண அறிவித்தல்

### திருமதி கிருஷ்ணராதா கஜேந்திரன்



கிளிநொச்சி திருநகரைப் பிறப்பிடமாகவும் நவாலி கிழக்கு மானிப்பாயை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணராதா கஜேந்திரன் நேற்று (05.03.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் முருகேசு காஞ்சனாமாலா (வவி) தம்பதியரின் அன்பு மகளும், தனு,கனுசன் , திவானு ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2015) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கயன் வீதி, நவாலி கிழக்கு
மானிப்பாய்

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்கு அரசு முன்னுரிமை

திருகோணமலை, மார்ச் 6
இலவசக் கல்வியைப் பலப்படுத்தும் வகையில் அரசு செயற்படும் என்றும் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி ரீதியான போட்டி சர்வதேச ரீதியாக அமைய வேண்டும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேட்டுக் கொண்டார்.
கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாணவர்களுக்கான விடுதி, விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு கட்டடத் தொகுதி ஆகியன நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டன. அங்கு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:



''பல்கலைக்கழக மாணவர்கள் மிகச் சிறப்பானவர்களாகவும் முன்னோடிகளாகவும் உருவாக வேண்டும். மாணவர்களாகிய நீங்கள் அர்ப்பணிப்பு, தியாகம் ஆகியவற்றை உங்கள் வளமான எதிர்காலத்துக்காக அர்ப்பணிக்க வேண்டும்.
நீங்கள் திறமையானவர்களாக உருவாகின்றபோது உங்கள் குடும்பம் மட்டுமல்ல சகல மக்களும் பயனடைவார்கள். அத்துடன் பட்டதாரிகளாக வெளியேறி தொழில்துறைகளில் இணைகின்றபோது நேர்மையுடைவர்களாக செயற்படுவதன் மூலம் பூரணமான மனிதனாக மாற முடியும்.
பல்கலைக்கழக மாணவர்களது பிரச் சினைகள் மற்றும் பல்கலைக் கழகங்களது குறைபாடுகளைத் தீர்க்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
அரிய சந்தர்ப்பங்களை கைவிட்டு நாட்டு நலன் கருதியும் உங்கள் நலன் கருதியும் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் கஷ்டமான சூழலுக்கு மத்தியில் கடமையாற்றுகின்றார்கள். அவர்களது சேவையை பெரிதும் மதிக்கின்றேன்-என்றார். (வ)

## தூங்கியதால் சிக்கினான் திருடன்

மஹியங்கனை, மார்ச் 6
கடைக்குள் புகுந்த திருடன், திருடிய பொருள்களை மூடைக்கட்டிவிட்டு கண்ணயர்ந்து விடிந்தும் விழி அயர்ந்த சம்பவம் மஹியங்கனையில் இடம்பெற்றுள்ளது.
பொலிஸார் வந்து திருடனை தூக்கிச்செல்லும் வரையிலும் அவன் அந்தக்கடைக்குள்ளேயே ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ளான். குறித்த திருடன் இவ்வாறான திருட்டு சம்பவங்களுடன் தொடர்புபட்டு நான்கு முறைகள் சிறைச்சாலைக்கு சென்று வந்தவன் என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ)



## பெண்ணுக்கு அபராதம்

கிளிநொச்சி, மார்ச் 6
வட்டக்கச்சிப் பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து கிளிநொச்சி நீதிவான் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்துள்ளார்.
கசிப்பு வைத்திருந்து 50 வயதுடைய குறித்த பெண்ணை கிளிநொச்சி பொலிஸார் திங்கட்கிழமை கைது செய்தனர். பெண்ணிடமிருந்து 500 மில்லி லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது.
அதைஅடுத்து குறித்த பெண்ணை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, பெண் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.
அதை அடுத்து, அபராதம் விதித்த நீதிவான், அபராதம் கட்டத் தவறின் ஒரு மாதகால சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிட்டார். (வ)

## டிப்பர் சாரதி கைதானார்

வடமராட்சி, மார்ச் 6
டிப்பர் வாகனம் ஒன்றில் சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் வந்த சாரதி ஒருவரை வல்வெட்டித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
துன்னாலைப் பகுதியில் டிப்பர் வாகனத் தில் மணலை களவாக ஏற்றிக் கொண்டு வல்வெட்டித்துறைக்கு கொண்டு சென்றபோது ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த வல்வெட்டித் துறைப் பொலிஸார் மயிலியத்தனையில் வைத்து வழிமறித்துப் பிடித்தனர்.
மணலுடன் கூடிய டிப்பரையும் சாரதியையும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வல்வெட்டித்து றைப் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-173)

## சம்பூரில் மீள்குடியமர்வு விரைவில்

கிழக்கு மாகாணத்தில் சம்பூர் மக்களின் மீள்குடியேற்றத்துக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்று மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.
ஏறாவூரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களில் சம்பூர் மக்களின் மீள்குடியேற்றம் குறித்தே முக்கிய கவனம் செலுத் தப்படும் என்றும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி விரைவில் அவர் களை மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் வாக்குறுதியளித்துள்ளார். (வ)

## 220 பேருக்கு டெங்கு நோய்

மட்டக்களப்பு மாவட்டத்திலேயே இந்த வருடம் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், இந்த மாவட்டத்தில் ஜனவரி மாதத்திலிருந்து இது வரையில் 220பேருக்கு டெங்குக்கான சிகிச்சை வழங்கப்பட் டுள்ளதாக மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார். (வ)



ஈழத்தின் வரலாற்றுப் புகழ்மிக்க அம்மன் ஆலயங்களில் ஒன்றான மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மாசி மக மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் விமரிசையாக நடைபெற்றது. (வ)

## வாராந்த ஆன்மிக சொற்பொழிவு

வடமராட்சி, மார்ச் 6
தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொழும்புத்துறை ஸ்ரீமுருகன் பஜனைக் குழுவினரின் பஜனை பக்க வாத்தியங்கள் சகிதம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-173)

## ஆரோக்கியபுரம் பாலம் திருத்தும் பணி

### ரூ.1.6 மில். செலவில் முன்னெடுப்பு

கிளிநொச்சி, ஆரோக்கியபுரம் பகுதியில் அமைந்துள்ள பாலம் 1.6 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புப்பணிகள் கடந்த வாரம் முதல் முன்னெடுக்கப்பட்டு வருவத[illegible] வீதி அபிவிருத்தித் திணை[illegible]களத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதம பொறியியலாளர் வல்லிபுரம் ஜெயானந்தன் நேற்று முன்தினம் தெரிவித்தார். அக்கராயனிலிருந்து வன்னேரிக்குளம் செல்லும் வீதியில் துணுக்காயின் பாலங்குளத்தின் வான் பாயும் பகுதியில் இந்தப் பாலம் அமைந்துள்ளது. மழை வெள்ளத்தால் சேதமடைந்த இந்தப் பாலம் போக்குவரத்து இடையூறாகவிருந்தது.
இந்தப் பாலம் சேதமடைந்ததன் காரணமாக, கிளிநொச்சியிலிருந்து முழங்காவிலுக்கான பஸ் மற்றும் வாகனங்கள் போக்குவரத்து மேற்கொள்ள முடியாதிருந்தது. இதனைக் கருத்திற்கொண்டு வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால், விரைவான புனரமைப்புப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறினார். (வ)

## கிளிநொச்சி டிப்போவுக்கு மேலும் 4 புதிய பஸ்கள்

### விரைவில் வழங்கப்படவுள்ளன என்கிறார் டிப்போ முகாமையாளர்

கிளிநொச்சி, மார்ச் 6
புதிய அரசின் 100 நாள்கள் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி டிப்போவுக்கு புதிய 4 பஸ்கள் வழங்கப்படவுள்ளதாக டிப்போ முகாமையாளர் எஸ். ஜீவானந்தன் புதன்கிழமை தெரிவித்தார்.
நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்து சபையின் வடமாகாண டிப்போக்களுக்கு வழங்கப்படும் 32 புதிய பஸ்களிலேயே, 4 பஸ்கள் கிளிநொச்சிக்கு வழங்கப்படும். இதன்மூலம் சேவைகளை விஸ்தரிக்க முடியும் என்று அவர் கூறினார். (வ)

## விபத்தில் ஒருவர் காயம்

தென்மராட்சி, மார்ச் 6
வீதி விபத்தில் சிக்கி குடும்பஸ்தர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு வரணியில் இடம்பெற்றது.
வரணி வடக்கு, கலுக்காலைச் சேர்ந்த விக்னேஸ்வரன் ரவீந்திரன் (வயது-28) என்பவரே காயமடைந்தவராவார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடாநாட்டில் தற்போது கடும் வெப்பமான காலநிலை நிலவுகிறது. அதை யடுத்து இளநீர் வியாபாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. யாழ்.நகரில் தென்னி லங்கை வியாபாரிகள் இளநீர் விற்பனையில் ஈடுபட்டுள்ளனர்.

## மோடியின் மன்னார் பயணம் குறித்து ஆராய்வு

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 14 ஆம் திகதி மன்னாருக்கு செல்லவுள்ளார்.

அதுதொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் மன்னார் ஆகாஸ் விடுதியில் நடைபெற்றுள்ளது.

வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் மற்றும் இந்தியத் துணைத் தூதரக அரசியல் பிரதிநிதி எஸ்.டி.மூர்த்தி ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

இந்தியப் பிரதமர் வருகையின்போது இந்திய வீட்டுத் திட்டம், மீனவர் பிரச்சினை தொடர்பில் விசேட மனு கையளிக்கப்படவுள்ளது என்றும் தெரியவருகின்றது.

அத்துடன் மோடிக்கான வரவேற்பு ஏற்பாடுகள் குறித்தும் பேசப்பட்டுள்ளது.(ற)

## மின்னல் தாக்கியதில் இளைஞர் சாவு

வவுனியா, மார்ச் 6

வவுனியா மடுக்கந்தைப் பிரதேசத்தில் மின்னல் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

வயல் ஒன்றில் வேலை செய்து விட்டு மண்வெட்டியுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தவரை மின்னல் தாக்கியுள்ளது. 19 வயதுடைய ஹமித சிரந்த என்பவரே உயிரிழந்தவராவார். (ற)

## ஆன்மிக சொற்பொழிவு

தென்மராட்சி, மார்ச் 6

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று இரவு 7 மணிக்கு தென்மராட்சி இலக்கிய அணியின் செயலாளர் அ.வாசுதேவா 'இல்வாழ்க்கை' என்னும் தலைப்பில் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார் என ஆலய தர்மகத்தா அறிவித்துள்ளார். (வ-9)

## பனம்பொருள் உற்பத்தியாளருக்கு உதவிகள்

கிளிநொச்சி, மார்ச் 6

கிளிநொச்சி மாவட்டத்தில் பனம் பொருள் உற்பத்தி செய்யும் 146 பேருக்கு தலா 20 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்ட பனை அபிவிருத்திச் சபையில் வைத்து நேற்றுமுன்தினம் அவை வழங்கப்பட்டன. துவிச்சக்கர வண்டிகள், பாத்திரங்கள், கொள்கலன்கள் ஆகிய உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பதநீர் தயாரித்தல், புழுக்கொடியல் தயாரித்தல், பனங்களி உற்பத்தி மற்றும் கைப்பணி பொருள்களின் உற்பத்தி என்பவற்றை மேம்படுத்தும் வகையில் பனை அபிவிருத்திச் சபையின் நிதியுதவியுடன் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (ற)

## வீதிப் புனரமைப்பு பணிகள் விரைவில்

வலி.தென்மேற்கு, மார்ச் 6

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் தேசிய வலுவூட்டல் வேலைத் திட்டத்தின் கீழ் 20 லட்சம் ரூபா செலவில் இரு வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

வருமானம் குறைந்த பிரதேச சபைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கடந்த அரசால் தேசிய வலுவூட்டல் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்துக்கு மாதாந்தம் ஒரு மில்லியன் ரூபா பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டு வந்தது.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் கீழுள்ள 450 மீற்றர் நீளமான சென்.அன்ரனீஸ் பாடசாலை பின்புற வீதியும் கொட்டிக்குள இணைப்பு வீதியுமே புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. அதற்கான நிதி உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-115)

# மணல்காட்டில் மணல் அகழ்வை நிறுத்துங்கள்

### கிராம மக்கள் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலரிடம் கோரிக்கை

வடமராட்சி, மார்ச் 6

மணல்காடு கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மணல் அகழ்வை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

''30 ஆண்டுகளுக்கு மேலாக எமது கிராம மக்களின் அனுமதி இல்லாது - கிராம மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொள்ளாது மணல் அகழ்வு நடந்தது. அதிகளவு மணல் அகழ்வால 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலையின்போது கடல் நீர் கிராமத்துக்குள் புகுந்து 72 உயிர்களைக் காவுகொண்டது.''- என்று அவர் கிராம மக்கள் தெரிவித்தனர்.

''எமது கிராமத்தில் மீண்டும் மணல் அகழ்வு நடக்கின்றது. மணல் அகழ்வு தொடர்ந்து நடைபெற்றால் எமது வீடுகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்படுவதுடன்,



கடல்நீராலும் மூழ்கும் அபாயம் ஏற்படும். நன்னீரும் உவர் நீராக மாறிவிடும். எமது மேய்ச்சல் நிலத்தின் தன்மையும் மாறிவிடும்.இவற்றைக் கருத்தில் கொண்டு மணல் அகழ்வை உடன் நிறுத்த ஆவன செய்ய வேண்டும்.''- என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ற-173)

# கூ.சங்கத்தில் பணியாற்றப் பின்னடிப்பு; மானிப்பாயில் கிளைகள் மூடிய நிலையில்

வலி.தென்மேற்கு, மார்ச் 6

கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றுவதற்கு எவரும் முன்வருகிறார்கள் இல்லை. அதனால் மானிப்பாய் பலநோக்குச் கூட்டுறவுச் சங்கத்தின் கீழுள்ள சில கிளைகளைத் திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்துக் கவலை வெளியிட்ட இயக்குநர் சபை உறுப்பினர் ஒருவர், ''தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப வேதனம் வழங்க முடியாதுள்ளமையே இந்தற்குக் காரணம்''- என்றார்.

ஆரம்பத்தில் 28 கிளைகளுடன் இயங்கி வந்த மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நட்டமடைந்தமை, அசாதாரண சூழ்நிலைகள், வியாபார மந்தம் எனபவற்றால் பல கிளைகளை மூட வேண்டி ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பணியாளர்கள் ஓய்வுநிலை வருமுன்பே சங்கத்தில் இருந்து விலகிவிட்டனர். அதனால் சில கிளைகளை மூட வேண்டி ஏற்பட்டது. அவற்றை மீளத் திறப்பதற்கு சங்கம் முயற்சித்த போதும் எவரும் பணியில் இணைந்து கொள்ள முன்வரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.(ற-173)

**வழங்கப்படும் வேதனம் தற்போதைய வாழ்க்கைச் செலவுகளுக்குப் போதாது என்று தெரிவித்தே பணியில் எவரும் இணைகிறார்கள் இல்லை என்று கூறப்படுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, மார்ச் 6

காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்களால் இன்று கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டமும், அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டமும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கந்தசாமி கோயிலுக்கு அருகே முற்பகல் 9.30 மணிக்கு போராட்டம் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கவனவீர்ப்புப் போராட்டமும், உணவு தவிர்ப்புப் போராட்டமும்



நடைபெறும். முடிவில் காணாமற்போகச் செய்யப்பட்டவர்களை மீட்டுத் தருமாறு கோரும் கோரிக்கை அடங்கிய மனு, ஜனாதிபதிக்கும், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கும், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கும், வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் கையளிக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் அனைத்துத் தமிழ்பேசும் உறவுகளும் கலந்து கொண்டு போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும் என்று காணாமற்போனோரின் உறவினர்களின் கிளிநொச்சி மாவட்ட சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

## கொக்குவில் இந்து கலையரங்கம் தீயிட்டு எரிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் கலையரங்குக்கு இனந்தெரியாதோர் தீ வைத்துக் கொளுத்தியுள்ளனர். அங்கிருந்த விளையாட்டு உபகரணங்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

தீப்பிடித்த விடயம் தொடர்பில் யாழ். மாநகர சபை தீயணைப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு சென்ற அவர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

எனினும் தீயை அணைப்பதற்கு முன்னரே கலையரங்கின் உள்ளே வைக்கப்பட்டிருந்த, உயரம் பாய்தலுக்குப் பயன்படும் மெத்தைகள் - 3 உள்ளிட்ட பல பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் எரிந்து நாசமாகியுள்ளன என்று பாடசாலைத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

கட்டடமும் எரிந்து பூச்சுகள் வெடித்துக் கீழே வீழ்ந்துள்ளன. கூரைக்குப் போடப்பட்டிருந்த தகரங்கள் எரிந்துள்ளதோடு வெடித்தும், திசைமாறியும் போய்க் காணப்படுகின்றன. மின் இணைப்புக்கள் முழுமையாக எரிந்துள்ளன. கலையரங்கின் உள்புறம் புகையடிக்கப்பட்டு சுவரிலும் அவை நன்றாகப் பதிந்துள்ளன.

உள்ளிருந்து புகை வெளியேறிய போதே தீப்பிடித்த விடயம் தெரியவந்தது. உடனடியாகத் தீயணைப்புப் படையினருக்கு அறிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பாடசாலையைப் பூட்டிவிட்டுச் சென்ற பின்னர் நேற்றுக் காலை பாடசாலையைத் திறந்தபோது கலையரங்குப் பக்கத்தில் இருந்து புகை கிளம்பியவாறு இருந்தது. அதையடுத்து அங்கு சென்று பார்த்தபோது தீ வைக்கப்பட்டிருந்தது. அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் சேதமாகியுள்ளன. கடந்த ஒரு கிழமைக்கு முன்னர் ஒழுக்கச் சீர்கேடு காரணமாக உயர்தர வகுப்பு மாணவர்கள் மூவர் பாடசாலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவத்தின் பின்னணியில் அவர்கள் இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றோம்- என்று பாடசாலை அதிபர் யாழ். பொலிஸ் நிலை குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரிடம் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ற-106)

## குளம் புனரமைப்பு

மன்னார், மார்ச் 6

மன்னார், மாந்தை மேற்கு பெரியமடுக்குளம் வட மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட 2 மில்லியன் ரூபா நிதியில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது என்று மாந்தை மேற்குப் பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விவசாய கிராமமான பெரியமடுப் பகுதியில் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் விவசாய செய்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அவர்கள் பெரியமடுக்குளத்தையே தமது விவசாய நடவடிக்கைகளுக்கு நம்பியுள்ளனர்.

இந்நிலையில் தற்போது அந்தக் குளம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால், கழிவு வாய்க்கால் என்பன புனரமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் கடந்த 30 வருடங்களாக செய்கை பண்ணப்படாமல் இருந்த 150 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடிந்துள்ளது என்று கூறப்படுகின்றது. (ற)

## முதலமைச்சர் வருகையால் விசேட பாதுகாப்பு ஏற்பாடு



யாழ்ப்பாணம், மார்ச் 6

கிளிநொச்சி தமிழ்ச்சங்கத்தால் நடத்தப்பட்ட மாபெரும் தமிழ் விழாவில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் கலந்துகொள்ள இருந்தமையால் என்றும் இல்லாதவாறு நேற்று கிளிநொச்சி பொலிஸார் விசேட பாதுகாப்பை ஏற்படுத்தியிருந்தனர்.

கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் தமிழ் விழா கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதன் மாலை அமர்வில் வடக்கு மாகாணசபை முதலமைச்சர் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். மத்திய அமைச்சர்கள் வடக்குக்கு வரும் போது அவர்களுக்கான பாதுகாப்பு எப்படி இருக்குமோ அதுபோன்ற விசேட பாதுகாப்பு ஏற்படுகளை கிளிநொச் சிப் பொலிஸார் வடக்கு முதல்வ ருக்காக மேற்கொண்டனர்.

மோப்ப நாய்களை கொண்டு முதல்வர் கலந்து கொள்ள உள்ள மண்டபம் சல்லடையிட்டு தேடப்பட்டது, அத்தோடு கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அங்கு வந்திருந்தார். பாதுகாப்புக்காக கிளிநொச்சி பொலிஸ் பிரிவை சேர்ந்த பல பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அங்கு நின்ற பொது மக்களில் சிலர் ஆட்சி மாறியதால் மெல்ல மெல்ல காட்சிகளும் மாற்றம் பெற ஆரம்பித்து விட்டதாக பேசிக்கொண்டனர்.

இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும் முதலமைச்சர் எந்த வித பாதுகாப்பும் இன்றி அவருக்குவழங்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் எளிமையாகவே மண்டபத்துக்கு வந்தார். (ற-21)

## கூடிய விலையில் விற்பனை வர்த்தகர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனை செய்யும், பொருள்களின் விலைகளை அதிகரித்து விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அவ்வாறு செயற்பட்ட ஆறு வர்த்தகர்கள் கடந்த திங்கட்கிழமை யாழ்.நீதிவான் நீதிமன்றில் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டனர்.

திகதி காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமைக்காக யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சிறப்பு அங்காடி ஒன்றுக்கு ரூபா ஒரு லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. அதே வேளை சீனியை கூடிய விற்பனைக்கு விற்பனை செய்த வர்த்தகர் ஒருவருக்கு ரூபா பத்தாயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. பாவனைக்கு ஒவ்வாத சீனி மூடைகளை விற்பனை செய்த வர்த்தகர் ஒருவருக்கு ரூபா பத்தாயிரம் தண்டம் விதிக்கப்பட்டதுடன், 33 சீனி மூடைகளையும் தீயிடுமாறு நீதிவான் பொ.சிவகுமார் கட்டளையிட்டார். (ற-103)

## வலி.தென்மேற்கு பிரதேசத்தின் அபிவிருத்திக்கு நிதிகோரி மனு

### அமைச்சர் கரு ஜயசூரியவிடம் கையளித்தார் வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 6

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தின் (மானிப்பாய்) அபிவிருத்திக்காக நிதி மற்றும் வாகனம் என்பற்றை வழங்குமாறு வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் உள் ளூராட்சி அமைச்சர் கரு ஜெயசூரியாவிடம் மனுக் கையளித்துள்ளார்.

"மானிப்பாய் பிரதேசமானது மாதகல், பண்டத்தரிப்பு, மானிப்பாய், ஆனைக்கோட்டை ஆகிய பிரதேசங்களைக் கொண்ட பரந்த பிரதேசமாகும். கடந்த 30 ஆண்டு காலப் போரால் இந்தப் பிரதேசம் மீள் எழுச்சி பெற முடியாத நிலையில் உள்ளது.'' - என்று அவர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாதகல் உப அலுவலகப் புனரமைப்பு, மானிப்பாய் ஆயுள்வேத வைத்தியசாலை புனரமைப்பு, டபிள்கப் பிக்கப் வாகனம், மலக்கழிவு அகற்றும் கலி எம்ரியர் வாகனம், கொம் பக்ரர் வாகனம், மானிப்பாய் சந்தை புனரமைப்பு, வலி.தென்மமேற்குப் பிரதேச சபை வீதிகள் புனரமைப்பு, கால்வாய், மதகு, பொது நோக்கு மண்டபம், மயானம், கலாசார மண்டபம் போன்றவற்றின் புனரமைப்பு என்வற்றுக்கான ஆயிரம் மில்லியன் ரூபா திட்டம் ஒன்றையும் மனுவுடன் அவர் கையளித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவான நிலையில் சென்.ஜோன்ஸ்

## பிளெமின் அபார சதம்



யாழ்ப்பாணம், மார்ச் 6
பிளெமினின் சதமும் கபில்ராஜின் நிதானமும் கைகொடுக்க முதல் இன்னிங்ஸிற்காக முதல் நாளிலேயே 300 ஓட்டங்களை குவித்து வலுவான நிலையில் சென். ஜோன்ஸ் கல்லூரி.

மிகப் பழைமையான வரலாற்றைக்கொண்ட 'வடக்கின் போர்' என்று வர்ணிக்கப்படும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான 3 நாள்களைக் கொண்ட டெஸ்ட் ஆட்டம் தொடர்ந்து 109 ஆண்டாக நேற்றைய தினம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று



முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது சென்.ஜோன்ஸ் கல்லூரி. 16 ஓட்டங்களிலேயே முதல் இலக்கு சரிக்கப்பட்டு நெருக்கடி



அதிகரிக்க சற்று நிதானிக்க ஆரம்பித்தது. ஒருமுனையில் கபில்ராஜ் மறுமுனையில் ஜெனி பிளெமின். தருணத்துக்கு ஏற்ப ஆமை வேகத்தில் ஓட்டங்கள் சென்று பின்னர் அதிகரிக்கவும் செய்தது. இரண்டாவது இலக்கினை மத்தியால் சரிக்க முடியவில்லை. இணைப்பாட்டம் 100 இனைக் கடந் தது. தலைமை

இன்னிங்ஸ் அரைச் சதம் கண்டது. மேற்கொண்டு நிலைக்க முடிய வில்லை. 117 ஓட்டங்களில் இரண்டாவது இலக்கு. நீண்ட நேரத்துக்குப் பின்னர் மத்தியின் குரல் ஓங்கி ஒலித்தது. கபில்ராஜின் இடத்தை பக்காவாக நிரப்பினார் கானா மிர்தன். மறுமுனையில் சதத்தை நோக்கி சென்றுகொண்டிருந்தார் ஜெனி பிளெமின். மீண்டும் ஒரு வலுவான இணைப்பாட்டம் அரங்கேறி அணியை மேலும் வலுவாக்கியது. எதுவித பதட்டமும் இல்லாமல் சாதாரண மாக சதம் கண்டார் ஜெனி. கடுப்பேற்றும் வில்லாமல் நடந்தன. சுப்பராக இல்லாவிட்டாலும் சொல்லக் கூடிய ஓட்டங்களுடன் கானா மிர்தன் விடைபெற்றார். சிறிது நேரத்திலேயே 'ரன் அவுட்' முறையில் பிளெமினின் இன்னிங்ஸும் முடிவுக்கு வந்தது. சென். ஜோன்ஸ் 233 ஓட்டங்களுக்கு 4 இலக்குகள். பின் வரிசை வீரர்கள் பெரிதள வில் நிலைக்காமல் பவிலி யனை நோக்கி படையெடுக்க 7 இலக்கு இழப்பிற்கு 300 ஓட்டங்கள். ஆட்டத்தின் முதல் நாள் முடிவுக்கு



வர இன்னும் இருப்பது முப்பது நிமிடங்கள் மட்டுமே. போதும் என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதற்கு அழைத்தார் அணித் தலைவர் கபில்.

மந்தமான வெளிச்சத்தில் சென். ஜோன்ஸ் வியூகத்துக்கு அமைய களமிறங்கியது மத்திய கல்லூரி. நேரத்தை உணர்ந்து நிதான ஆட்டம். ஆட்டநேர முடிவில் மத்திய கல்லூரி இலக்குகள் இழப்பின்றி 9 ஓட்டங்கள். ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும்.

(த-ரி,23)

அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான
வினைத்திறன் காண் தடைப்பரீட்சை
துரித மீட்டல் மற்றும் வழிகாட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம்: 06.03.2015
சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் ஒரு மணிமுதல்
4 மணிவரை வகுப்புக்கள் நடைபெறும்.
புதிய உயர்கல்லூரி
021 222 8148 ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

NEW SCIENCE HALL
JAFFNA
2017 A/L
MECHANICS
By
MR. N. கபிலன்
SAT & SUN
11.30- 1.30
ஆரம்பம்
07.03.2015
SATURDAY-11.30

After O/L's A/L's...
it's time to rev-up..!
Start CIMA Certificate Level
@ Wisdom - Jaffna
WISDOM
BUSINESS ACADEMY



FasTrack your future
with the new generation professional business qualification
Certificate Level → Operational Level → Management Level → Strategic Level
New part time batch starts on
7th March 2015 (Saturday)
at 8.00 am.
Complete CIMA within 2years @ Wisdom
The largest CIMA business school in Sri Lanka. Your CIMA success is guaranteed
CIMA
Chartered Institute of Management Accountants
WISDOM JAFFNA
THE PLACE FOR CIMA
CIMA Certificate Level
Operational Level
Management Level
Strategic Level
AUTHORISED EXAM CENTRE UK
BANK LOAN FACILITIES AVAILABLE
25% OFF IN COURSE FEE FOR A/L 3A s
Wisdom Business Academy
The Specialist in CIMA Education
154A/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
E : info@wisdombusiness.com
021 2 220 727
021 7 200 777

தேவை
காட்சியறை ஒன்றுக்கு வீடு அல்லது கட்டடம் தேவை. (யாழ். நகரை அண்டிய பகுதிகளில்)
T.P: 077 180 7672

ஜேர்மன் மொழி
ஜேர்மன் செல்வோர் Goethe Institute இன் A1 பரீட்சை சித்தியடைய வேண்டும். Goethe Institute அங்கீகாரமளித்த யாழ்ப்பாணத்தின் ஒரேயொரு தொழில் தகைமைபெற்ற ஆசிரியரிடம் கற்று உண்மையான சான்றிதழைப் பெற்றிட
077 132 7818
BCLL
021 300 3889
YMCA கடைத்தொகுதி 2ஆம் மாடி A9வீதி, யாழ்
(சிறுவர் பூங்கா முன்)

போட்டிப் பரீட்சை
விசேட வகுப்புக்கள்
வடக்கு மாகாண
முகாமைத்துவ உதவியாளர்
வருமான பரிசோதகர்
புதிய பிரிவு
சனி 10.00- 3.00 மணி
ஏனைய பரீட்சைகள் மற்றும்
வினைத்திறன் பரீட்சைகளுக்கான
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
T.P: 0766883394
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். நகர்)

வீடு வாடகைக்குத் தேவை
யாழ். பஸ்நிலையத்தில் இருந்து 5km இற்கு உட்பட்ட பகுதியில் 04 அல்லது 05 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு: 071 6361361



ஸ்ரீஸ்ரீ கல்கி பகவான் ஜென்ம தின நிகழ்வு
பாற்குடபவனி / நேரடி WEB CAST தரிசனம் / பாதுகா அபிஷேகம்
07.03.2015 சனிக்கிழமை - காலை 8.30 மணி
இடம்: நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம்
அன்னதானம் நடைபெறும்
பாற்குட பவனியானது காலை 7.00 மணிக்கு
இல.5 பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பமாகும்
ஸ்ரீ அம்ம பகவான் சுவர்ணயுக ஆலயம், இல.05, பிறவுண் வீதி, இரண்டாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
தொடர்பு: 0777737926 (எடிசன் அக்கடமி - யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.